
# தமிழரசு

திங்கள் இருமுறை டிச. 1-1970




SANKAR
I C
CEMENT
மலிவு விலை
நகர்ப்புற வீடு
உறுதியானது, நிலையானது ஆனாலும் மலிவானது
சங்கர் சிமெண்ட்
பாறை போன்று உறுதி நிலைத்திருக்கக் கூடியது
ISI மார்க்குடன் உத்தரவாதம் உள்ளது
IS 269
ISI
சிமெண்ட்ஸ் லிமிடெட், தன் பில்டிங், சென்னை-2
ண்டுகள் நிலைத்து — இன்னும் வளர்ந்துகொண்டே போகிறது!
லோசனைக்கு: சிமெண்ட் சர்வீஸ் பீரோ, 'குரோவ்', சென்னை-18
FDSIC-1444TM



# தமிழரசு

மலர் 1 1970 டிசம்பர் 1 இதழ் 11


## இந்த இதழில்

கல்விச் சிந்தனைகள்
விருந்தோம்பல் ஒரு கலை
வஞ்சியர்க்கு வாழ்வளிக்கும் பஞ்சுத் தொழில்
கிருஷ்ணகிரி அணை
மிளகாயோ மிளகாய்
பழமா பணமா
கவின்மிகு கலைக்கூடம்
கிராமியக் கலைகள்
கற்பகத்தைத் தேடி
ஆயிரம் காலத்துப் பயிர்
திரைகடலோடியும் தீந்தமிழ் தேடு
மலிவான விலையில் வலிவான பொருள்கள்
செத்த காலேஜ்
வெண்பாப் போட்டி
நன்மைகள் ஆயிரம் ஆயிரம்

முதல்வர் எழுதும்

இனியவை இருப

*அட்டையில் :*
தமிழகத்து கிராமியக்கலையான
கரக ஆட்டக்காரர்கள்
கலைமணி-சகுந்தலா


யாருடி.. ஹிப்பியா?
ஹிப்பியுமில்லே ஜிப்பியுமில்லே! நம்ம பப்பியோட அண்ணன் கோபி!
சே! வெளியே தலைகாட்ட முடியலே! முதல்லே இந்தத் தாடியை எடுத்துத் தொலைக்கிறேன்!
தாடியை எடுத்துப் பயனில்லை! முதலில் ஒரு வேலையைத் தேடிப்பிடி!
யாரு தருவா எனக்கு வேலை?
ஏண்டா! சிறு தொழில் துவங்க தமிழக அரசு உதவி செய்யுதாமே! அதற்கு முயற்சி செய்யேன்!
??



....அரசின் நிதி உதவியால் துவங்கிய தொழிற்கூடமிது! வேலை தேடி அலைந்த நான் பலருக்கு வேலை தரும் இத்தொழிலைத் துவங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன். அரசு இதற்காக 2000 ரூபாய் முதல் 2 லட்சம் வரை கடன் தருகிறது....
வேலைக்கு ஆள் தேவைன்னு கேள்விப் பட்டோம்...
ஓ! பப்பிகூட சொன்னு! டேய்! பையா...! இவங்களை ஸ்குரு தயாரிக்கிற பிரிவுக்குக் கூட்டிப் போ!
பப்பியா...? ஆமா நீங்க....!
தாடியை எடுத்ததும் தெரியவில்லையா? நான்தான் நீங்கள் கிண்டல் செய்த ஹிப்பி..! பப்பியின் அண்ணன்.
கோ...



# இனியவை இருபது

## 9. மாஜினி - கரிபால்டி

எட்ரூஸ்கரின் படையெடுப்பு முதல் எதேச்சாதிகாரி முசோலினியின் ஆதிக்கம் வரை விந்தை மிகு நெடுங்கதையாய்த் தொடர்கின்ற ரோமாபுரியின்வரலாற்றுக் காவியத்தின் வண்ண ஏடுகள் என் அகக்கண் முன்னால் விரிந்தன.

ரோம் நகரமெங்கும், இன்றும், இடிந்த நிலையிலும், எடுப்பாக விளங்குகின்ற நெடிதுயர்ந்த வரலாற்றுச் சின்னங்கள் என் புறக் கண்ணில் தெரிந்தன.

இவை இரண்டையும் இணைத் துப்பார்த்தேன். என் நெஞ்சகத்தில் வியப்பு அலைகள் விம்மிப் புரண்டன.

சீசரின் எழுச்சி, அகஸ்டசின் ஆட்சி, அந்தோணியின் மயக்கம், கிளியோபாத்ராவின் சாகசம், காலிகூலாவின் அட்டகாசம், நீரோவின் வெறியாட்டம், அக்ரிபானுவின் ஆபாசங்கள், அரிலீயசின் அருள்நெறி, ஏஞ்சலோவின் கலைத்திறன் . . . என்று ரோமாபுரியின் வியத்தகு வரலாறு வளர்ந்து கொண்டே போகிறது, சுவைமிக்கதோர் புதினத்தைப் போல!

ஆச்சரியமும், ஆனந்தமும், அச்சமும், நிம்மதியும்,

அருவருப்பும், ஆவேசமும், அவலமும், எக்களிப்பும்,

நமக்குமாறி மாறி வருகின்றன ரோமா புரியின் வரலாற்றைப் பார்க்கும் போது.

மனித உணர்வுகளுக்குள்ளே தான் எத்தனை வேறுபாடுகள்!

அந்த வேறுபாடுகள்தான் எத்தனை மகத்தானவை!

அகஸ்டஸ் மரபிலா நீரோ தோன்றினான்?

ஆக்டேவியா பிறந்த மண்ணிலா அக்ரிபானு பிறந்தாள்?

நம்ப முடியவில்லை நம்மால்!

ஆனால் முற்றிலும் வேறுபட்ட உணர்வுகளைக் கொண்ட மகத்தான மனிதர்களின் வாழ்க்கைத் தொகுப்பாகவே ரோமாபுரியின் வரலாறு விளங்குகிறது.

காலத்தினால் பாதிக்கப்பட்ட சரித்திரச் சின்னங்கள் சிலவற்றை ரோமின் சில பகுதிகளில் காணும் பொழுது இதற்குக் காரணம் ரோமானியர்களின் இன உணர்வின் வீழ்ச்சி அல்லவா என்று எண்ணத் தோன்றிற்று எனக்கு!

ஆம்! ரோமானியர்களின் இன உணர்வு ஓங்கி நின்ற பொழுது அது உலகை ஆண்டது. அந்த எழுச்சி தாழ்ந்து ஒழிந்தபொழுது ரோம், சிற்றரசுகளின் முன்னால் தலைவணங்கி நின்றது.

கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் ஒடேசர் என்பவனால் விரட்டப் பட்ட ரோமுலஸ் என்ற ரோமானிய மன்னனின் இறுதி ஆட்சிக் குப்பிறகு இத்தாலி சிதறுண்டது. சிறுசிறு பிரிவுகளாகி எதிரிகளுக்கு இரையாயிற்று.

பதினைந்தாம் நூற்றாண்டில் இத்தாலியை மீண்டும் இணைத்துத் தரணியை ஆளவைக்க வேண்டும் என்ற சாம்ராஜ்யக் கனவு கண்டான் மாக்கியவல்லி என்ற அரசியல் சிந்தனையாளன். ''கருமம் தான் எனக்குக் கண். கருவிகளைப் பற்றியோ, கருமத்தை அடைய அவற்றைப் பயன்படுத்தும் முறைகளைப் பற்றியோ எனக்குக் கவலையில்லை'' என்றவன் அவன். இத்தாலிய அரசர்களுக்குப் பேரரசு மோகம் ஊட்ட முயன்ற மாக்கியவல்லி அறத்திற்குப் புறம்பான வழிகளிலும் அரசியல் நடத்துவதை ஏற்றவன். '' நயவஞ்சகனாக இருந்து கொண்டே, நண்பன் போல நடிக்க வேண்டும். ஒரு அரசனின் நடிப்பாற்றலைப்பொறுத்துத்தான் ஆட்சியில் அவன் குவிக்கின்ற வெற்றிகள் அமையும்'' என்று 'பாடம்' சொல்லிக் கொடுத்தான் அவன் எழுதிய ''இளவரசன்'' (The Prince) என்ற நூலின் மூலம். அவனுடைய மொழிகளைக் காணும்பொழுது ''ரூஸ்ஸோ'' போன்ற அரசியல் நேர்வழிச் சிந்தனையாளர்களின் பாதையில் பயிலுவோருக்கு மனப் பதைப்பு ஏற்

படும். மறைந்த பிரதமர் நேரு, மாக்கியவல்லியைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது, ''அவனுடைய வாதங்கள் ஏற்க முடியாதவை தான் என்றாலும், இன்றுள்ள வல்லரசுகள் அவனுடைய சித்தாந்தங்களையே மறைமுகமாகப் பின்பற்றி வருகின்றன'' என்று எழுதியதை 1953-ல் திருச்சிச் சிறைச்சாலையில் நான் படித்தது என் நினைவுக்கு வந்தது. மாக்கியவல்லியின் தத்துவங்களை எவர் ஏற்றாலும் சரி, நாம் அதனை ஏற்பதற்கில்லை; ''அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்'' என்பதை நாம் அறிந்தவர்களாதலால்!

சிதறுண்ட இத்தாலியை மீண்டும் இணைத்திட வேண்டும் என்ற இன்பக் கனவு இருவர் இதயங்களில் மீண்டும் தோன்றியது—பத்தொன்பதாம் நூற்றாண்டிலே!

அவர்களில் ஒருவன் மாஜினி. மற்றவன் மாவீரன் கரிபால்டி.

மாஜினி எழுத்துவேந்தன். தன் எழுத்தின் வேகத்தால் இத்தாலி எங்கும் எழுச்சியை ஊட்டியவன். அந்த எழுச்சிக்குச் செயல் வண்ணம் சேர்த்து வெற்றியை ஈட்டியவன் கரிபால்டி.

மாஜினி தேசீயக் கனலை மூட்டினான். அந்தக் கனலை நாடெங்கும் பரப்பி எதிரிகளை அதில் எரி சருகாக்கினான் கரிபால்டி.

இவர்கள் இருவரும் இத்தாலியின் இரு கண்கள். இத்தாலியின் இதயம் மாஜினி என்றால், அதன் ஆற்றல் மிகு கரமாக கரிபால்டி இருந்தான்.

ஆஸ்திரியரின் ஆதிக்கம் ஒரு பக்கம்!

அவர்களுக்கு அடிமையாகநாட்டின் ஒரு பகுதியை ஆண்ட பீட்மாண்டு என்ற இத்தாலிய அரச வம்சத்தினரின்ஆட்சி ஒருபக்கம்!

போப் மதகுருவின் ஆணையின் கீழ்க் கட்டுண்டு கிடந்த பகுதிகள் ஒரு பக்கம்!

நேப்பில்ஸ் மன்னரின் அடக்கு முறையில் அவதியுற்ற மக்கள் ஒரு பக்கம்!

என இத்தாலி நான்கு கூறுகளாகப் பிரிந்து, நலிந்து வாழ்ந்த காலம் அது. 'விடுதலை தவறிக் கெட்ட' தாயகத்திற்கு வீர சுதந்திர உணர்ச்சி ஊட்டி இத்தாலியை இணைத்து வாழ வைத்திட வேண்டும் என்ற எண்ணம் அந்த இரண்டு விடுதலை வீரர்களுக்கும் இளமையிலேயே எழுந்தது.

பத்து வயதிலேயே அரசியல் பக்குவம் பெற்ற மாஜினி, இருபத்தைந்தாவது வயதில், ஆட்சியாளரின் அடக்குமுறைப் பார்வைக்கு இலக்கானான்.

வழக்கறிஞர் பட்டம் பெற்ற பின்னும் தொழிலைத் துறந்து, மக்களின் விடுதலை வழக்கிற்காகப் புரட்சி என்னும் நீதி மன்றத்தில் நின்று வழக்காடிக் கொண்டிருந்த அவன் ஸாவோனா சிறைச்சாலையில் அடைக்கப்பட்டான். சிறைச்சாலை மாஜினிக்கு ஓர் சிந்தனைச் சோலை ஆயிற்று. ''மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை''யாகக் காராக்கிரகத்தைக் கருதினான்.

எதிர்காலத்தைப் பற்றிய எண்ணங்களும், திட்டங்களும் சிறையில் இருந்தபொழுதுதான் அவன் நெஞ்சத் திரையில் எழுந்தன. இளைஞர்கள் இந்த நாட்டின் இரத்த நாளங்கள். ஆர்வமும் துடிப்பும் மிக்க இளையோர்களால் தான் அதிசயங்களை உருவாக்கிட முடியும் என்ற முடிவுக்கு வந்த மாஜினி ''இளைய இத்தாலி'' (Young Italy) என்ற விடுதலைச் சங்கத்தை நிறுவிட வேட்கை கொண்டான். நாற்பது வயதுக்கு மேற்பட்டோர் அதில்உறுப்பினராவதைத் தடுத்திடவேண்டும் என்றும் தீர்மானித்தான். அன்னை பூமியின் விடுதலைக்காக அன்னியரின் உதவியினை நாடுவதை அவன் விரும்பவில்லை. ''ஒரு நாட்டின் விடுதலைக்கான விதை அந்த நாட்டு மக்களின் கரங்களாலேயே ஊன்றப் படவேண்டும். அவர்களின் பச்சை இரத்தமே, அதற்குப் பாசன நீராகப் பாய்ச்சப்படவேண்டும். அவர்களின் வீரமே விளையும் பயிருக்கு வேலியாக வேண்டும்'' என்பது அவன் கோட்பாடு.

''அத்தகையவிடுதலைப் போரில் தான் உண்மையான வெற்றி கிடைக்கும்'' என்று உறுதியாக நம்பியவன் மாஜினி. ''எந்த இனத்திற்கு உரிமைக்காகப் போராடும் உணர்வும் சக்தியும் இல்லையோ, அந்த இனத்திற்கு உரிமை வாழ்வு வாழ்கின்ற தகுதியும் இல்லை'' என்று ஆணித்தரமாகக் கூறினான்.

சிந்தனைகளோடும், சீரிய திட்டங்களோடும் சிறையினை விட்டு வெளியே வந்த மாஜினியை நாடு கடத்தியது அரசாங்கம்.

பிரஞ்சு நாட்டின் மடியில், மார்சேல்ஸில், தஞ்சம் புகுந்தான் மாஜினி. விடுதலை எனும் யாழை மீட்டிச் ''சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்'' என்னும் இனிய நாதங்களை எழுப்பிய பிரஞ்சு நாட்டில் தாயகத்தைக் காக்கின்ற பாசறை அமையலாயிற்று. மாஜினியின் அச்சுக்கூடம் தான் அந்தப் பாசறை. தன் எழுத்துக்களால் இத்தாலி மக்களுக்கு இன எழுச்சியைத் தொடர்ந்து ஊட்டி வந்தான். ஒரு மாவீரனின் வாளின் வலிமையை விட ஓர் அறிஞனின் பேனா முனைக்கு அதிக வலிவு உண்டு என்பதனை நிரூபித்துக் காட்டினான்.

இத்தாலியிலிருந்து ஏற்கனவே துரத்தப்பட்ட விடுதலை விரும்பிகளுடன் மார்சேல்ஸில் சேர்ந்து மாஜினி புரட்சித் திட்டங்களை வகுத்தான். அவ்வாறு துரத்தப்பட்டவர்களில் ஒருவனை கரிபால்டி மாஜினியைச் சந்தித்ததும் இங்குதான்.

''நாடெல்லாம் உரிமை வேட்கையை மறந்து உறங்கியபொழுதும், தான் உறங்காத உத்தமன். விடுதலை என்னும் வேள்வித்தீயை அணையாது காத்துவந்த பெருமகன்'' என்று கரிபால்டி, மாஜினியைப் பாராட்டினான்.

''இளைய இத்தாலி'' என்ற சங்கம் மார்சேல்ஸில் உருவாயிற்று. இரண்டே ஆண்டுகளில் அதன் உறுப்பினர் தொகை அறுபதினாயிரம் ஆயிற்று. அச்சம் மிகக் கொண்ட ஆஸ்திரிய அரசு,

‘‘இளைய இத்தாலி’’யில் அங்கத்தினராவோருக்கு மரண தண்டனை விதித்தது.

இத்தாலிய மண்ணின் ஒரு பகுதியை ஆண்டு வந்த இத்தாலிய மன்னனுக்கு இளத்தின் பெயரால் மாஜினி வேண்டுகோள் ஒன்று விடுத்தான்.

‘‘புரட்சி தோன்றும் தருணம் நெருங்கி விட்டது. தலைமை தாங்க வா!’’ என்று.

ஆஸ்திரிய ஆதிக்கத்தை எதிர்க்கத் துணிவற்ற சார்லஸ் ஆல்பர்ட் அரசனே அடக்கு முறைகளை ஏவி விட்டான். புரட்சியாளர்களைச் சிறையில் அடைத்தும் சித்திரவதை செய்தும், கொலைக்களம் அனுப்பியும் கொடுமைகள் புரிந்தான்.

மரண தண்டனை விதிக்கப்பட்ட மாஜினியும், கரிபால்டியும், பிரான்சிலிருந்து துரத்தப்பட்டனர்.

ஸ்விட்சர்லாந்து அவர்களுக்கு அடைக்கலம் தர மறுத்தது.

டுனிஷியாவிலும் தஞ்சம் கிடைக்கவில்லை.

மூன்று ஆண்டுகள் அந்த விடுதலை வீரர்கள் நாடுவிட்டு நாடு ஓடிக் கொண்டே இருந்தனர்.

ஆனால், அந்த நிலையிலும் அவர்கள் கரத்தில் ஏந்தியிருந்த சுதந்திரத் தீபம் சுடர்விட்டெரிந்து கொண்டிருந்தது.

இடையறாத இன்னல்களுக்குப் பிறகு இறுதியாக இலண்டன் சேர்ந்தான் மாஜினி. அங்கிருந்தவாறே இத்தாலிக்குத் தேசிய எழுச்சியினை ஊட்டும் தன் எழுத்துப் பணியைத் தொடர்ந்தான்.

ஓடிக் களைத்த கர்ம வீரன் கரிபால்டியோ தென் அமெரிக்கக் கடற்கரை ஓரத்தில் நடந்து கொண்டிருந்தான்.

ரியோ கிராண்ட் என்னும் இடத்தில் தங்கினான். ஆனால் அவனுடைய சுதந்திர உணர்வு ஓய்வு கொண்டிடவில்லை. பிரேசிலின் ஆதிக்கத்திலிருந்த அந்நாட்டு மக்கள் விடுதலை பெறவும், உருகுவே நாட்டு மக்கள் தங்கள் உரிமைகளைக் காத்துக் கொள்ளவும் உற்ற துணையாக இருந்தான்.

பிற நாட்டினரின் வாழ்வுக்காகப் போராடியபொழுதும், பிறந்த மண்ணின் விடுதலைக்காகவும் ஒற்றுமைக்காகவும் அவன் உள்ளம் தவித்துக் கொண்டே இருந்தது.



மாவீரன் கரிபால்டி.

தென் அமெரிக்காவில் இருந்தவாறே இத்தாலியர் சிலரைக் கொண்ட வீரர் அணி ஒன்றைத் திரட்டினான், இத்தாலியின் விடுதலைக்காக !

தாய் நாட்டின் அடிமை நிலையை உணர்த்தும் இருளாகக் கருப்பு வண்ணம்—அதனிடையே கொழுந்து விட்டெரியும் விடுதலை வேட்கையாக இவடிக்கின்ற எரிமலையின் சின்னம்—அடங்கிய புதிய கொடியொன்றினை உருவாக்கினான்.

புதிய படை !

புதிய கொடி !

மாவீரன் கரிபால்டி தன் புரட்சி வாளைத் தீட்டிக் கொண்டிருக்கிறான் மாண்டிவிடாவில் !

1848-ஆம் ஆண்டு !

ஐரோப்பாவெங்கும், எதேச்சாதிகாரத்தை எதிர்த்து மக்கள் திரண்டெழுந்த காலம் அது !

புரட்சிகள் வெடித்து மக்களாட்சி என்ற புதுமணம் பரவிய வேளை !

பொங்கி எழுந்த மக்களின் சக்தி, சர்வாதிகாரிகளைச் சரிய வைத்திட்ட ஆண்டு !

மாஜினியின் எழுத்தால், எழுச்சி பெற்றனர் இத்தாலிய மக்கள் !

‘‘இனிப் பொறுப்பதில்லை’’ என்று சூளுரைத்து எழுந்தனர்.

ஆனால் அவர்களை நெறிப்படுத்தி அழைத்துச் செல்ல நல்ல தலைவன் அங்கு இல்லை !

‘‘கரிபால்டி வருவானா ?’’ என்ற ஏக்கக் குரல் எங்கும் கேட்டது.

கரிபால்டி வந்தான் !

‘‘உலகத்துச் செம்பொன்னையெல்லாம் என் முன்னே கொட்டினாலும், என்னுடைய செஞ் சட்டை வீரர் அணிக்கு அது இணையாகுமோ ? அத்துணை மதுகை படைத்த இவர் முன்னாலே நிற்கும் நெஞ்சுரம் மாற்றாருக்கு உளதோ ?’’ என்று எக்காளமிட்ட வண்ணம் 1848-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் தாயகம் வந்தான் கரிபால்டி !

ஆம் ! பதினான்கு ஆண்டுகளுக்குப் பிறகு—

குன்றாத உரிமை உணர்வுடன்,

குன்றென அசையும் படையுடன்—பிறந்த மண்ணில் காலடி எடுத்து வைத்தான் !

எங்கணும் எழுச்சி வெள்ளம்!

ஆஸ்திரிய ஆதிக்கத்தை எதிர்த்து அனைவருமே திரண்டனர்!

சுதந்திர கீதம் விண்ணை நிறைத்தது!

கழனிகள் களங்களாயின!

ஏர்பிடித்தோரும் போர் தொடுத்தனர்!

தொழிலாளரும் தோள்களில் ஆயுதங்கள் சுமந்தனர்!

பள்ளிச் சிறுர் முதல் தள்ளாத கிழவர் வரை படைக்கலன்கள் ஏந்தினர்!

ஒரு கிழமைக்குள்ளேயே, தோற்று ஓடி ஒளிந்தது ஆஸ்திரியப்பட்டாளம்!

இலண்டனிலிருந்த மாஜினி இது கேட்டு மனம் மிக மகிழ்ந்து, தாயகம் வந்தான்.

"இந்நாடு, முடியாட்சியை உதறி மக்களாட்சியை ஏற்ற பொன்னுடு" என மொழிந்தான்.

ஆனல், மாஜினியால் பிரகடனப்படுத்தப்பட்ட குடியரசு எட்டு வாரங்களே வாழ்ந்தது!!

சிதறுண்ட ஆஸ்திரியப் படைகள் மீண்டும் சேர்ந்து வந்து தாக்கின. அவற்றிற்கு ஈடு கொடுத்துப் போராடிய கரிபால்டி புதிதாகப் பிரஞ்சு வீரர்களையும் சந்திக்க வேண்டியதாயிற்று.

பயிற்சியற்ற படைபலம்!

புதிய தெம்பினைப் பெற்றுவிட்ட எதிரிகள் எத்திசையிலும்!

இத்தாலிய நாட்டுக் குடியரசின் ஆழ்ந்து பாராளுமன்றம் சிந்தித்தது. இந்நிலையில் சரணடைவதே சாலச் சிறந்தது என்று முடிவெடுத்தது.

சரணடைவதா?



தன் எழுத்தின் வேகத்தால் இத்தாலி எங்கும் எழுச்சியை ஊட்டிய எழுத்து வேந்தன் மாஜினி.

"அந்தோ! பெருமையும் தீய வாய்ப்பும் ஒருசேரப் பெற்ற என் "அருமைத் தாயகமே!" என்று மனம் குமுறினன் மாஜினி. இடிந்த நெஞ்சமொடு, கலைந்த கனவோடு, அவன் இங்கிலாந்துக்குப் பயணமானன்.

வெகுண்டெழுந்த கரிபால்டியோ வெஸூவியஸ் எரிமலையைப் போல வெடித்துக் கொண்டிருந்தான் இத்தாலி நாட்டு வீதிகளில்.

"இந்நாட்டு இளைஞர்களே! கேட்டீரா சேதி! ஆஸ்திரிய ஆதிக்கம், பிரஞ்சு அரசு, போப்பின் படைகள் என்று மூன்று முனைகளில் நமக்கு எதிர்ப்பு! நம் படையில் இருப்பவரோ மூவாயிரவர்!

போர் முறையில் அதிகம் பயிற்சி பெருதோர்! எனவே சரணடைவீர் என்று ஆணையிட்டு விட்டது மக்களவை!

ரோமாபுரியின் நீண்ட வீரகாவியத்தை மீண்டும் எழுத வல்ல மணிக்கரங்களே!

எதிர்த்துப் போராட என்னோடு வாரீர்!" என்றழைத்தான் கரிபால்டி.

"பணமோ, பதவியோ, பளிங்குக்கல் மாளிகையோ என்னோடு வருவோருக்கு நான் தரமாட்டேன். பசி, தாகம், பச்சை இரத்தம் வழிந்தோடும் போர்க்களங்கள், பயங்கர அணிவகுப்புகள் இவையே நான்

தரக்கூடிய பரிசுகள். இதயத்தால் இந்நாட்டை நேசிக்கின்ற இளைஞர்களே ! அன்னை பூமியின் மானம் காப்போம், என்னோடு வாரீர் !'' என்று அறைகூவல் விடுத்தான்.

ஆனால் ஆதிக்க வெறிபிடித்தோரால் கரிபால்டி விரட்டப்பட்டான்.

காடு, கடல் என்றும், கடும்பசி, தூக்கம் என்றும் பாராது கரிபால்டி நடந்தான் படையுடன்.

ரியோடிஜீனிரா என்று ஓர் அழகிய தீவு—அங்கே அடைக்கலம் புகுந்தான்.

ஆனால் ஆஸ்திரியாவுக்குப் பயந்த அந்த அரசு அவனை அங்கிருந்து விரட்டியது.

இருநூறு வீரர்களுடன் பதின்மூன்று படகுகளில் ஏறிப் பயணமானான். எதேச்சாதிகாரத்தின்கரங்கள்நடுக்கடலிலும் அவனைப் பின்தொடர்ந்தன. கடல் கொந்தளித்ததோ என நிகழ்ந்த கடுமையான ஒரு போரில் படை வீரர்களில் நூற்றுஅறுபது பேர்களை இழந்தான் கரிபால்டி.

நோயால் வாடிய தன் மனையாளைத் தோளில் சுமந்த வண்ணம் செம்படவக் குடில் ஒன்றுக்கு வந்து சேர்ந்தான் கரிபால்டி.

அங்கு தான்—

தென் அமெரிக்காவில் அவனைக் ''கைப்பிடித்து, அவன் காரியம் யாவினும் கைகொடுத்த'' காதல் மனைவியின் ஆவி பிரிந்தது.

அன்னைத் திருநாட்டை மீட்கின்ற அற்புத வாய்ப்பை இழந்தான் !

அரிய வீரர்களை இழந்தான் !

அருமை மனைவியையும் இழந்தான் !

துயர் மண்டிய நெஞ்சமொடு, எங்கு செல்கிறோம், என்ன செய்கிறோம் என்ற உணர்வின்றியே அவன் நடந்து கொண்டிருந்தான்—இப்படி நாற்பது நாட்கள் ! !

சார்டினியாவை ஆண்ட இத்தாலியனான விக்டர் எம்மானுவல் மன்னன் தனக்குத் தஞ்சம் அளிப்பான் என எண்ணினான்.

ஆஸ்திரியாவுக்குப் பயந்த அரசன் அதற்கு மறுத்துவிட்டான்.

டுனீசியா ; அங்கும் அதே நிலை !

ஜிப்ரால்டர் கரை ஓரம் ஒதுங்கினான் ;

ஆங்கில கவர்னர் அவனைத் துரத்தினான் !

ஆஸ்திரிய எதேச்சாதிகாரமும் அதற்குத் துணைபோன அரசுகளும் அவனை விரட்டிக் கொண்டே இருந்தன.

இறுதியில்—

1851-ல் நியூயார்க் நகரை அடைந்து அங்கு மெழுகுவத்தித் தொழிலில் ஈடுபடலானான் கரிபால்டி. தாயகத்தின் வாழ்வுக்காகத் தன்னையே அழித்துக் கொண்ட தான் ஒரு மெழுகுவத்தி என்பதைத் தன் தொழில் மூலம் சொல்லாமல் சொல்லிக் காட்டினான் போலும் !

1854-ல் பிறந்த பூமியான நீஸுக் (Nice) குத் திரும்பிய கரிபால்டி வேளாண்மையில் கவனம் செலுத்தினான். ஆனால் அவனுடைய நெஞ்சில் விடுதலை வேட்கை மட்டும் நீறுபூத்த நெருப்பாகவே இருந்து வந்தது.

அவனை ஊதி, மீண்டும் அங்கும் தணலை எழுப்பியவன் கவூர் என்பவன். இத்தாலியின் ஒரு பகுதியை ஆண்ட பீட்மாண்ட் வம்சத்து விக்டர் எம்மானுவல் என்னும் மன்னனின் மதியூகி அமைச்சனவன். மாஜினியையும் கரிபால்டியையும் பயன்படுத்தி ஆஸ்திரியாவின் ஆதிக்கத்தைத் தொலைத்து, விக்டர் எம்மானுவலை இத்தாலிய நிலப்பரப்பு முழுமைக்கும் முடி மன்னனாக்க வேண்டும் என்ற ஆசையில் கரிபால்டியை அழைத்தான் கவூர். எப்படியும் இத்தாலி முழுதும் இணைந்து அந்நியர் ஆதிக்கம் ஒழிந்தால் போதும் என்ற எண்ணம் கொண்ட கரிபால்டியும் அதற்கு இசைந்தான். ஆஸ்திரியாவை எதிர்ப்பதற்கு பிரான்சும் சம்மதம் தந்தது.

ஐயாயிரவர் கொண்ட அடல் மறவர் சேனை ஒன்றைத் திரட்டினான் கரிபால்டி.

எழுச்சிமிக்க கரிபால்டியின் படையும், எம்மானுவல் சேனையும், பிரஞ்சுப் படையும் ஆஸ்திரியாவைப் புறங்கண்டன. இத்தாலியப் பகுதிகள் மீண்டும் இத்தாலியர் வசமாயின.

ஆனால்—

இத்தாலி மீண்டும் ஒன்றாக இணைந்தால் தம் ஆதிக்கத்திற்கு ஊறு நேருமோ என்ற அச்சம் கொண்ட பிரஞ்சு அரசன் லூயி நெப்போலியன், இடையில் சண்டையை நிறுத்திவிட்டு ஆஸ்திரியரிடம் சரணடைந்தான்—கரிபால்டியின் வேண்டுகோளுக்கு மாறாக.


ஆனால் அவன் நாட்டுப் பற்றும் சுதந்திர தாகமும் தணியவில்லை. பல சிரமங்களுக்கிடையே மீண்டும் தனக்குப் பலம் சேர்த்துக் கொண்டான். நேபில்ஸிலும் சிசிலியிலும் வெற்றிபல கண்டான். அவன் வெற்றிகளை ஆங்கிலக் கவி டென்னிஸனும் புகழ்ந்து பாராட்டினான்.

மேலும் பல வெற்றிகளைப் பெற்று இணைந்த இத்தாலி என்ற அந்த இன்பக் கனவு தன் கண் முன்னால் நனவாகக் கண்டு சில ஆண்டுகளுக்குப் பிறகு 1882-ல் உயிர் நீத்தான் கரிபால்டி.

ஆனால் மாஜினிக்கு அந்த மன நிம்மதி கிடைக்கவில்லை.

கரிபால்டி வெற்றி பெற்ற இடத்தில் வாழ்ந்த மக்களோ, விக்டர் எம்மானுவல் தலைமையில் முடியரசையே ஏற்பது என்று வாக்கெடுப்பில் தீர்மானித்தனர். ஆற்றல் மிக்க அரசன் ஒருவன் அரணாக இருந்தால்தான் அண்டை நாடுகளின் ஆதிக்க வெறிக்குப் பலியாகாமல் இருப்போம் என்று அவர்கள் கருதியிருக்கலாம். ஆனால் இணைந்த இத்தாலியில் மக்களாட்சி என்ற மங்காத ஒளிவிளக்கை ஏற்றிட நினைத்த மாஜினியோ, உடைந்த உள்ளத்தோடு பைசா நகரத்தில் தன் உடலைச் சாய்த்திட்டான். மாஜினி, கரிபால்டி என்ற இரு மாணிக்கங்களும் மறைந்தன.

(தொடரும்)




## 2

மருத்துவக் கல்வியைக் கவனிப்போம்; முப்பது ஆண்டுகளுக்கு முன்பு, 'டைபாயிட்' காய்ச்சல் கண்டுவிட்டால், நோய் இருபத்தொரு நாட்கள் இருந்து தான் இறங்குமென்று நம்பினார்கள். சென்ற இருபது ஆண்டுகளில் இந்நோயின் காரணத்தைப் பற்றியும் அதைத் தணிக்கும் வகையைப் பற்றியும் எவ்வளவோ அறிவு பெருகியுள்ளது. 'க்ளோரோமைசிடின்' என்ற மருந்தின் மூலம், சீக்கிரமே காய்ச்சலைத் தணிக்கக் கற்றுக் கொண்டுள்ளார்கள் மருத்துவர்கள்.

முன்னர் 'காக்காவலி'க்கு மருந்துவமே இல்லையென்று எண்ணினர். இப்போது அதற்கும் மருந்துகள் வந்துள்ளன.

இரத்த அழுத்தத்திற்கு மருந்து வகைகள் முன்னர் இல்லை; இப்போது உண்டு.

'செயற்கைச் சிறு நீர் அகம்' புதியகண்டுபிடிப்பு!' உறுப்பு ஒட்டு அறுவைச்' சிகிச்சை முன்னர் அறியாதது! இப்போது கையாளப்படுவது. 'இருதய-நுரையீரல்' கருவி, மருத்துவத் துறை முன்னேற்றத்தின் அடையாளம்.

சுருக்கமாகக் கூறுவதானால், மருத்துவக் கல்வி, புதிய கண்டுபிடிப்புகளுக்கு ஏற்ப, புதுப்பிக்கப்பட வேண்டும்.

பயிர் வகைகளைப் பார்ப்போமே! 'வீரிய விதை'களும், அமோக விளைச்சல் விதை நெல்களும் அண்மைக் காலத்தில் நம்மிடம் வந்தவை. ஐ.ஆர். எட்டு விதையில் தொடங்கி, இன்று 'கருணா' வரை வளர்த்திருக்கிறோம். பசு உரமும் தழைஉரமும், பண்டைப் பயிர்த் துணைகள். இரசாயன உரம் இன்று பெரிதும் பயன்பட்டு வருகிறது. கட்டைக் கலப்பையே முன்னர் அறிந்தது; 'டிராக்டர்' இன்று நடைமுறைக்கு வந்துவிட்டது. எனவே, வேளாண்மைக் கல்வி, இவற்றிலெல்லாம் பயிற்சி கொடுப்பதாக இருக்க வேண்டும். நில உச்சவரம்பு வந்துவிட்டபின், பெரும்பண்ணைகளில் பயிரிடும் முறைகளைவிட, சிறு பண்ணைப் பயிர்த் தொழிலில், ஆதாயம் காண்பதைப் பற்றிக் கவனஞ் செலுத்த வேண்டும். ஆகவே, பழைய, பயிர்க்கல்விப்பாடத்திட்டம் காலத்திற்கேற்ப மாற்றப்பட வேண்டும்.

இப்படியே, வேதியல், பௌதிகம், உடலியல், நிலவியல் ஆகியவற்றைப் பற்றியும் புதிய புதிய உண்மைகள், நாளுக்கு நாள் வெளியாகின்றன. அதனால் பழைய கொள்கைகள் அடிபட்டுப் போகின்றன. புதிய கொள்கைகள் உருவாகின்றன. முன்காலத்தில், எப்போதோ ஒரு முறை, இத்தகைய நிலைகள் உருவாகும். இக்காலத்திலோ, அறிவியல்துறை உண்மைகள் பெருமழையாகப் பெய்கின்றன.

வரலாறும், பழைய ஆமை நடையிலே நகர்வதில்லை. விரைந்து வளர்கிறது. பழைய வரலாற்றோடு நிற்பவர், திக்குத் தெரியாத இடத்தில் நிற்க நேரிடலாம். 'திட்டமிடுதல்' என் மாணவப் பருவ காலத்தில், பொருளாதார மேதைகள் அறியாதது; இன்றோ, மாணவர்கள் விவாதிப்பது.

ஒவ்வொரு துறை முன்னேற்றத்தையும் கவனித்து, கணக்கிட்டுக் கற்பித்தலே கல்லூரிகளின் கடமை. இதற்குத் துணைப்பாடத் திட்டத்தை உச்சவரம்பாகக் கொண்டால் ஏமாந்து விடுவோம். அதை மிச்சவரம்பாகவே கொள்ளவேண்டும். முன்னேறிய நாடுகளில் அப்படியே கொள்ளுகிறார்கள். பாடத் திட்டம் உருவானதற்குப் பின் வரும் உண்மைகளைச் சேர்த்துக் கற்பிக்கிறார்கள். அது எப்படி முடிகிறது? ஏற்கனவே கூறியது போல், ஒவ்வொரு அறிவுத்துறையிலும் வெளியாகும் பல நாட்டு இதழ்களையும் வாங்குகிறார்கள். அவற்றைப்படித்து, அவை வெளியிடும் ஆதாரபூர்வமான தகவல்களை, கண்டுபிடிப்புகளை, கொள்கைகளை வகுப்புகளிலே வைக்கிறார்கள். எனவே, அவர்கள் கல்வி, பாடத் திட்டத்தோடு நின்றுவிடாமல், மேலும் மேலும் வளர்ந்து வருகிறது; புதுமையும் பெற்று வருகிறது. பற்பல நாட்டு அறிவியல், பொருளியல் முதலிய இதழ்களையும் வாங்குவதற்குத் தாராளமாகச் செலவிடுகிறார்கள்.

நெ. து. சுந்தரவடிவேலு
துணைவேந்தர், சென்னைப் பல்கலைக்கழகம்


தமிழ் நாட்டில் கல்லூரிகளில் நூலகக் கட்டணம் வாங்குகிறார்கள். அந்த வசூல் குறைவென்று சொல்வதற்கில்லை. அதில் முடிந்த அளவு பெரும் பங்கைப் பிற நாட்டு அறிவியல்கல்விச்சஞ்சிகைகளுக்குச் செலவிடுதல் நல்லது.

எவ்வளவு நன்றாக ஓடினாலும், காரை அப்போதைக்கப்போது 'சர்வீஸு'க்கு அனுப்பாவிட்டால் அது பாழாகி விடும். நெடு நாளைக்கு நன்றாக ஓடாது. நெடு நாள் சும்மா கிடக்கும் கார், பல இடங்களில் துருப் பிடிக்கும், சில பகுதிகள் ஆற்றலை இழந்துவிடும். பாடத் திட்டத்தை மிச்சவரம்பாகவே கொண்டு, மாத, காலாண்டு அறிவியல் இதழ்களின் துணை கொண்டு, கல்வி கற்பிக்கும்முறையை நாம் மேற்கொண்டாலும், பாடத்திட்டத்தை அப்போதைக் கப்போது 'சர்வீஸு'க்கு அனுப்ப வேண்டும். சில வேளை, அந்த சர்வீஸ் சாதாரண சர்விஸாக மட்டும் நின்று விடாமல், எல்லாவற்றையும் சரி பார்க்கும், ஓவரால் சர்வீஸாகவும் இருக்க வேண்டும். இன்றைய உலக மாற்ற, உண்மை வெடிக்கும், வேகத்தை நோக்கும்போது, கல்லூரிக்கல்வியின் பல நிலைப்பாடத் திட்டங்களையும், குறிப்பிட்ட காலத்தவணைக்கு, ஒருமுறை முழுமையாகச் சரிபார்த்துச் சீரமைத்தல் நல்லது. குறைந்தது ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறையாவது பாடத்திட்டம்முழுவதையும் மறுபரிசீலனை செய்து, சீர் செய்தல் நல்லது. இதற்கிடையில்தேவைப் படும் மாற்றங்களைச் செய்யாமல் தள்ளிப்போடவும் கூடாது.

மேற்கூறிய அடிப்படையில் சென்னைப் பல்கலைக்கழகப் பாடத் திட்டங்களை, முழுமையாக மறுபரிசீலனை செய்து, சீரமைக்க வேண்டுமென்ற கருத்து, அப்போதைக்கப்போது தெரிவிக்கப் பட்டது. அத்தகைய கருத்து, பல்கலைக் கழகத்தின் அவைகளிலும் கேட்டது; பிற பொது அவைகளிலும் வெளியாயின.

'ஆண்டுக்கு ஆண்டு, இந்தப் பாடத்திலும் அந்தப் பாடத்திலும் செய்யும் நீக்கும் சேர்க்கையும் போதா; அடிப்படையில் ஒரே மாதிரி பல்லாண்டுகளாக அமைந்துள்ள நம் பாடத் திட்டம் பெரிய மாற்றத்திற்குள்ளாக வேண்டும் என்று வற்புறுத்தப் பட்டது. மேனாட்டுப் பல்கலைக் கழகங்களைப் பார்த்து, அவர்களைப் போன்ற பாடத் திட்டங்களைக் கொள்ள வேண்டும். என்பார் உளர்.

மேனாட்டு அளவுக்கு, எடுத்த எடுப்பிலே உயர்ந்து விட முடியாது. அங்குள்ள கருவி கரண வசதிகளுக்கு இங்கே எங்கே போவது?



அடுத்த இதழில்...

**தமிழ் நாடு**

**குடிசைப் பகுதி**

**மாற்று வாரியத்**

**தலைவரின்**

**சிறப்புப் பேட்டி.**



அவற்றைத் தேடுகிறோமென்று சும்மா இருந்து விட வேண்டாம். அந் நாடுகளின் கல்வி நிலையைக் கருத்திலே வைப்போம். அவற்றை நோக்கி நடப்போம். இனியும் வாதமிட்டுக் கொண்டே, காலத்தைப் போக்கி விடாமல், முன்னேறுவோம். இந்தியாவில், பல பல்கலைக் கழகங்கள் எட்டியுள்ள நிலைக்காவது எட்டுவதற்கு முயல்வோம்; அதற்கான பணிகளைத் தொடங்கிவிடுவோம்' என்போர் பலர்.

'மாற்றமென்ன பயன்? மாணவரிடம் ஊக்கம்வந்தால்அல்லவா? ஊக்கச் (Motivation) சூழ்நிலை இல்லாதபோது, இருப்பதைக் கலைப்பானேன்?' என்று சலித்துக் கொள்பவர்களும் உண்டு. அக் குரல்களும் கேட்கும். ஒருமித்த குரலை எதிர் பார்த்துப் பயனில்லை. பின் என்ன செய்ய?

நூற்றாண்டுகளாக, வல்லரசுகளாக விளங்கியவைகூட எட்டிப் பிடிக்காத சாதனைகளை—நிலாவில் இறக்கம்--நிலாவில்கார்—காரிலிருந்து தொலைக் காட்சி, நிலத்திற்கு வர—ஆன சாதனைகளைப் புரிந்துள்ளநாடுகளின்கல்வி நிலையை நாமும் நான்காண்டுகளில், பெற்று விட நினைப்பது அதிகம். எட்டு மணிக்கு வேலை தொடங்க முடியாத நாம், பல்லாண்டுகளுக்கு எட்ட முடியாத நிலை அது!

இன்றுள்ள நிலையிலே, ஒன்றுமே முடியாதென்கிற, சாக்குருவிக் கொள்கையும் ஆண்மைக் கழகல்ல.

ஊழையும் உப்பக்கம் காண்பர்
உலைவு இன்றித் தாழாது
உஞற்றுபவர்.

இதைச் சிக்கெனப் பிடித்துக் கொள்வோம். கல்வி மாற்றத்தில் முனைவோம். முடிந்த ஓட்டத்தில் செல்வோம். 'தன் வலியும் துணை வலியும் பிற வலியும் தெரிந்து செயல்புரிய' ஆணையிடுகிறார் வள்ளுவர். 'கல்லூரிகளின் வலிவே, தன்வலி. 'அரசு, பல்கலைக் கழக மான்யக் குழு' ஆகியவை துணை வலி. மாற்றார் வலியெதுவோ? 'மாறார், வலியே அது. உள்ளதை விட உயர்வதற்கு, மறுப்போர் பலர் எங்கும் இருப்பர். இங்கும் இருக்கிறார்கள். இத்தனைச் சூழல்களையும் கவனித்துப்பாடதிட்டச் சீரமைப்புச் செய்ய வேண்டியவர்களாக உள்ளோம்.

(இன்னும் வரும்)

### அறிவுக் கண் திறந்தது

சின்னக் குழந்தையுடன் சிரித்து மகிழும் நேருவை அழகிய வண்ணத்தில் அட்டைப் படமாக்கிய சிறப்புக் கண்டேன். மனிதருள் மாணிக்கத்தின் பணி மொழிகளை வழங்கியதோடு மாமேதை நேருவின் தோற்றங்களையும் வெளியிட்டு, அண்ணா, கலைஞர் இருவரது இரங்கற் செய்திகளையும் இணைத்திருப்பது இதழுக்கு எழில் கூட்டுகிறது. ஆம்! '' நேரு மலர் '' என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற இலக்கணத்தை உருவாக்கியுள்ளது 'தமிழரசு,'! அது மட்டுமா?

அரசின் சாதனை பற்றி வாதம் செய்வோர்க்கு, '' சாதனைக் கீடுண்டோ சாற்று '' என்ற வெண்பாப் போட்டியின் மூலம் சரியான மருந்து கொடுத்திருப்பதோடு வாதம் உள்ளவர்களுக்கும் அதை வென்றிட வழி கூறியிருப்பது பயனுள்ளது; பாராட்டத் தக்கது. '' கல்விச் சிந்தனை '' அறிவுக் கண்ணைத் திறக்கும் என்பது உறுதி.

— செ. டேவிட் கோவில் பிள்ளை,
தென்காசி.

### நெஞ்சம் குளிர்ந்தது

நேருஜியும் குழந்தையும் வண்ணப் படத்தைத் தமிழரசு அட்டையில் கண்டு என் நெஞ்சம் குளிர்ந்தது.

தேசியத் தலைவர்களைப் பொதுவாக்கி மதிக்க வேண்டும் என்ற பேரறிஞர் அண்ணாவின் பொன்மொழியின் பெருமையை மேலும் ஒரு படி உயர்த்திவிட்டீர்கள் !

— அ. சேக்மைதீன்,
வத்தலக்குண்டு.

### வாழ்க்கைக்கு உதவும் புள்ளி விவரம்

தங்களின் ''தமிழரசு'' இதழ் கண்டேன். தமிழகத்தைத் 'தமிழரசு' மூலம் அறிந்து கொள்ள முடிவது குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். 16-11-1970 தமிழரசு இதழில் வெளியான 'பள்ளிக் கணக்கு புள்ளிக்கு உதவும்' என்ற கட்டுரையைப் படித்து மகிழ்ந்தேன்; அதன்மூலம் புள்ளி விவரத்துறையின் சேவையை மிகுந்த அளவில் அறிந்துகொள்ள முடிந்தது.

— வை. கிருஷ்ணமூர்த்தி,
சென்னை-33.

### நல்வாழ்வு தரும் அரசு!

நாடோடி வாழ்க்கையில் நிலமெல்லாம் சுற்றி வந்த நரிக்குறவர்களுக்கு, இருக்க இடமளித்து, ஐந்து ஏக்கர் நிலத்தால் பிழைக்க வழி செய்து, அவர்களை நிலையாக ஓரிடத்தில் நிலைக்க வைக்கும் இந்த அரசு, பன்னெடுங்காலம் ஈண்டு நிலைத்திட வேண்டுமென வேண்டி வாழ்த்துகின்றேன். வாழ்க தமிழரசு!

— பொன். இளவேற்கோ,
திருத்தணி.




### முதுமொழி பொய்க்கவில்லை !

ஏழையோர்க்கும் பட்டா, எளியவர்க்கும் பட்டா, ஏனையோர்க்கும் பட்டா, குறவருக்கும் பட்டா! ''அரசு அன்றுகேட்கும், தெய்வம் நின்று கேட்கும்'' என்ற உண்மை உரை தமிழகத்தைப் பொறுத்த வரை பொய்த்துப் போகவில்லை.

— கே. எஸ். கலியபெருமாள்,
கட்டமுத்துப்பாளையம்.

### திக்கெட்டும் 'கருணா' பரவுக

'கருணாவின் கதை' தஞ்சைத் தரணியில்தான் பிறந்திருக்கிறது. ஆம் ! நம் முதல்வர் பெயரும் கருணாநிதிதான். அவரும் தஞ்சைத் தரணியில்தான் பிறந்தார்; ஆனால் இப்பொழுது எல்லா மாவட்டத்திற்கும் சொந்தக்காரராக ஆகிவிட்டார் அவர். ஆகவே கருணாவின் கதையை எல்லா மாவட்டத்து விவசாயிகளுக்கும் பரப்ப வேண்டும்.

— கண்ணு, அய்யம்பேட்டை.

### நவரசக் குவளை.

தமிழரசு ஓர் நவரசக் குவளை. அதில் தேனும் பாலும், கன்னல் சாறும், கலந்து உள்ளது. அந்த அபூர்வ அமிர்தத்தின் எழுத்துச் சுவையை மெய்ம் மறந்து உண்டு மகிழலாம்.

வாழ்க தமிழரசு !
வளர்க அதன் டணி.


— எம். எம். மீரான்,
நாகர்கோவில்-2.

### எதிர்பார்த்ததை வழங்கும் தமிழரசு

நவம்பர் முதல் தேதி இதழிலேயே 16ஆம் தேதி இதழுக்காக 'ரோஜாப்பூ' போட்டுக் குறிப்புக் காட்டியிருந்தீர்கள். அதைப் பார்த்தவுடன் 16-ஆம் தேதி இதழ் எப்படி இருக்குமென்று எதிர்பார்த்தோமோ அது அப்படியே இருந்தது. நாங்கள் எதிர்பார்த்ததை வழங்கும் 'தமிழரசு'க்கு எங்கள் மனமார்ந்த நன்றி.

— பி. சண்முகதுரை,
கோவில்பாளையம்.





# அமோக விளைச்சலுக்கு PSG பம்பு செட்டுகள்

■ நீங்களும் பிஎஸ்ஜி பம்பு செட்டை இன்றே வாங்குங்கள் ■ என்ஜின் அல்லது மோட்டாரில் இயங்குவது ■ தாராளமாக தண்ணீர் பெறுங்கள் ■ ஏராளமாக விளைச்சல் காணுங்கள் ■ நிறைய செல்வம் அடையுங்கள்

***விவரங்களுக்கு எழுதுங்கள்:***

## பி எஸ் ஜி இண்டஸ்ட்ரியல் இன்ஸ்டிட்யூட்

கோயமுத்தூர் 4 தென்னிந்தியா

PSG *the hallmark of high standard*

***விற்பனைக் கிளைகள்:***

*311, தம்பு செட்டி வீதி, சென்னை 1. 217 & 218, மேலமாசித்தெரு, மதுரை 1.*
*பப்ளிக் கார்டன் ரோடு, சைபாபாத், ஹைதராபாத் 4.*
*13/85, ஜெயசாமராஜேந்திர ரோடு, பெங்களூர் 2.*

VSK PSG 213



# விருந்தோம்பல் ஒரு கலை

**1965**-ஆம் ஆண்டு சென்னையிலே திரைப்பட விழா நடைபெற்றது. அனைத்துலகத் திரைப்படங்களுடன், திரைப்படக் கலைஞர்களும், தாரகைகளும் சென்னைக்கு வருகை தந்திருந்தனர். அவர்களுக்கு இனிய விருந்து தரப்பட்டது. அறுசுவை உண்டியினை அனைத்துலக விருந்தினர் உண்டு மகிழ்ந்தனர்.

*1968*-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 9 ஆம் நாள், தமிழகக் கல்வி அமைச்சர், அனைத்துலக நில நூல் மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு ஒரு விருந்தினை அளித்தார். விருந்தின் அமைப்பும், சுவையும் அனைவரையும் கவர்ந்தன.

மாமல்லபுரம் கடற்கரையில் ஒரு நிலாச் சாப்பாடு. பல்லவ மன்னனின் கற்கோயில் எழில் தோன்ற, நிலாச் சாப்பாட்டை ரசித்து உண்டனர் விருந்தினர்.

இவ் விருந்துகளைத் தயாரித்தவர்களும், பரிமாறியவர்களும் சென்னை சமையல் கல்லூரி மாணவர்கள் என்பதைக் கேட்டால் உங்களுக்கு வியப்பாக இருக்கும். ஆம்! சென்னை, அடையாற்றில் உள்ள சமையல் கலையியல் கல்விக் கூடத்தில் படித்து வரும் மாணவர்கள் ஆண்டுதோறும் பல்வேறு விருந்திற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இவர்கள் ஏற்பாடு செய்யும் விருந்து, வெளி உணவு விடுதியினர் தரும் விருந்தினைவிட மலிவாக இருப்பதோடு, விஞ்ஞான ரீதியில், சுகாதார முறையில் தயாரித்ததாகவும் இருக்கும்.

இந்தியாவிலே நான்கு இடங்களில்தான் இந்தச் சமையல் கலை, முறையான கல்விக்கூடத்தில் கற்றுத் தரப்படுகிறது. அதில் ஒன்று சென்னையில் உள்ள இந்தக் கல்விக்கூடம். மற்ற மூன்று பம்பாய், கல்கத்தா, டெல்லி ஆகிய இடங்களில் உள்ளன. தொழில் கல்வித் துறையில் இது ஒரு முக்கிய வளர்ச்சி எனக் குறிப்பிடலாம்.

தமிழக அரசும், மைய அரசும் சேர்ந்து நடத்தும் ஒரு கல்விக் கூடமாகும் இது. இந்தக் கல்விக் கூடத்திற்கான இடத்தைத் தமிழக அரசு தந்தது. கட்டடம், கருவிகளுக்கான முழுச் செலவையும் மைய அரசு ஏற்றுக் கொண்டது. ஆண்டுதோறும் ஏற்படும் நடைமுறைச் செலவுகளை மாநில அரசும் மைய அரசும் சேர்ந்து ஈடு கட்டுகின்றன.

தமிழகக் கல்வி அமைச்சரின் தலைமையில் அமைக்கப்பட்ட ஒரு குழுவின் நிர்வாகத்தில் இந்தக் கல்விக்கூடம் நடத்தப்படுகிறது. நான்கு உறுப்பினர்கள் மாநில அரசின் பிரதிநிதிகளாகவும், நான்கு உறுப்பினர்கள் மைய அரசின் பிரதிநிதிகளாகவும் நியமிக்கப்படுகின்றனர். உறுப்பினர்களில் ஒருவர் அல்லது இருவர் உணவு விடுதிகளின் பிரதிநிதிகளாக நியமிக்கப்படுகின்றனர்.

சமையல் கலையைக் கற்றுத்தர அரசு இத்தனை முயற்சி செய்வதற்கு என்ன காரணம்? இன்று உலகில் மிகப் பெரிய தொழிலாக வளர்ந்து வருவது சுற்றுலாத் தொழில். சுற்றுப்பயணிகளைக் கவர்வதில் வரலாற்றுக் கலைச் சின்னங்கள், கலாச்சாரம் ஆகியவற்றோடு அறுசுவை உண்டியும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். எனவே, நாகரீக உணவு விடுதிகளுக்கு முறையாக விஞ்ஞான ரீதியில் சமையற் கலையில் கற்றுத் தேர்ந்த வல்லுநர்கள் தேவைப்படுகின்றனர்.

அந்தத் தேவையை உணர்ந்துதான் அரசு, இந்தக் கல்வி நிலையத்தை ஏற்படுத்தியது. சமையல் செய்வதில் என்ன விஞ்ஞான முறை என்று கேட்கத் தோன்றும்! இக் கல்விக் கூடத்தை ஒரு முறை பார்த்தால் அதற்கான பதில் தெளிவாக விளங்கும்.

கட்டடம், கருவிகள் அனைத்தும் சேர்ந்து சுமார் 18 லட்ச ரூபாய். இந்தக் கல்விக் கூடம் தோற்றத்தில் எழில் குலுங்க இருப்பதோடு சுத்தமாகவும், சுகாதாரத்துடனும் வைக்கப்பட்டுள்ளது. சமையல் கலையியல் என்று பொதுவாகச் சொல்லப்பட்டாலும், இங்கு உயர்ந்த ரக உணவு விடுதி நடத்துவதற்குத் தேவையான அத்தனை தகுதிகளும் பெறத் தக்க கல்வி அளிக்கப்படுகிறது. இந்தியச் சமையல் முறை, மேலைநாட்டுச் சமையல் வகைகள் ஆகியவற்றைக் கற்றுத் தருவதோடு



மாணவர்களுக்கு 'கேக்' தயாரிக்கக் கற்றுத் தருகிறார் ஆசிரியர்.

பொதுச் சுகாதாரம், உணவுச் சத்துகள் பற்றி விரிவான படிப்பு, அடிப்படை விஞ்ஞான அறிவு, உணவு விடுதி நிர்வாகம், விருந்தினரை வரவேற்பது, உணவு பரிமாறுவது, இல்லங்களை, உணவு விடுதிகளை, அறைகளை அலங்காரம் செய்யும் கலை, உணவு விடுதியின் பொருளாதாரம், உணவு விடுதியின் நிர்வாகத்தினர் தொழிலாளிகள் சம்பந்தப்பட்ட சட்டம், முதலுதவிப் பயிற்சி, ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய மொழி அறிவு அனைத்தும் இங்கு கற்றுத் தரப்படுகிறது. அவை அனைத்திலும் மூன்றாண்டுக் காலம் படித்துத் தேர்ச்சி பெறுவோருக்கு 'டிப்ளமா' வழங்கப்படுகிறது.

இந்த மூன்றாண்டுப் படிப்புப் போக, 6 மாத, 3 மாதக் குறுகிய காலத் தொழில் கற்பிக்கும் திட்டமும் இங்கு உள்ளது. உணவு விடுதிகளில் பணியாற்றுவோர் மற்றும் குறுகிய காலத்தில் பயிற்சி பெற விரும்புவோர் இந்தப் பயிற்சியைப் பெறுகின்றனர். இது 6 மாதப் பயிற்சி. மேலும் புதுவகையில் விஞ்ஞான ரீதியில் சத்துள்ள உணவினைக் கணவன்மார்களுக்குப் படைத்திட விரும்பும் இல்லத்தரசிகள் வாரம் இரு முறை மாலை வேளைகளில் (2 மணி முதல் 5 மணி வரை) வந்து இங்கு பயிற்சி பெறுகின்றனர். இது 16—18 வாரப் பயிற்சியாகும்.

இந்தக் கல்விக் கூடத்தினைச் சுற்றிப் பார்த்திட உங்களையும் இதோ அழைத்துச் செல்கிறேன்.

இதுதான் வரவேற்பு அறை; அடுத்து முதல்வர் அறை. இன்முகத்துடன் வரவேற்று அழைத்துச் செல்கிறார், முதல்வர் திரு குப்புசாமி. 1963-ல் இது துவக்கப்பட்ட காலம் முதல் இதன் முதல்வராக இருந்து வருபவர் அவர். இது ஒவ்வொரு செங்கல்லாக வளர்ந்த கதை அறிந்தவர். ஆரம்பத்தில் 35 மாணவர்களோடு துவக்கப்பட்டது. இப்போது டிப்ளமா படிப்பில் 185 பேரும், பிற பயிற்சிகளில் 250 பேரும் பயில்கின்றனர்.

இனி அவரோடு செல்லுவோம். முதல் அறை சமையல் கூடம். என்ன ஆச்சரியம்! புகையும், கரியும் எங்கும் தென்படவில்லையே! சமையல் பயிலும் மாணவ மாணவியர் தூய வெள்ளை ஆடையுடன் தலையில் வெள்ளைத் தொப்பியுடன் காணப்படுகின்றனரே என்று திகைக்கிறோம்.

ஒரு மாணவர் வெங்காயம் நறுக்குகிறார். மற்றவர் முட்டையைக் கலக்குகிறார். இறைச்சியைத் துண்டிக்க, பீட்ரூட், காரட், வெள்ளரி போன்ற காய்கறிகளை அழகாக வட்ட வடிவமாக நறுக்க இயந்திரங்கள் அங்கு உள்ளன. எரி வாயுவினால் எரியும் (அடுப்பு என்று தெரியாத வாறு மூடப்பட்டுள்ளன). இட்லி, புட்டிங் ஆகியவற்றை நீராவியில் வேக வைக்கும் கருவி, இப்படிப் பல அங்கு உள்ளன. எல்லாம் எவர்சில்வர் உலோகத்தினால் ஆனவை. நமது கேள்விக் குறியைப் புரிந்து கொண்டு, 'இவை ஆஸ்திரேலிய பசிப் பிணி அகற்றும் சங்கத்தார் இலவசமாக வழங்கியவை. சுமார் மூன்று லட்சம் ரூபாய்க்குச் சமையல் கருவிகள் வழங்கியுள்ளனர். ஒவ்வொரு அறையிலும் அவர்களது உதவியினைக் காணலாம். இந்தியாவில் வாங்க முடியாத இந்தக் கருவிகளை அவர்கள் இலவசமாகத் தந்தது பேருதவியாகும்' என்று நன்றியுணர்வோடு கூறுகிறார், முதல்வர்.

அடுத்த அறைக்குச் செல்கிறோம். அங்கு சாப்பாட்டு மேஜைகளில் மாணவர்கள் வெள்ளைத் துணி விரித்து, மத்தியில் மலர் ஜாடியை வைத்து அழகுபடுத்துகின்றனர். ''இவ்வாறு அழகு படுத்துவதும், சமைத்ததைப் பரிமாறுவதும், இங்கு கற்றுத் தரப்படும் கலை'' என்று முதல்வர் விளக்குகிறார்.

அங்கு ஒரு புது இயந்திரம் உள்ளது. காபி வழங்கும் இயந்திரம் அது. அதனுள் 5 கண்ணாடி ஜாடிகள் உள்ளன. ஒன்றில் வெந்நீர், மற்ற ஜாடிகளில் காஃபி, தேயிலை, சர்க்கரை, பால் ஆகியவை வைக்கப்பட்டுள்ளன. கோப்பையைக் கையில் பிடித்து இதைத்திருகினால் காப்பி அல்லது தேநீர்கிடைக்கும். ஆயிரம்ரூபாய் விலையுள்ள இந்த யந்திரமும் ஆஸ்திரேலியாவின் அன்பளிப்பே!

அடுத்த இரு அறைகள், ஒன்று ஒரு படுக்கையறை; அடுத்தது இரு படுக்கைகள் கொண்டது. உணவு விடுதிகளின் மாதிரி அறைகள் இவை. படுக்கைவிரிப்புகள், சன்னல், கதவுகளுக்கான திரைகள், பூக்களை அலங்காரமாக வைப்பது ஆகியவற்றை

அங்கு மாணவ மாணவியருக்கு விளக்கிக் கொண்டிருக்கிறார். பயிற்சியாளரான அம்மையார்.

அடுத்த அறையில் துணிகளைத் துவைக்கும் இயந்திரங்கள், இஸ்திரிப் பெட்டி ஆகியவை உள்ளன. ஆமாம் இதுவும் அவர்களின் பயிற்சியின் ஒரு பிரிவே.

மேலே செல்கிறோம். அடுத்த இரு அறைகள், ரொட்டிகள், கேக்குகள், இனிப்புகள் தயாரிக்கும் பிரிவு சம்பந்தப்பட்டவை. கேக்கில் பூ வேலை செய்து காட்டுகிறார் ஆசிரியர். மாணவர்கள் அக்கறையோடு கவனிக்கின்றனர்.

இதே போல் முதலாண்டு இரண்டாவது ஆண்டு, மூன்றுவது ஆண்டு மாணவர்களுக்கான பயிற்சி ஆங்காங்கே நடக்கிறது.

ஓர் அறையில் பல மேஜைகள் யார் வரவையோ எதிர்பார்த்துத் தயாராகவுள்ளன. இல்லத்தரசிகள் பயிற்சிக்கு என்று விளக்கம் தருகிறார் முதல்வர். அடுத்த அறையில் செயல்முறைத் தேர்வு (Practical Test) நடக்கிறது, என்று கேள்விப்படுகிறோம் உள்ளே எட்டிப் பார்க்கிறோம். அங்கு மாணவர்கள் மிகுந்த அக்கறையோடு சமையல் செய்துகொண்டிருக்கிறார்கள். இரு ஆய்வாளர்கள் அவர்களது பணியைக் கண்காணிக்கின்றனர். அவர்கள் சென்னையைச் சேர்ந்த பெரிய உணவு விடுதிகளின் நிர்வாகிகள்.


அடுத்த அறையில் கணக்கியலும், தட்டச்சும் (Book Keeping and Typewriting) சொல்லித் தரப்படுகின்றன. ஒரு சுற்று வந்து விட்டோம். எதிரே பல இல்லத்தரசிகள் காரிலிருந்து இறங்கி வருகின்றனர், அவர்களது பகுதி நேரப் பயிற்சிக்காக. இந்தப் பயிற்சி பற்றி தங்கள் கருத்து என்ன என்று ஓர் இல்லத்தரசியிடம் கேட்டோம். ''இந்தப் பயிற்சி எனக்கு மிகவும் பிடித்துள்ளது. கணவருக்கும், குழந்தைகளுக்கும் புதுப் புது விதமாகவும், சத்துள்ள உணவாகவும் அளிக்க முடிகிறது. இன்னொரு விஷயம், இனி சமையற்காரி என்னை ஏமாற்ற முடியாது'' என்கிறார் அந்தப் பெண்மணி.

''ஆமாம். உங்கள் புதிய பாணி சமையலை உங்கள் கணவர் ரசிக்கிறாரா?''

''மிகவும் பாராட்டுகிறார். விருந்தினர் வரும்போது சிறப்பான சமையல் செய்து தோழியர்களின் பாராட்டையும் பெறுகிறேன்'' என்று பூரிப்புடன் அந்த அம்மையார் பதிலளிக்கிறார்.



அறையை அழகு செய்யும் கலை கற்றுத்தரப்படுகிறது



காபி கலந்து தரும் இயந்திரம்

சமையல் செய்வது, ரொட்டிகள், கேக்குகள், மிட்டாய்கள், தயாரிப்பது பழங்களைப் பதனிடுதல், ஜாம், ஜெல்லி, பழ ரசங்கள் தயாரிப்பது ஆகியவை இவர்களுக்குச் சொல்லித் தரப்படுகின்றன.

''இல்லத்தரசிகளுக்கான இந்த வகுப்பு டிசம்பரில் முடிவடைகிறது. ஜனவரியில் அடுத்த பயிற்சி ஆரம்பம். இப்போதே அதற்காக விளம்பரப்படுத்தியிருக்கிறோம். டிசம்பர் 20-ஆம் தேதி மனுப் பெறக் கடைசி நாள்'' என்று தெரிவித்தார் முதல்வர். இதற்குக் கட்டணம் ரூ. 160.50. சமையலுக்காகும் பொருட்களுக்கும் (ரூ. 115) சேர்த்து இந்தக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

மூன்றாண்டுப் படிப்பான 'டிப்ளமா' வகுப்புகளுக்கு ஜூன் மாத மத்தியில் மனுக்கள் பெறப்படுகின்றன. இதற்குக் குறைந்த பட்சத் தகுதி பள்ளி இறுதிப் படிப்பாகும் (எஸ்.எஸ்.எல்.சி). ஆயினும், பி.யு.சி. பி.எஸ். சி. படித்த மாணவர்கள் கூட இதில் சேர்கின்றனர். இங்குள்ள மாணவர்களுக்குத் தனி விடுதி இப்போது

கட்டப்படுகிறது. எனவே தற்போது மாணவர்கள் மையத் தொழில் நுணுக்கப்பள்ளி உணவு விடுதியில் தங்கியுள்ளனர். மாணவர்கள் உணவு விடுதியிலிருந்தாலும், வீட்டிலிருந்து வந்தாலும், மதிய உணவைக் கட்டாயம் பள்ளியில்தான் சாப்பிட வேண்டும் என்று நிபந்தனை. இதற்குக் காரணம், இங்கு பயிற்சிக்காகத் தயாரிக்கப்படும் சத்துள்ள உணவுகள் வீணாகி விடக் கூடாதே என்ற நல்லெண்ணம்தான்! இதற்காக அவர்களது சம்பளக் கட்டணத்துடன் சாப்பாட்டுச் செலவுக்கும் சேர்த்துக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

தமிழக அரசாங்கம் இங்கு பயிலும் அரிசன, மற்றும் பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு உதவித் தொகையும் வழங்குகிறது. மேலும் இது தவிர, ஒவ்வொரு வகுப்பிலும் 10 சத வீதம் சிறந்த மாணவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு இந்தக் கல்விக் கூடம் உதவித் தொகை வழங்குகிறது. முதலாண்டு மாணவருக்கு ரூ. 420-ம் இரண்டாவது மூன்றாவது ஆண்டு மாணவர்களுக்கு ரூ. 840-ம் உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

இங்கு படித்தவர்களுக்கு நல்ல வேலை வாய்ப்பு உள்ளது என்பது மிகவும் மகிழ்ச்சி தரும் செய்தியாகும். நீண்ட காலமாக நமது நாட்டில் சமையல்-உணவு சிற்றுண்டி விடுதிகள் அனுபவத்தைக் கொண்டு நடத்தப்பட்டு வந்தனவேயன்றி, முறையான கல்வி பெற்று நடத்தப்பட்டு வரவில்லை. ஆனால் சுற்றுலாவின் மூலம் உணவு விடுதிகளும் உணவு விடுதிகள் மூலம் சுற்றுலாவும் வளர வேண்டிய சூழ்நிலை உள்ள இந்த விஞ்ஞான யுகத்தில் எதுவும் விஞ்ஞான முறையில் நடைபெற்றால்தான் விரைவான வளர்ச்சி அடைய முடியும். பெரிய உணவு விடுதியில் உள்ளவர்களெல்லாம் இதனை நன்கு அறிந்துள்ளனர். வெளியில் 20 ஆண்டு அனுபவம் பெற்றவரை விட இங்கு மூன்றாண்டுப் பயிற்சி பெற்றவர்கள் எல்லா வகையிலும் சிறந்தவர்களாக இருப்பதே இதற்குக் காரணமாகும்.

அவர்கள் இதனை வரவேற்கிறார்கள் என்பதற்குப் பல சான்றுகள் கூற முடியும். பல உணவு விடுதி அதிபர்கள் தங்களது பிள்ளைகளை இங்கு சமையல் கலையியல் பயில அனுப்புகின்றனர். தென்னிந்திய உணவு விடுதிகளின் சங்கத்தார் ஆண்டு தோறும் ஒரு சிறந்த மாணவருக்கு ரூ. 300 உதவித் தொகை அளித்து வருகின்றனர் என்பது இத் துறையில் உணவு விடுதிகள் எவ்வளவு அக்கறை காட்டுகின்றன என்பதைக் காட்டும்.

ஆண்டு தோறும் கோடைக் கால விடுமுறையில் 2-வது ஆண்டு மாணவர்களையும், 3-வது ஆண்டு மாணவர்களையும் பெரிய உணவு விடுதிகளுக்குப் பயிற்சிக்காக இரு மாதங்கள் அனுப்புவது வழக்கம். பயிற்சிக் காலத்தில் உதவிச் சம்பளம் ரூ. 75 வழங்கப்படும்.

இவ்வாறு பயிற்சி பெறும் இறுதியாண்டு மாணவர்களைப் பல உணவு விடுதிகள், பயிற்சியைத் தொடர்ந்து வேலைக்கு அமர்த்திக் கொள்கின்றனர். ஆண்டு தோறும், பெங்களூர், மைசூர், ஹைதராபாத், பம்பாய் கல்கத்தா, டெல்லி ஆகிய பகுதிகளிலுள்ள பெரிய உணவு விடுதிகளுக்கு மாணவர்களைச் சுற்றுலா அழைத்துச் செல்வதும் உண்டு.

இங்கு பயின்ற மாணவர்கள், கன்னிமாரா, சவேரா, மேஃபேர் என்ற சென்னை உணவு விடுதிகளில் மட்டுமின்றி, டெல்லி அசோகா உணவு விடுதி, பம்பாய் கல்கத்தா மற்றும் பல பகுதிகளிலும், ஜெர்மனி, அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற வெளி நாடுகளிலும் நல்ல சம்பளத்துடன் பணியாற்றி வருகிறார்கள். இந்தியன் ஏர்லைன்சில் ஒருவர் உதவி ஸ்டுவர்டாகக் கைநிறையச் சம்பாதிக்கிறார். மாதம் 500—600 ரூபாய் வருமானம் இத்துறையில் சாதாரணமான ஒன்று. 1,000—1,500 என்று சம்பளம் பெறுபவர்களும் அநேகர் இருக்கின்றனர். தற்போது கப்பல் நிறுவனம் ஒன்று எங்களிடம் பயின்ற மாணவர்களைக் கேட்டார்கள். நாங்கள் அனுப்பினோம். அவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்ற சேதி இரு நாட்களுக்கு முன்தான் வந்தது.

இங்கு பயின்ற ஜெயராமன், ஜாலி, ஜெயபிரகாஷ் என்ற மூன்று மாணவர்கள் தற்போது ஜெர்மனி நாட்டில் மேற்படிப்புக்காகச் சென்றுள்ளனர். அவர்கள் நாடு திரும்பியதும் குறைந்தது 2,000 ரூபாய் சம்பளத்தில் அவர்களை ஏற்றுக்கொள்ள எந்த பெரிய உணவு விடுதியும் தயாராக இருக்கும் என்று பூரிப்புடன் தெரிவித்தார், முதல்வர்.

நாமும் பூரிப்புடன் விடை பெறுகிறோம்.

## வெண்பாப் போட்டி - 5

**ஈற்றடி : ஒப்பாகக் கண்டதில்லை ஒன்று**

**முடிவு நாள் : 15—12—1970**

பரிசு : ஓராண்டு **'தமிழரசு'** அன்பளிப்பு

வெண்பா அனுப்ப வேண்டிய முகவரி :—

ஆசிரியர் (வெண்பாப் போட்டி),
"தமிழரசு" அலுவலகம்,
அரசினர் அச்சகம்,
சென்னை-1.

குறிப்பு: நேரிசை வெண்பா மட்டுமே அனுப்ப வேண்டும். முடிவு தேதிக்குப் பின்னர் வருபவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டா !



# வஞ்சியர்க்கு வாழ்வளிக்கும் பஞ்சுத்தொழில்

ஒரு பழைய வீடு. அதனுள்ளே அமைதியே உருவாகச் சுமார் 25 பெண்கள் பணியில் ஈடுபட்டுள்ளனர். பெண்களென்றால் பேச்சுத்தான் இருக்கும் என்று நினைப்பவர்கள் இவர்களைக் கண்டால் ஏமாற்றம் அடைவார்கள். அவ்வளவு தூரம் அமைதியுடன் அமர்ந்து கருமமே கண்ணாக இந்தப் பெண்மணிகள் செயல்படுகின்றனர்.

அதற்குக்காரணம் அவர்கள் ஈடுபட்டிருக்கும் தொழில், நூற்புத்தொழில். அக்கம் பக்கம் பார்த்துப் பேசிக் கொண்டிருந்தால் நூல் அறுந்துவிடும் என்பது ஒரு காரணம். மற்றொன்று, அதிகம் நூற்றால் அதிக ஊதியம் கிடைக்கும் என்ற ஆர்வம்.

இங்கு ஒரு பகுதியில் இயந்திரத்தின் மூலம் பஞ்சைச் சுத்தம் செய்கின்றனர்.

அடுத்த பிரிவில் சுத்தம் செய்யப்பட்ட பஞ்சைப் பட்டையாக மாற்றுகின்றனர்.

பின்னர் அதையடுத்த பிரிவில் அவை திரிகளாக மாற்றப் படுகின்றன.

கடைசிப் பிரிவில் இயந்திரங்களில் நூல் நூற்கப்பட்டுச் சிட்டங்களாகச் சுற்றப்படுகின்றன. இந்தச் சிட்டங்கள் கதர்த் துணி நெய்யும் நெசவாலைகளுக்கு அனுப்பப்படுகின்றன.


## தாயும் மகளும்

முற்றிலும் பெண்களைக் கொண்டு இயங்கும் இச்சிறு தொழிலில் பணியாற்றும் மகளிர் இத்தொழிலைப் பற்றி என்ன நினைக்கிறார்கள்? இதோ அவர்களையே கேட்போம் :—

''நான் முன்பு பீடி சுற்றிப் பிழைத்து வந்தேன். ஆனால் அந்தத் தொழிலை விட்டு விட்டேன். காரணம், அங்கு ஆண்களோடு வேலை செய்வது எனக்குப் பிடிக்கவில்லை. மேலும் பீடி இலைக்கு என்று ஒரு முறை, தூளுக்கென்று ஒரு முறை; இப்படிப் பலமுறை அலைய வேண்டும். எனவே அதை விட்டு விட்டு இந்தத் தொழிலுக்கு வந்துசேர்ந்தேன். என் கணவர் இறந்துவிட்டார். இங்கு நானும் என் மகள் ரஜியாவும் வேலை செய்கிறோம். நான் நூற்புப் பகுதியில் வேலை செய்கிறேன். அவள் பஞ்சைப் பட்டையாக மாற்றும் பிரிவில் பணியாற்றுகிறாள். எங்கள் வேலைக்குத் தக்கபடி ஒரு நாளைக்கு 4 ரூபாய் கிடைக்கும். வருவாய் குறைவானாலும் கவுரவமான வேலையாக இருக்கிறது'' என்கிறார் திருமதி ஹமாஜி.

## 16 வயது சுகந்தி

சுகந்தி, பேருந்து ஓட்டுநரின் மகள். ''நான் படிக்கவில்லை. அப்பா என்னை இந்தத் தொழிலில் சேர்த்துவிட்டார். இங்கு வந்து 3 வருடம் ஆகிறது. 1967-ல் தான் இதை ஆரம்பிச்சாங்க. அப்ப இருந்து வேலை பார்க்கிறேன். ஒரு நாளைக்கு 10 கிலோ தயார் செய்வேன்.





ஒரு நாளைக்கு 2 ரூபாய் கிடைக்கும்'' என்கிறார், சுகந்தி.

### லலிதாவைக் கேளுங்கள்..

பஞ்சைச் சுத்தம் செய்யும் பிரிவில் பணியாற்றும் லலிதா ஓர் இளம் விதவை. ''என் கணவர் விவசாயி. அவர் திடீரென்று இறந்துவிட்டார். அவர் இறந்தபின் கடந்த இரண்டு ஆண்டுகளாக இங்குதான் வேலை செய்கிறேன். ஒரு நாளைக்கு இரண்டேகால் அல்லது இரண்டரை ரூபாய் கூலி கிடைக்கும். எங்க அப்பா ஒரு கம்பெனியில் காவல்காரராகப் பணியாற்றுகிறார். எங்கள் இருவருடைய வருமானத்தையும் வைத்துத்தான் குடும்பம் நடக்கிறது. இந்த வேலை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. காலையில் வேலைக்கு வந்தால் எந்தவிதச் சிந்தனையுமின்றிப் பணியாற்ற முடிகிறது. தொல்லையில்லாத தொழில் இது.'' என்று குறிப்பிட்டார், லலிதா.

### அமைச்சரின் திட்டம்

வட ஆர்க்காடு மாவட்டக் கதர் அதிகாரியின் நிர்வாகத்தின் கீழ் உள்ளது இந்த நூற்புக் கூடம். ''இந்த நூற்புக் கூடத்திற்குத் தேவையான பஞ்சு திருப்பூர் மையக் கிடங்கிலிருந்து கொண்டுவரப்படுகிறது. இங்கு ஆண்டுக்குச் சராசரி 10,000 சிட்டம் நூல் நூற்கப்படுகிறது. அதைக் கோவை, தென் ஆர்க்காடு ஆகிய இடங்களிலுள்ள நூற்பாலைகளுக்கு அனுப்பி வைக்கிறோம்.

நூற்பவர்களின் வருவாய் அதிகரிக்க இத் துறையின் அமைச்சர் திரு சி. பா. ஆதித்தனார் அவர்கள் ஒரு புதிய திட்டத்தைக் கூறி இருக்கிறார். தற்போதுள்ள நூற்பு இயந்திரம் 6 கதிர்கள் உள்ள உலோக இராட்டையாகும். இதை 12 கதிர்களாக்கி, அதனை மின் சக்தியால் இயக்கினால் அதிக நூல் நூற்க முடியும். அதிகம் நூற்கப்படுவதால் நூற்பவர்களின் வருவாயும் அதிகரிக்கும். நூலின் விலையும் குறையும். நூல் விலை குறையும்போது, கதர்த் துணியின் விலையும் குறையும். அதன் மூலம் விற்பனை அதிகமாகும் என்று குறிப்பிட்டார். விரைவில் அரசு இந்த 12 கதிர் இயந்திரத்தை இயக்க முற்படும்'' என்று கதர் அதிகாரி திரு கிருஷ்ணன் தெரிவித்தார்.

இந்த நூற்பாலை தவிர வட ஆர்க்காடு மாவட்டத்தில், கையினால் செய்யும் தாள்கள் தயாரிக்கும் தொழிற்கூடம் அரப்பாக்கத்தில் உள்ளது. இராணுவ வீரர்கள் குடும்பத்தினர்களுக்கு வேலை வாய்ப்புத் தரக் கம்மவான் பேட்டையில் ஒரு தீப்பெட்டித் தொழிற்சாலை உள்ளது.

குடியானக்குப்பம், பாணாவரம் ஆகிய இடங்களில் தோல் உரிப்புத் தொழிலும், எலும்பு உரம் தயாரிக்கும் தொழிலும் நடைபெற்று வருகின்றன.

விரைவில் இங்கு சோப்புத் தயாரிக்கும் தொழிற்கூடம் அமைய இருக்கிறது.



# கிருஷ்ணகிரி அணை

காவிரி, தென்பெண்ணை,
பாலாறு—தமிழ்
கண்டதோர் வையை,
பொருநை நதி—என
மேவிய யாறு பல வோடத்—
திருமேனி செழித்த தமிழ்நாடு.

என்று பாரதியார் புகழ்ந்து பாடிய ஆறுகளில் ஒன்றான தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே கிருஷ்ணகிரி நகரின் அருகே, கிருஷ்ணகிரி அணை அமைந்துள்ளது. பெரியமுத்தூர், சின்னமுத்தூர் ஆகிய கிராமங்களைத் தன்னருகே கொண்டுள்ளதால், கிராம மக்கள் சிலர் இவ்வணையை 'முத்தூர் அணை' என்றும் கூறுவர்.


கிருஷ்ணகிரியிலிருந்து சேலம் செல்லும் நெடுஞ்சாலையில் 4 மைல் வந்து, பிறகு மேற்கே 2 மைல் சென்றால் கிருஷ்ணகிரி அணையை அடையலாம். தமிழ்நாட்டின் பல பகுதிகளிலிருந்தும், அண்டை மாநிலங்களான மைசூர், ஆந்திராவிலிருந்தும், இவ்வணையைக் காணத் தினமும் ஏராளமான உல்லாசப் பயணிகள் வருகின்றனர்.


தற்போது கிருஷ்ணகிரி அணை அமைந்துள்ள இடத்தில் ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தின் போதே ஓர் அணை கட்டத் திட்டமிடப்பட்டது. அப்போதைய திட்டத்தின் சான்றுகள் ஆங்காங்கே இன்றும் காணப்படுகின்றன. தாம்சன் திட்டம் என்ற பெயரோடு அப்போதிருந்த ஆங்கிலேய கலெக்டர் தாம்சன் இத்திட்டத்தை வகுத்தார்.

காவேரிப் பட்டணத்திலுள்ள ஒரு தெருவுக்குத் தாம்சன் பேட்டை என்று பெயர். அதன் பெயர்க் காரணத்தை அறியும்போது— கலெக்டர் தாம்சன் அப்போது இவ்விடத்தில் சில நாட்கள் முகாமிட்டுத் தென்பெண்ணை ஆற்றில் அணை கட்டத் திட்டம் வகுத்ததாகவும், அதனாலேயே காவேரிப் பட்டணத்தில் அவர் முகாமிட்டு இருந்த இடத்திற்குத் தாம்சன் பேட்டை என்று பெயர் வழங்கப்படுகிறது என்றும் கூறுவர்.

அழகாகக் காட்சி அளிக்கும் கிருஷ்ணகிரி அணையின் நீளம் 3,290 அடி. அதில் கல் அணையின் நீளம் 951 அடி. மண் அணையின் நீளம் 2,339 அடி. நீர்த்தேக்கத்தின் கொள்ளளவு 2,410 மிலியன் கன அடி. அணையின் உயரம் 105 அடி. 8 நீர் வழிந்தோடிகள் உள்ளன. அணையில் தண்ணீர் நிற்கும் உயரம் 52 அடி. இந்த அணையைக் கட்ட 1,84 லட்சம் ரூபாய்க்குத் திட்டமிடப்பட்டது. ஆனால் ரூ. 1,54 லட்சம்தான் செலவிடப்பட்டது.

இந்த அணையில் இருந்து இடது பக்கம் ஒரு கால்வாயும், வலது பக்கம் ஒரு கால்வாயும் செல்லுகின்றன. இடது கால்வாயின் நீளம் 11 மைல், 3 பர்லாங், 70 அடி; வலது கால்வாயின் நீளம் 8 மைல், 6 பர்லாங், 110 அடிகளாகும். இரு கால்வாய்கள் மூலம் 9,000 ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி ஏற்பட்டு உள்ளது. 26 ஏரிகள் இந்த அணையிலிருந்து நீர் பெறுகின்றன. இந்த அணையினால் காவேரிப்பட்டணம் வட்டாரம் பெரும்பயனை அடை





நடனமிடும் சிலையே—உன்
நளினமொரு கலையே!

கிறது. அணையைச் சுற்றிலும், அதைச் சார்ந்த ஏரிகளைச் சுற்றிலும் உள்ள கிணறுகளில் நீர் வற்றுவதே இல்லை.

இந்த அணைத்திட்டத்துடன் பாரூர் பெரிய ஏரி நீர்ப் பாசனத் திட்டமும் இணைந்துள்ளது. ஒரு குறிப்பிட்ட அளவு அவ்வப்போது கிருஷ்ணகிரி அணையிலிருந்து பாரூர் பெரிய ஏரிக்கு ஆற்றின் மூலம் தண்ணீர் விடப்படுகிறது. ஆற்றில் விடப்படும் தண்ணீர்—நெடுங்கல் என்னும் இடத்தில் உள்ள பிக்கப் அணையினால் அமைக்கப்பட்டுள்ள கால்வாய் மூலம் பாரூர் பெரிய ஏரியை அடைகிறது. பாரூர் பெரிய ஏரி மூலம் 4,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது.

தர்மபுரி மாவட்டத்தின் நெற்களஞ்சியம் கிருஷ்ணகிரி அணைப் பகுதியாகும்.

கிருஷ்ணகிரி அணைப் பூங்கா கண் கொள்ளாக் காட்சியாக அமைந்துள்ளது. இப் பூங்காவில் ஊஞ்சல் பாலம், கற்கோட்டை போன்ற குறிப்பிடத்தக்க அம்சங்களுடன் ஏராளமான சிலைகளும் உள்ளன. அணையை நிறுவிய தொழிலாளர்களுக்கு என நினைவுச் சின்னம் (முப்பட்டை கல்தூண்) ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது.

சிறுவர்கள் விளையாடி மகிழச் சிறுவர் பூங்காவும் உள்ளது. குழந்தைகள் பார்த்து மகிழ ஒரு சிறு மிருகக் காட்சிசாலையும் இப்பூங்காவில் உள்ளது.


கிருஷ்ணகிரி அணையில் தமிழ்நாடு அரசின் அலுவலகம், கிராமிய வளர்ச்சிப் பயிற்சி நிலையம், மீன் பண்ணை, கோழிப் பண்ணை, பட்டுப்பண்ணை, சிறிய சர்க்கரை ஆலை ஆகியவையும் உள்ளன. பயணிகள் தங்குவதற்காகப் பயணிகள் விடுதிகளும் உள்ளன.



மாடுதான் சிலை;
மழலை சிலை அல்ல!

(படமும் விளக்கமும்
மு. தொ. ஸ்டாலின்.)

புள்ளிமானுக்குப் புல் கொடுக்கும் பிள்ளைக் கனியமுது!



## பேசும் புத்தகம்

பள்ளிச் சிறுவர்கள் வீட்டில் பயிலப் பேசும் புத்தகத்தை ஆங்கில - அமெரிக்க நிறுவனம் ஒன்று கண்டுபிடித்திருக்கிறது. படங்கள் கொண்ட இப்புத்தகத்துடன் 'டேப்' இணைக்கப்பட்டிருக்கும். எந்தப் பக்கத்தினைச் சிறுவன் படிக்க விரும்புகிறானோ, அந்தப் பக்கத்தைப் புரட்டினால், அது பற்றிய விளக்கத்தை இந்த 'டேப்' ஒலிபரப்பும்.

மெள்ளப்படிக்கும் இயல்புடைய குழந்தைகள், திரும்பத்திரும்பப் போட்டுக் கேட்டுப் படிக்கத் தகுந்தது இந்தப் புத்தகம்.

கணக்கு, பிற மொழிகள் ஆகியவை கற்பதற்கு ஏற்ற பேசும் புத்தகங்களும் உள்ளன.




உணவுப் பொருள்களில் உறைப்புச் சுவையையும் (காரம்), மணத்தையும் ஏற்படுத்துவதற்காக மிளகாய் பயன் படுத்தப்படுகிறது. போர்ச்சுகீசியர்கள் 17-ஆம் நூற்ருண்டில், அமெரிக்காவிலுள்ள சில்லி (Chilly) என்ற மாநிலத் திலிருந்து மிளகாயைக் கொண்டு வந்து இந்தியாவில் புகுத்தியுள்ளார்கள். 'சில்லி' என்றபகுதியிலிருந்து வந்ததனுலேயே, மிளகாய்க்கு 'சில்லீஸ்' (Chillies) என்ற பெயர் வந்தது. பண்டைத் தமிழர்கள் உணவுப் பொருள்களில் உறைப்புச் சுவையையும், மணத்தையும் ஏற்படுத்த மிளகு பயன்படுத்தினுர்கள். மிளகில் உள்ள உறைப்புத் தன்மை மிளகாயில் உள்ளதால் 'மிளகாய்' என்று பெயர் ஏற்பட்டது. மிளகாய்க்குச் 'சிவப்பு மிளகு' (Red-Pepper) என்ற பெயரும் உண்டு. ஜப்பானில் மிளகாயை 'பிமென்டோ' (Pimento) அல்லது சிவப்பு மிளகு என்றே கூறுகிருர்கள். மிளகாயில் உள்ள உறைப்புத் தன்மைக்கு, மிளகாயில் உள்ள 'கேப்சைசின்' (Capsaisin) எனப்படும் பளிங்கு போன்ற, எளிதில் ஆவியாகக்கூடிய காரப் பொருள் (Crystalline Volatile Alkaloid) தான் காரணமாகும். இதனுல் மிளகாய் 'கேப்சிகம்' (Capsicum) என்றும் கூறப்படுகிறது.

அன்ருட வாழ்வில் ஏதேனும் ஒரு வகையில் மிளகாயைப்பயன் படுத்தாத குடும்பம் தமிழ் நாட்டில் இருக்க முடியாது. உலர்ந்த மிளகாயைப் பயன்படுத்துவது போலவே, பச்சை மிளகாயையும் தமிழ் நாட்டில் பெருமளவில் பயன் படுத்துகின்ருேம். மிளகாயில் வைட்டமின் 'ஏ'யும், 'சி'-யும் அதிக அளவில் உள்ளன. மிளகாய்ப் பொடி, சாம்பார்ப் பொடிஆகியவை தயாரிப்பதிலும் மிளகாய் முக்கிய இடம் பெறுகிறது. 'சாஸ்' (Sauce) எனப்படும் சுவைச் சத்து, ஆவியாகும் எண்ணெய் (Essential Oil) 'ஓலியோரெசின்' (Oleoresin) என்னும் மெழுகு, 'கேப்சைசின்' திரவம் ஆகியவைகள் தயாரிக்க மிகவும் காரமான மிளகாய்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஆயுர்வேத மருந்துகளிலும், ஆங்கில மருந்துகளிலும் மிளகாய் உபயோகமாகிறது. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் மிளகாயிலிருந்து வைட்டமின் 'சி' தயாரிக்கப்படுகிறது. மிளகாயிலிருந்து புற்று நோய் தடுப்பு மருந்து (Anti-Cancer drugs) தயாரிக்கும் ஆராய்ச்சியும் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிகிறது. ஜப்பானில் வண்ணக் குழம்புகளுடன் மிளகாய்ப் பொடியைக் கலந்து சிப்பிகளைத் தடுக்கும் வண்ணக் கலவை (Anti-Oyster—Shell Paints) தயாரித்து, கப்பலின் அடிப்பாகத்தில் பூசுவதற்குப் பயன்படுத்துகிருர்கள்.

மிளகாயில் 35 முதல் 62 சதம் வரை மேல் தோலும் (Peri-Carp), 33 முதல் 56 சதம் விதையும், 4.6 முதல் 9 சதம் வரை காம்பும் (Stem) அடங்கியுள்ளது. உறைப்புப் பொருளின் பெரும் பகுதி மிளகாயின் உள்ளே இருக்கும் கருப்பைத் தடுப்புச் சுவர்களில் (Dissepiment) தான் காணப்படுகிறது. ஒரு பகுதி மேல்தோலிலும் காணப்படுகிறது. பெரும்பாலும் விதைகளில் அதிக உறைப்புத் தன்மை இருப்பதில்லை.

மிளகாய், உறைப்பு மிகுந்தது (Hot), உறைப்புக் குறைந்தது (Mild) என இரு வகையாகப் பிரிக்கப்படுகிறது. இந்தியா, ஜப்பான், மெக்சிகோ, நைஜீரியா, இந்தோனேஷியா, தாய்லாந்து, சைனு, பாகிஸ்தான், ஆகிய நாடுகளே காரம் மிகுந்த மிளகாயை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்கின்றன. 'பாப்ரிகா' (Paprika) எனப்படும் காரம் குறைந்த மிளகாயை ஹங்கேரி, ஸ்பெயின், ருமேனியா, யூகோஸ்லேவியா, பல்கேரியா, செக்கோஸ்லோவாக்கியா ஆகிய நாடுகள் உற்பத்திசெய்து ஏற்றுமதி செய்கின்றன. உலக வியாபாரத்தில் ஒவ்வொரு ஆண்டும் 30,000 டன் உறைப்பு மிகுந்த மிளகாய் இடம் பெறுவதாகமதிப்பிடப்படுகிறது. உறைப்பு மிகுந்த மிளகாயை இறக்குமதி செய்யும் முக்கிய நாடுகள் இலங்கையும், அமெரிக்க ஐக்கிய நாடுகளுமேயாகும். உலக இறக்குமதியில் 80 சத அளவை இவ்விரு நாடுகளுமே பெற்றுள்ளுள்ளன.

உலகத்திலேயே இலங்கைதான் மிளகாய் விற்பனையாகும் மிகப் பெரிய விற்பனைக் கூடமாகத் திகழ்கிறது. உலக இறக்குமதியில் 60 சத அளவை இலங்கை ஏற்றுக்கொள்கிறது. இதுவரை இந்தியாவே, இலங்கையின் மிளகாய்த் தேவையில் 50 சத அளவை வழங்கி வந்துள்ளது. இந்தியாவிலிருந்து எற்றுமதியாகும் மிளகாயில் 95 சத அளவை இலங்கையே வாங்கி வந்துள்ளது. ஆனுல் சமீப காலத்தில் இலங்கையுடன் பாகிஸ்தானும், சீனுவும் மிளகாய் வியாபாரம் செய்யத் தொடங்கி, இந்திய விலையை விட மிகவும் குறைந்த விலைக்கு விற்கத் தொடங்கியுள்ளன. அத்துடன் இலங்கையிலும் மிளகாய் உற்பத்தியைப் பெருக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகத் தெரிகிறது. இக்காரணங்களினுல் இலங்கை விரைவில் இந்தியாவுடன் மிளகாய் வியாபாரத்தை அறவே நிறுத்திவிடக் கூடும். எனவே இந்திய மிளகாயை விற்பனை செய்யப் பல்வேறு வெளி நாடுகளை நாட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இலங்கைக்கு அடுத்தாற்போல் அதிக மிளகாய் இறக்குமதி செய்யும் நாடு அமெரிக்க ஐக்கியநாடுகள்தான். தற்பொழுது அமெரிக்க ஐக்கிய நாடுகள், மெக்சிகோ, ஜப்பான் ஆகிய நாடுகளிலிருந்தே மிளகாயை வாங்கி வருகின்றன. ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்படும் 'சான்டகா' (Santaka) ரகமே, அமெரிக்க ஐக்கிய நாடுகளில் மிகவும் புகழ் பெற்றுள்ளது. 'சான்டகா' ரக மிளகாய், செடிகளில் மேல் நோக்கிக் காய்க்கிறது. ஜப்பானிய மிளகாய் உற்பத்தியில் இந்தரகம் 90 சத அளவுக்கு இடம் பெற்றுள்ளது. ஜப்பானில் மிளகாயின் உள் நாட்டுத் தேவை நாளுக்கு நாள் பெருகிவருகிறது; அத்துடன் மிளகாய்ச் சாகுபடி செய்வதற்கு ஆகும் செலவும் அதிகமாகி வருகிறது; தொழிற்சாலைகள் பெருகி சாகுபடியாகும் நிலத்தை ஆக்கிரமித்து வருவதால், மிளகாய்ச்சாகுபடியாகும் பரப்பை அதிகப்படுத்த இயலவில்லை; ஜப்பானிய உழவர்கள் அதிக லாபம் தரும் பயிர்களைச் சாகுபடி செய்யவே விரும்புகிறார்கள்; ஜப்பானிய இளைஞர்கள், மிளகாயைக்கைகளால் பொறுக்கி எடுக்கும் வேலையை விரும்பாமல், தங்களுடைய விருப்பத்திற்கேற்ப வேறு வேலைகளுக்குப் போய்விடுவதால், அறுவடைக்குத் தேவையான கூலியாட்களும் கிடைக்கவில்லை. இக் காரணங்களினால், ஜப்பானிய மிளகாயின்விலை சமீப காலத்தில் அதிகமாகிக்கொண்டே வருகிறது. இதனால் ஜப்பானிலிருந்து அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் மிளகாயின் அளவும்குறைந்துகொண்டே வருகிறது.





நோய் தாக்காத மிளகாய்

இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டு இந்திய மிளகாயை அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம். இந்திய மிளகாய், ஏறத்தாழ ஜப்பானிய 'சான்டகா' ரகத்திற்கு இணையானது. அமெரிக்க இறக்குமதியாளர்களின்கருத்துப்படி இயல்பு வெப்ப அளவின் (Intrinsic heat) அடிப்படையில், இந்திய ரகங்கள், ஜப்பானிய ரகங்களுக்குச் சமமாக உள்ளனவாம். ஆனால் ஜப்பானிய மிளகாய், இயந்திரத்தின் மூலம் உலர்த்தப்படுவதால் மேல் தோல் கண்ணாடிபோல் பளப்பளப்பாக இருப்பதுடன், மிளகாயின் நிறத்தை (Extractable Colour) அப்படியே பிழிந்து எடுப்பதற்கு ஏற்ற வகையிலும் விளங்குகிறது.

'அமெரிக்கர்கள் தங்கள் கண்களாலேயே சாப்பிடுகிறார்கள்'. (Americans eat with their eyes.) என்று சொல்லப்படுகிறது. மணம், நயம், ஊட்டச்சத்து, முழுமை ஆகியவைகள் நிறத்துடனேயே தொடர்பு கொண்டுள்ளதால், அமெரிக்கர்கள் பளபளக்கும் சிவப்பு நிறத்தையே விரும்புகின்றனர். நிறமே உணவைச் சாப்பிடும் அளவுக்கு சிறப்புறச் செய்வதாகவும், மகிழ்ச்சியுடன் எதைச் சாப்பிடுகிறார்களோ அவைகளே எளிதில் செறிப்பதாகவும் அமெரிக்கர்கள் கருதுகிறார்கள். எனவே பளப்பளப்பான சிவப்பு நிற மிளகாயையே அமெரிக்க இறக்குமதியாளர்கள் விரும்புகிறார்கள். மேலும், அமெரிக்க இறக்குமதியாளர்கள், பொதுவாக, மிளகாய்ப் பழங்களைப் பறித்தவுடனேயே மிளகாயின் காம்பு, வட்டம் (Calyx) ஆகிய புல்லிகளை அகற்றிவிட வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். காம்புகளும், புல்லி வட்டமும் இல்லாதிருந்தால், மிளகாயை இறக்குமதி செய்தவுடனேயே அறைத்துப் பொடியாக்கலாம் என்றும், காம்புகளுடனும், புல்லி வட்டங்களுடனும் மிளகாயைப் பொடி செய்தால், மிளகாய்ப் பொடியில் நார்ப் பொருள்கள் அதிகமாகிச் சுவையைக் கெடுத்து விடும் என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

ஆந்திரப் பிரதேசத்தில் 'லாம்' என்ற இடத்திலுள்ள மிளகாய் ஆராய்ச்சி நிலையத்தில் நடத்தப் பெற்ற ஆரம்ப சோதனைகள், மிளகாயை 36 முதல் 40 மணிக்குள் 46 முதல் 48 டிகிரி சென்டிகிரேடு வெப்பத்தில் இயந்திரம் மூலமாகச் செயற்கை முறையில் உலர்த்தலாம் என்பதைப் புலனாக்கியுள்ளது. இயந்திரத்தின் மூலமாக உலர்த்துவதால் மிளகாயை விரைவாக உலர்த்த முடிவதுடன் நல்ல நிறத்தையும் அளிக்கிறது. எனவே, காம்பு, புல்லி வட்டம் இல்லாமல் மிளகாயைப் பிரித்து இயந்திரம் மூலம் உலர்த்தினால், இந்திய மிளகாய்க்கு அமெரிக்க ஐக்கிய நாடுகளில் நல்ல தேவை ஏற்படக்கூடும்.




நோய் தாக்கிய மிளகாய்

### இந்தியாவில் மிளகாய் உற்பத்தி

இந்தியாவில் சுமார் 6,73,600 ஹெக்டர் பரப்பில் மிளகாய் சாகுபடி செய்யப்படுகிறது. இதிலிருந்து ஆண்டுதோறும் சுமார் 4,02,900 டன் மிளகாய் உற்

பத்தியாகிறது. இந்த உற்பத்தியில் 2.5 சத அளவு மட்டுமே ஏற்றுமதியாகிறது. சராசரியாக ஆண்டுதோறும் இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் மிளகாயின் அளவு 9,215 டன்களேயாகும். இதனுல் ஆண்டுதோறும் சுமார் 2.59 கோடி ரூபாய் (1960-61 முதல் 1966-67 வரையுள்ள ஆண்டு சராசரி) வருமானம் இந்தியாவிற்குக் கிடைக்கிறது.

இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் மிளகாயில் 95 சத அளவை இலங்கை வாங்கிக்கொள்கிறது. ஏடன், பாக்ரீன், குவாய்ட், தென் ஆப்பிரிக்கா, சான்சிபார், பெம்பா, மோரிஸ் ஆஸ்திரேலியா, நியுசிலாந்து, யூ.கே. ஆகிய இதர நாடுகளும் இந்தியாவின் மிளகாயை இறக்குமதி செய்கின்றன. ஏற்றுமதியை அதிகரித்து அந்நியச் செலாவணியை அதிகமாகச் சம்பாதிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், நான்காவது ஐந்தாண்டுத் திட்ட இறுதி ஆண்டில் (1973-74), 16,000 டன் ஏற்றுமதி செய்து ரூபாய் 4.80 கோடி வருமானம் பெறுமளவுக்கு ஆண்டு தோறும் படிப்படியாக வளரத் திட்டமிடப்பட்டுள்ளது.

அது போலவே, பெருகி வரும் மக்கட் தொகையின் தேவையையும் ஈடு செய்ய வேண்டியுள்ளது. இந்தியாவில் உள்ள ஒவ்வொருவருக்கும் ஆண்டொன்றுக்கு 830 கிராம் மிளகாய் தேவைப்படுவதாகக் கணக்கிட்டிருக்கிருர்கள். இதன்படிப் பார்த்தால், இந்தியாவின் உள் நாட்டுத் தேவையை ஈடு செய்ய ஆண்டொன்றுக்கு 5 இலட்சம் டன் மிளகாய்க்குமேல் தேவைப்படுகிறது.

நமது உற்பத்தியைவிடத்தேவை அதிகமாக இருப்பதனுலேயே, தற்பொழுது பற்ருக் குறை நிலவுகிறது. இதன் காரணமாகவே, மிளகாய் விலை நாளுக்கு நாள் உயர்ந்து வருகிறது.

**உற்பத்தி பெருகுகிறது**

தமிழ் நாடு அரசின் பசுமைப்புரட்சித் திட்டத்தால் ஆண்டுக்கு ஆண்டு உணவு தானியங்களின் உற்பத்தி அதிகரித்துக் கொண்டு வருகிறது.

1968-69-ல் 53 லட்சம் டன் உணவு தானியம் உற்பத்தி செய்யப்பட்டது. அதில் 36·5 லட்சம் டன் அரிசி.

1969-70-ல் உணவு தானிய உற்பத்தி 63 லட்சம் டன்னுகவும், அதில் அரிசி மாத்திரம் 45 லட்சம் டன்னுகவும் உயர்ந்தது.

1970-71-ல் உணவு தானிய உற்பத்தியை 67 லட்சம் டன்னுக (அரிசி 49 லட்சம் டன்) உயர்த்தத் தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.

### தமிழ் நாட்டின் நிலைமை.

இந்தியாவில், மிளகாய் சாகுபடியாகும் பரப்பளவைப் பொறுத்தவரையில் தமிழ் நாடு 4-வது இடத்திலிருந்தாலும், உற்பத்தியைப் பொறுத்த வரையில் தமிழ் நாடே முதல் இடம் வகிக்கிறது · 1966-67-ம் ஆண்டின் புள்ளி விவரப்படி அந்த ஆண்டில் மகாராட்டிராவில் 1,70,200 ஹெக்டரிலும், ஆந்திராவில் 1,46,700 ஹெக்டரிலும், மைசூரில் 95,300 ஹெக்டரிலும், தமிழ் நாட்டில் 71,320 ஹெக்டரிலும் மிளகாய் சாகுபடியாகியுள்ளது. ஆனுல் அந்த ஆண்டில் தமிழ் நாட்டில் 96,160 மெட்ரிக் டன், மகாராட்டிராவில் 90,900 மெட்ரிக் டன், ஆந்திராவில் 86,700 மெட்ரிக் டன், மைசூரில் 25,000 மெட்ரிக் டன் மிளகாய் உற்பத்தியாகியுள்ளது. இதற்குக் காரணம் தமிழ் நாட்டில் ஹெக்டர் மகசூல் உற்பத்தி அதிகமாக இருப்பதேயாகும் என்பதைப் பின் கண்ட புள்ளி விவரங்கள் புலப்படுத்துகின்றன.

| | சராசரி ஹெக்டர் மகசூல் (கிலோவில்). |
|---|---|
| மகாராட்டிரா | 534 |
| ஆந்திரப் பிரதேசம் | 591 |
| மைசூர் | 262 |
| தமிழ் நாடு | 1,339 |
| அனைத்து இந்தியச் சராசரி | 598 |

இந்தியாவின் மொத்த உற்பத்தியில், ஏறத்தாழ 23 சத அளவைத் தமிழ்நாடு கொடுக்கிறது. இந்தியாவில் பயிரிடப்படும் பல்வேறு ரகங்களில் மிகவும் முக்கியமானது ‘சன்னம்’ எனப்படும் ரகமே. இந்த ரகத்தைப் பெருமளவில் பயிரிடுவது தமிழ்நாடும், ஆந்திரப் பிரதேசமுமே. ‘சன்னம்’ எனப்படும் ரகம் ஆண்டு தோறும் 1.8 இலட்சம் டன் மகசூல் அளித்து இந்தியாவின் மொத்த உற்பத்தியில் ஏறத் தாழ 45 சத அளவுக்கு இடம் பெறுகிறது.

தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் தேவைக்கு மேல் மிளகாய் உற்பத்தியானுலும், மற்ற மாநிலங்களில் ஏற்பட்டுள்ள பற்ருக்குறையின் காரணமாகத்தமிழ் நாட்டிலும் மிளகாய் விலை ஏறி விட்டது. ஆந்திரத்து மிளகாயும் மைசூர் மிளகாயும் தமிழ் நாட்டின் தூத்துக்குடி துறைமுகம் மூலமாகவே ஏற்றுமதி செய்யப்படுகிறது.

தமிழ் நாட்டில் மிளகாய் சாகுபடியாகும்பரப்பில் 75சதப்பரப்பு இறைவையாகப் பயிரிடப்படுகிறது. தமிழ் நாடெங்கும் மிளகாய் பயிரிடப்பட்டாலும் பரப்பளவைப் பொறுத்தவரையில் இராமநாதபுரம் மாவட்டமே முதலிடத்தில் உள்ளது. ஆனுல் உற்பத்தியைப் பொறுத்தமட்டில் திருநெல்வேலி மாவட்டம் முதலிடம் வகிக்கிறது. தமிழ் நாட்டின் மொத்த உற்பத்தியில் 75 சதஅளவை இராமநாதபுரம், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய 4 மாவட்டங்களும் அளிக்கின்றன.

தமிழ் நாட்டில் நீண்ட பழம் உடைய சம்பா ரகம் (சாத்தூர் சம்பா), உருண்டையான பழம் உடைய குண்டு அல்லது முண்டு ஆகிய இரண்டு ரகங்களுமே முக்கியமாகப் பயிரிடப்படுகின்றன. இவ்விரு ரகங்களுமேஇலங்கைக்கு ஏற்றுமதியாகின்றன. சாத்தூர் நீண்ட வகை, மெல்லிய சிறிய வகை என சம்பா ரகத்தில் 2 வகை உண்டு. இவை இரண்டுமே உறைப்பு உள்ளவை ( Hot ). ஆனுல் சிறிய வகை உறைப்பு மிகுந்தது. இவை இரண்டுமே ‘சாண்டகா’ ரகத்திற்குச் சமமானவை. குண்டு மிளகாய் (குடை மிளகாய்) உறைப்பு குறைந்தது ( Mild ). இது

‘பாப்ரிகா’ ரகத்திற்கு ஒப்பானது. எனவே தமிழ் நாட்டின் 2 ரக மிளகாய்க்கும் மேல் நாட்டில் பரவ வாய்ப்பு உள்ளது.

எத்தனையோ ரக மிளகாய்கள் தமிழ்நாட்டில் சாகுபடி செய்யப்பட்டு வந்தாலும், அவைகளுள் தற்பொழுது உள்ள நிலைமையில் ‘கே. 1’ (கோவில்பட்டி-1) மிளகாய் ரகமே பல வகைகளுள் சிறந்து விளங்குகின்றது.

மற்ற ரகங்களைக் காட்டிலும் கே. 1 மிளகாயில் உறைப்புத் தன்மையும், நெடியும் அதிகமாக உள்ளது; நல்ல அழுத்தமான பளபளப்பான சிவப்பு நிறமுடையது ; இச்சிவப்பு நிறம் நீண்ட நாட்களுக்கு மங்காமலிருக்கும். இக்குணங்கள் இருக்கும் ரகங்களையே குறிப்பாக அமெரிக்க ஐக்கிய நாட்டு மக்கள் பெரிதும் விரும்புவதால், கே. 1 மிளகாயைப் பயிரிட்டு, அவைகளை ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணியைப் பெருமளவில் சம்பாதிக்கலாம்.

கே. 1. மிளகாயில் விதையளவும் அதிகம். நாட்டு ரகத்தில் ஒரு மிளகாயில் 60 விதை என்றால், கே. 1 மிளகாயில் 73 விதைகள் இருக்கும். இதனால் அரைத்துப் பொடியாக்கும் போது மிளகாய்ப் பொடி விகிதம் மற்ற உள்நாட்டு ரகங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்கும். தற்பொழுது தமிழ் நாட்டின் மிளகாய்ப் பொடிக்கும், சாம்பார்ப் பொடிக்கும் வெளிநாடுகளில் நல்ல தேவை ஏற்பட்டுள்ளதால், கே. 1 மிளகாய் இவ்வகையிலும் நல்ல வருமானத்தைத் தமிழ் நாட்டிற்கு ஈட்டிக் கொடுக்கும்.

கே. 1 மிளகாய் சம்பா ரகத்தைச் சேர்ந்தது; நீளக்காய் உடையது ; மற்ற நாட்டு மிளகாய் வகைகளைக் காட்டிலும் 20 சத விகிதம் அதிக மிளகாய் வற்றல் தரவல்லது. இந்த ரகம் ஏக்கருக்கு 771 கிலோ உலர்ந்த மிளகாய் (சுமார் 52 மூட்டைகள் வற்றல்) கொடுக்கும். இது நாட்டு சாத்தூர் சம்பா மிளகாயைக் காட்டிலும் 116 கிலோ வற்றல் (சுமார் 8 மூட்டை) அதிகமாகக் கொடுக்கிறது.

நாட்டு ரக மிளகாயில் ‘திரிப்ஸ்’ என்ற தவிடு போன்ற நுண்ணிய செள்ளுப் பூச்சிகள் ‘இலை சுருட்டு’ நோயை விளைவிக்கின்றன. ஆனால் கே. 1 மிளகாய் ‘திரிப்ஸ்’ பூச்சியின் தாக்குதலை ஓரளவுக்குத் தாங்கும் சக்தியுடையது. ‘பழ அழுகல் நோய்’, ‘நுனியிலிருந்து காய்தல்’ ஆகிய நோய்களையும் அதிக அளவில் எதிர்த்துத் தாங்கிக் கொள்ளும் வல்லமையுள்ளது கே. 1 மிளகாய்.

இத்தகைய சிறப்புக் குணங்களைக் கொண்ட ‘கே. 1’ மிளகாயை முக்கியப் பட்டம் (செப்டம்பர்-அக்டோபர் விதைப்பு), கோடைப்பட்டம் (மார்ச்-ஏப்ரல் விதைப்பு), ஆடிப்பட்டம் (ஜூன் ஜூலை விதைப்பு) ஆகிய மூன்று பட்டங்களில் விதைக்கலாம். இதன் வயது 180 நாட்கள் (6 மாதம்). கே. 1 மிளகாயைப் பயிரிட்டு மகசூலைப் பெருக்கக் கீழ்க்கண்ட சாகுபடி முறைகளை மேற்கொள்ளுமாறு பரிந்துரைக்கின்றோம்.

**நாற்றங்கால்.**

நாற்றங்கால் தயாரிக்க மேட்டுப்பாங்கான நிலத்தைத் தேர்ந்தெடுங்கள். நாற்றங்காலை நன்கு உழுது புழுதியாக்கவும். ஒரு ஏக்கர் மிளகாய் நடவேண்டுமானால், ஒரு சென்ட் நாற்றங்கால் போதுமானதே. ஒரு சென்ட் நாற்றங்காலுக்கு ஒரு வண்டி கம்போஸ்ட் எரு இடவும். 180 சென்டி மீட்டர் (6 அடி) நீளம், 120 சென்டி மீட்டர் (4 அடி) அகலமுள்ள மேட்டுப்பாத்திகளை அமைத்து நீர் பாய்ச்சுவதற்கு ஏற்ற ஊடு வாய்க்கால்களையும் அமைத்துக் கொள்ளவும். 500 கிராம் கே. 1 மிளகாய் விதையை 1 கிராம் அக்ரசான் மருந்துடன் கலந்து ஒரு சென்ட் நாற்றங்காலில் விதைத்து, பின்பு சலித்த குப்பை எருவை மென்மையாகப் பரப்பி விதையை மூடவும். மெல்லிய பூவுடைய பூவாளியால் முதல் இருமுறை நீர் தெளித்து, பிறகு இரண்டு நாட்களுக்கு ஒரு முறை ஊடு வாய்க்கால் மூலம் நீர் பாய்ச்சவும். மண்ணின் ஈரத்தைப் பொறுத்து நீர் பாய்ச்சி வரவும். தண்ணீர் பாத்திகளில் தேங்கி நிற்காவண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும். ‘பைட்டலான்’ என்ற மருந்தினால் (500 கிராம் மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து) விதைத்த 10-வது நாளும், பின்பு 15 நாட்களுக்கு ஒரு முறையாகவும் நாற்றங்காலை நனைக்கவும். மிளகாய் ‘திரிப்ஸ்’ பூச்சியைக் கட்டுப்படுத்தவும், வளர்ச்சியைத் துரிதப்படுத்தவும் என்டரின் மருந்தை (1 மில்லி லிட்டர் மருந்தை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து) தெளிக்கவும். நாற்றுவிட்ட 40 முதல் 45 நாட்களுக்குள், நாற்றைப் பறித்து நடவு செய்யவும்.

**நடவு வயல்.**

மிளகாய் நடவேண்டிய வயலை நன்கு புழுதியாகும் வரை உழுது விடவும். கடைசி உழவில் ஏக்கருக்கு 20 வண்டி (10 டன்) தொழு எரு, 100 கிலோ சூப்பர் பாஸ்பேட், 25 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவைகளை அடியுரமாக இடவும். அதன் பின் வரப்புக் கட்டும் கருவியினால் (Bund former) 9 அடி நீளம், 9 அடி அகலம் உள்ள சதுரப் பாத்திகள் அமைத்து தண்ணீர் பாய்ச்சுவதற்குத் தேவையான ஊடு வாய்க்கால்களை அமைக்கவும். அல்லது 45 சென்டி மீட்டர் (1½ அடி) இடை வெளிக்கு ஒரு பார் வீதம்,




இலங்கை அரசு மூன்று புதிய பல்கலைக்கழகங்களை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது. அதில் ஒன்று தமிழர் வாழ் பகுதியான இலங்கைத் தீவின் வட பகுதியில் இருக்கும். மற்ற இரண்டும், கிழக்குப் பகுதியிலும், தெற்குப் பகுதியிலும் அமைக்கப் படும்.

தமிழர் பகுதியில் தனிப் பல்கலைக் கழகம் அமைவது, இலங்கைத் தமிழர்களின் கால் நூற்றாண்டுக் கனவினை நனவாக்குவதாகும்.

பார் அமைக்கும் கருவியால் (Ridge Plough) பார் அமைக்கவும்.

வேர்கள் பழுதாகாமல் நாற்றைப் பறித்துப் பாத்திகளில் 45 சென்டி மீட்டர் ($1\frac{1}{2}$ அடி) இடைவெளியில் வரிசை பிடித்து, வரிசையில் செடிக்குச் செடி 45 சென்டி மீட்டர் ($1\frac{1}{2}$ அடி) இடைவெளி விட்டு நடவு செய்யவும். பார்கள் அமைத்திருந்தால், பார்களின் ஒரு பக்கச் சரிவில் செடிக்குச் செடி 45 சென்டி மீட்டர் இடைவெளி விட்டு நாற்றுகளை நடவு செய்யவும்.

மிளகாய் வயலுக்கு 3 முறை, கைக்களை எடுக்கவும் ; 3 முறை நிலத்தைக் களைக் கொத்தால் கொத்திக் கொடுக்கவும்.

### மேலுரமிடுதல்.

மிளகாய் நாற்று நட்ட 50-வது நாள், 14 கிலோ தழைச் சத்து அளிக்க 70 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 30 கிலோ யூரியா உரமிட வேண்டும். நாற்று நட்ட 75-வது நாள் மீண்டும் 14 கிலோ தழைச்சத்து அளிக்க 70 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 30 கிலோ யூரியா உரமிட வேண்டும். செடிகளைச் சுற்றிலும் சற்றுத் தூரத்தில் மேற்படி இரசாயன உரங்களை வளைய முறையில் இட்டு (Ring Method) மண்ணால் மூடவும்.

மிளகாய்ச் செடிக்கு வாரம் ஒரு முறை நீர் பாய்ச்சவும். நிலத்தில் ஈரம், மழை முதலியவற்றைப் பொறுத்து நீர் பாய்ச்சும் இடைவெளி நாட்களை அதிகமாக்கிக் கொள்ளலாம் ; ஆனால் வயலில் தண்ணீர் தேங்கி நிற்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

### பயிர்ப் பாதுகாப்பு.

கே. 1 மிளகாயைப் பொறுத்த வரையில் கீழே குறிப்பிட்டுள்ள பயிர்ப் பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ளுவது மிகவும் அவசியமாகும்.

'திரிப்ஸ்' என்ற பூச்சி தளிர் போன்ற இலைகளின் சாற்றை உறிஞ்சி விடுகிறது. இதனால் இலைகள் முரணித்துச் சுருண்டு விடும். இதைச் 'சுருள் நோய்' என்றும் 'முருள் நோய்' என்றும் கூறுகின்றனர். இப்பூச்சிகள் இலையின் அடிப்பாகத்தில் அதிகமாகக் காணப்படும். இப்பூச்சிகளைக் கட்டுப்படுத்த 'ரோகார்' என்ற மருந்தை (100 மில்லி லிட்டர் மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து) நாற்று நட்ட ஒரு மாதம் கழித்தும், பின்பு 15 நாட்களுக்கு ஒரு முறையாகவும் மொத்தம் 6 முறை தெளிக்கலாம். அல்லது 10 சத பி.எச்.சி. தூளை ஏக்கருக்கு 10 கிலோ வரை தூவலாம். அல்லது என்டரின் மருந்து (100 மில்லி லிட்டர் மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து) மேற்கூறிய படி 6 தடவைகளில் தெளிக்கலாம்.

'காய்துளைக்கும் புழு' இலையைத் தின்று, மிளகாயைக் காம்பின் அருகில் துளைத்து விடும். இதனால் பழம் வெளிர் நிறமாகி விழுந்து விடும். இதனால் பெருஞ் சேதம் ஏற்படும். இப்புழுக்களை ஆரம்பகாலத்தில் பொறுக்கி எடுத்துக் கொன்று விடலாம். இவைகளைக் கட்டுப்படுத்த டி.டி.டீ. 50 சதம் (450 கிராம் மருந்தை 225 லிட்டர் தண்ணீரில் கலந்து) தெளிக்கவும். மேலும் புழுக்கள் காணப்படின் மீண்டும் ஒரு முறை டி.டி.டீ. தெளிக்கவும். முன் தடுப்பாக 2 முறை டி.டி.டீ. 50 சதம் தெளிப்பதே மேல்.

'நுனியிலிருந்து வாடல் நோய்,' 'பழ அழுகல்நோய்' ஆகியவைகள் தாக்கினால் கிளையின் நுனிப்பாகம் மேலிருந்து வாடிக்கொண்டு வரும். பழம் அழுகித் தாக்கப்பட்ட பாகம் வெளிர் நிறமாகி விடும். இதனால், மகசூல் குறைவதுடன், தரமும் குறைந்து விடும். இதைக் கட்டுப்படுத்த நாற்று நட்ட ஒரு மாதம் கழித்து 'பைட்டலான்' (250கிராம் மருந்தை, 100 லிட்டர் தண்ணீரில் கலந்து) அல்லது ஜினப் (150 கிராம் மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து) தெளிக்கவும். பின்பு 15 நாட்களுக்கு ஒரு முறையாக 5 முறை தெளிக்கவும்.

'சாம்பல் நோய்' தாக்கப்பட்ட இலைகளின் அடிப்பாகத்தில் மென்மையான சாம்பல் போன்ற படிதல் காணப்படும். இதைக் கட்டுப்படுத்த நீரில் கரையக் கூடிய கந்தகம் (1கிலோ மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கரைத்து) தெளிக்கவும்.

'வாடல் நோய்'(Wilt) தாக்கப்பட்ட செடி முழுவதுமே வாடி விடும். இதை உழவர் பெருமக்கள் கவனித்து உடனே பைட்டலான் மருந்தை (450 கிராம் மருந்தை 180 லிட்டர் தண்ணீரில் கரைத்து) அல்லது நீரில் கரையக் கூடிய செரசான் 0·1 சதம் (1 கிராம் மருந்தை 1 லிட்டர் தண்ணீரில் கரைத்து) தெளிக்க வேண்டும். அத்துடன் செடிகளைச் சுற்றிலும் தரையையும் நனைக்கவேண்டும். இவ்வாறு செய்யாவிட்டால் மற்றச் செடிகளையும் இந்நோய் விரைவில் தாக்கும்.

மேற்கூறிய சாகுபடி முறைகளை மேற்கொண்டு கே. 1 மிளகாய் சாகுபடி செய்தால், விதை விதைத்த 3 மாதம் கழித்து முதல் தடவையாக மிளகாய் பறிக்கலாம். காய்களாகவே பறிப்பதென்றால் 3 அல்லது 4 நாட்களுக்கு ஒரு முறையும், பழங்களாக எடுப்பதென்றால் 10 நாட்களுக்கு ஒரு முறையும் பறிக்கலாம். ஒரு ஏக்கரிலிருந்து சுமார் 3,000 கிலோ பச்சை மிளகாய் கிடைக்கும். பழமாக எடுத்துக் காயவைத்து வற்றலாக ஆக்கினால் ஒரு ஏக்கரிலிருந்து சராசரியாக 771 கிலோ மிளகாய் வற்றல் கிடைக்கும்.

எனவே, மிளகாய் விலையைக் குறைக்க, கே. 1 மிளகாய் பயிரிட்டு நாட்டுக்கு நல்லது செய்யுங்கள் என்று உழவர் பெருமக்களைக் கேட்டுக்கொள்கின்றோம். கே. 1 மிளகாய் உழவர் பெருமக்களின் வருமானத்தையும், தமிழ் நாட்டின் வருமானத்தையும் பெருக்க வழிவகுக்கும்.

### யாருக்கு உதவி ?

தம்பா நகர வீதியில் லட்ச ரூபாய் மதிப்புள்ள புத்தம் புதிய ரேஸ் கார் ஓடாமல் நின்றுகொண்டு இருந்தது. ஓட்டுகிறவர் எவ்வளவோ முயன்றும் இயந்திரம் வேலை செய்யவில்லை. அருகில் நின்ற போலீஸ்காரர்கள் அரை பர்லாங் தூரம் சிரமப்பட்டுத் தள்ள, கார் புறப்பட்டது.

கார் மறைந்த பின்தான் போலீஸாருக்குத் தெரிய வந்தது, அது திருட்டுக் கார் என்று!



# தோலணிகள் காலணிகள்

**வே**லூர் கிறித்தவ மருத்துவ மனைக்கு எதிர்ப்புறத்தில் ஒரு சிறிய கடை. கதர்-கிராமத் தொழில் வாரியத்தினுல் நடத்தப் படும் இந்தக் கடையின் முன் பகுதியில் சிறிய இடத்தில் அழ கான, விதவிதமான காலணி கள் அடுக்கி வைக்கப்பட் டுள்ளன.

அருகில் சென்று வினவும் போதுதான் அதன் மகத்துவம் தெரிகிறது. காலணிகளும் தோல் பைகள் முதலியனவும் கொள்ளை மலிவாக இங்குக் கிடைக்கின்றன.

பெண்களுக்கான அழகிய காலணியின் விலை ரூ. 8·50. வெளியில், அதாவது தனியார் கடைகளில் இதன் விலை ரூ. 13.

பஞ்சாபி ரகச் செருப்பு இங்கு ரூ. 15·95 (வெளியில் 22·65).

உயர்ந்த ரக அம்பாசிடர் ஷூ ரூ. 23·50 (வெளியில் 45 முதல் 50 ரூபாய் வரை விற்கப்படு கின்றன).

தோலினுலான வெள்ளை நிற டென்னிஸ் ஷூ ரூ. 15·13 (வெளியே ரூ. 32·50).

பெரிய தோல்பை (documentary bag) ரூ. 22·50 (வெளி யில் ரூ. 35-க்குக் குறைவாகக் கிடைக்காது!)

ஆனந்தா என்ற பெயருள்ள அழகான கடிகார தோல்பட்டை (ஸ்டிராப்) யின் விலை இங்கு ரூ. 3·50 (வெளியில் 5·70 இருக்கும்).

டிரான்சிஸ்டருக்கான தோல் பை, காமிராவிற்கான தோல்பை, ஜேம்ஸ்பாண்ட் ரகப் பெட்டி ஆகியவைகூட இங்கு செய்யப் படுகின்றன.

இவை தரத்திலும் அமைப்பி லும், மிகப் பெரிய நிறுவனங் களில் தயாராகும் பொருட் களுக்கு ஈடாகவுள்ளன.

நான்கு தொழிலாளர்கள், இரண்டு தையல் இயந்திரங் களின் துணை கொண்டு தயாரிக் கும் இந்தத் தோல்பொருட் கள் ஓர் ஆண்டுக்கு 50,000 ரூபாய்க்கு விற்பனை ஆகின்றன. ஆண்டுக்கு லாபம் ரூ. 12,000. இங்கு தயாராகும் காலணிகள், தோல் பை முதலியன தமிழக மெங்கும் உள்ள சிறப்பங்காடி கள், குறளகம் ஆகியவற்றிற்கு விற்பனைக்காக அனுப்பப்படுகின் றன.

இங்குச்செல்கிறவர்கள் யாரும் இந்தப் பொருட்களின் தரத்தை யும் மலிவான விலையையும் பார்த்த பின் வாங்காமல் திரும்ப மாட்டார்கள்.



இத்தொழிலில் இன்னும் சில புதிய நுணுக்கங்களையும், உத்திகளையும் கையாளுவதற் காகத் தமிழ்நாடு அரசு 8 பேர்களைத் தேர்ந்தெடுத்து ஆக்ராவிற்கு ஒரு மாதப்பயிற் சிக்காக அனுப்பிவைக்கிறது. அதில் இத்தொழிற்கூடத் தைச் சேர்ந்த தொழிலாளர் களான ஈ.எஸ். ஜெயராமன், ஈ. கே. சுப்பிரமணி, ஈ. கே. காந்தராஜ், எஸ். கந்தசாமி ஆகியோரும் செல்கின்றனர்.

பரம்பரையாக இத்தொழி லைச் செய்துவரும் இத் தொழிலாளர்களுக்குப்பெயர் பெற்ற நிறுவனங்களின் பொருட்களை மிஞ்சும் வண் ணம் சிறந்த காலணிகளைத் தயாரிக்க வேண்டுமென்ற ஆர்வமும், ஆற்றலும் ஒருங்கே அமைந்துள்ளன.

அறுசுவை உண்டிகள் என்பவை, என்னவோ, அவற்றின் சுவைகளுக்கேற்ப அமைந்த ஆறு வகைச் சுவைகளைக் குறிக்கின்றன. ஆயினும் அந்த அறு சுவையை உண்டாக்கக் கூடிய காய்கறி வகைகளும் செய்முறைகளும் வேறுபடும் பொழுது எத்தனையோ விதத்தில் மாறுபட்டு, வேறுபட்ட சுவைகளை அளிக்கின்றன.

அச்சுவைகளை உண்டாக்க நாம் சமையல் செய்யும் காய், ஒரே காயாக இருப்பினும் ஒவ்வொரு விதத்தில், அதுவும் புதிய பல முறைகளில் நாம் செய்ய முற்படும் போது அதனதன் தனித்தனி ருசியை, நாம் பகுத்துணர முடிகின்றது.

இங்கே கீழே கொடுக்கப்பட்டுள்ள காய்கறி உணவு வகைகள் நாம் தினம் தினம் செய்து சாப்பிட்ட போதும், வேறு முறைகளில் செய்யும் பொழுது சுவை கூடுகின்றன. மகாராஷ்டிரம்—குஜராத் மாநிலங்களில் இவ்வுணவு வகைகள் அதிகமாக நடைமுறையில் உள்ளன.

## தக்காளி உருளைக் கிழங்கு கூட்டு

| | |
|---|---|
| தேவையான பொருள்கள். | (அளவுகள் பத்துப்பேருக்கு). |
| உருளைக்கிழங்கு. | 1 கிலோ, |
| தக்காளி .. | 360 கிராம். |
| கொத்தமல்லித் தழை. | ஒரு சிறு கட்டு. |
| பச்சைமிளகாய். | 20 கிராம். |
| இஞ்சி .. | 7 கிராம். |
| மஞ்சள்பொடி. | 2 டீஸ்பூன். |
| மிளகாய்ப்பொடி | $\frac{1}{4}$ கிராம். |
| கடுகு .. .. | $\frac{1}{4}$ ஸ்பூன். |
| உப்பு .. .. | ருசிக்குத் தக்கபடி. |
| சர்க்கரை .. | $1\frac{1}{2}$ ஸ்பூன். |
| எண்ணெய் .. | 100 கிராம். |

செய்முறை—

வாணலியை அடுப்பில் வைத்து அது சிறிது சூடு கண்டவுடன் மேற்குறிப்பிட்ட அளவில் உள்ள எண்ணெய்யை அதில்ஊற்றி நன்ருகக்காய்ந்தவுடன்(சுட்டவுடன்) கடுகை, (உளுத்தம் பருப்பும் சிறிது சேர்த்துக் கொள்ளலாம். வேண்டுமானுல் கடலைப் பருப்பும் $1\frac{1}{2}$ டீஸ்பூன் சேர்த்துக் கொள்ளலாம்) தாளிக்கவும்.

பின்னர் நறுக்கி வைத்துள்ள உருளைக்கிழங்கை நன்ருக அலசிய பின் அவ்வாணலியில் விட்டு நன்ருகச் சுருளச் சுருள வதக்கவும். பின்னர் 1 டம்ளர் தண்ணீர் விட்டு, வதக்கிய கிழங்கை வேக வைக்கவும். தக்காளியையும் நறுக்கிக்கொண்டு மீதிப் பொருள்களையும் அதில் போட்டு மெதுவான சூட்டில் வேக விடவும். இவையெல்லாம் சேர்ந்து நன்ருக வெந்து, கொதி வந்தவுடன், அதில் ஒருமூடி தேங்காய்த் துருவலைப் போட்டுக் கிண்டி இறக்கி வைத்தபின்னர் உண்டு மகிழவும்.

## வெஜிடபிள் பட்டீஸ்

| | |
|---|---|
| தேவையான பொருள்கள். | அளவுகள் (பத்துப் பேருக்கு) |
| உருளைக்கிழங்கு. | 800 கிராம். |
| ரொட்டி .. | 80 கிராம். |
| பச்சைப் பட்டாணி அல்லது | 180 கிராம். |
| காய்ந்த பட்டாணி, | 90 கிராம். |
| பச்சை மிளகாய். | 95 கிராம். |
| இஞ்சி .. | ஒரு துண்டு. |
| வெங்காயம் .. | 100 கிராம். |
| எலுமிச்சம் பழம். | சிறிதளவு. |
| கரம் மசாலா .. | ஒரு சிட்டிகை |




உருளைக் கிழங்கை வேக வைத்து உரித்த பின் நன்ருக நசுக்கி வைத்துக் கொள்ளவும். ரொட்டியைத் தண்ணீரில் நனைத்து, பிறகு பிழிந்து, உருளைக் கிழங்கோடு சேர்க்கவும். உப்பையும், எலுமிச்சம் பழச் சாற்றையும் அதில் ஊற்றி நன்ருகக் கிண்டிவிடவும்.

பட்டாணியை உரித்து நறுக்கிக் கொள்ளவும். பச்சை மிளகாயையும் இஞ்சியையும் நன்ருக அரைத்து வைத்துக் கொள்ளவும். வாணலியில் எண்ணெய் விட்டு, நறுக்கி வைத்துள்ள வெங்காயத்தை நன்ருகச் சுருளச் சுருள வதக்கி, அது பொன் நிறமானவுடன், அரைத்து வைத்துள்ள பச்சை மிளகாயையும் இஞ்சியையும் அதில் போடவும்.

அதில் பட்டாணியையும், உப்பையும் போட்டு, பட்டாணியை வேக வைக்கவும். நன்ருக வெந்தவுடன் கொத்தமல்லித்தழை, கரம் மசாலா இவைகளைப் போட்டு நன்ருகக் கலக்கவும். உருளைக்கிழங்கையும் பட்டாணியையும் சமமாகப் பிரித்துக் கொண்டு, உருளைக் கிழங்கைக்கிண்ணம்போல்செய்து கொண்டு (குழிவிட்டுக்கொண்டு) அதில் பட்டாணியைப் போட்டு மூடவும். பொன் நிறமாகும் வரை பொரித்தபின் இறக்கி உண்ணவும்.

கீழே தரப்பட்டுள்ள அசைவ உணவு மிகவும்சுவையானதாகும்.

## பருப்பு கீமா.

தேவையான பொருள்கள்—

| | |
|---|---|
| | அளவுகள். (எட்டுப் பேருக்கு.) |
| அறுத்த கறி | 500 கிராம். |
| உளுத்தம் பருப்பு. | 100 கிராம். (1 கோப்பை.) |
| வெங்காயம் | 225 கிராம். |
| பூண்டு | 10 கிராம். |
| இஞ்சி .. | 10 கிராம். |

| | |
|---|---|
| தேங்காய் .. | 55 கிராம். |
| பப்பாளி விதை. | 5 கிராம். |
| கிராம்பு .. | 2 |
| கொத்தமல்லி. | 10 கிராம். |
| இலவங்கப் பட்டை. | 2 செ.மீ. |
| மிளகாய் வற்றல். | 3 கிராம். |
| மஞ்சள் பொடி. | ¼ டீஸ்பூன். |
| சீரகப் பொடி. | ¼ டீஸ்பூன். |
| கொத்தமல்லித் தழை. | 1 கொத்து. |
| எண்ணெய் | 45 கிராம். |
| புளி .. | 5 கிராம். |
| உப்பு .. | ருசிக்குத்தக்க படி. |

செய்முறை—

உளுத்தம் பருப்பைக் கழுவி ஒரு மணி நேரம் ஊற வைக்கவும்.

கொத்தமல்லி, மிளகாய் வற்றல், மஞ்சள் பொடி, சீரகம் ஆகியவற்றை வறுத்துப் பொடி செய்து கொள்ளவும். இஞ்சியையும், பூண்டையும் அரைத்துக் கொள்ளவும். தேங்காயையும் பப்பாளியையும், தனித்தனியாக அரைத்துக் கொள்ளவும்.

வெங்காயத்தை நன்ருக நறுக்கிக்கொள்ளவும்.

நறுக்கிய கறியை ஒரு பாத்திரத்தில் போட்டு, கறி பவுடரையும், பூண்டு, இஞ்சியையும் போடவும். சிறிது வெங்காயத்தை வைத்துக்கொண்டு மீதியைப் போடவும்.

சாதாரணச் சூட்டில் கறியை வேக வைக்கவும். உளுத்தம் பருப்பை ஊற வைத்த தண்ணீருடன் ஊற்றவும். பருப்பு நன்ருக வெந்தவுடன், தேங்காயையும், பப்பாளி விதைகளையும், உப்பையும் போடவும்.

புளித் தண்ணீரையும் விடவும். நன்ருகக் கொதிக்க விட்டுக் கொத்த மல்லித் தழையைப் போடவும்.

எண்ணெய்யை ஊற்றி, மீதி வெங்காயத்தையும், கிராம்பு, ஏலக்காயையும் கலக்கவும்.

நன்ருகக் கலக்கிக் கறியுடன் சேர்த்துச் சாப்பிடவும்.

—புவனேசுவரி.

## சோகத்தை மாற்றுவோம்

சிலருக்கு உடல் பலவீனமாகி விடும். சிறிது நடந்தாலும், வேலே செய்தாலும் மிகவும் களேப்பாக இருக்கும். மேல் மூச்சு வாங்கும். ஏதாவது சாப்பிட்டால் சரியாகச் சீரணமாகாது. ஒன்று பேதியாகும் அல்லது மலச்சிக்கல் ஏற்படும். முகம் உடம்பெங்கும் வெளிறி விடும். கண், உள்ளங்கை, உள்ளங்கால் பகுதிகள் வெள்ளேயாக இரத்தமின்றித் தோன்றும்.

இந்த நோயை ‘பாண்டு’ என்றும் சோகை என்றும் கூறுவர். ஆங்கிலத்தில் ‘anaeamia’ என்று குறிப்பிடுகிருர்கள்.

சென்னே அரும்பாக்கத்தில் உள்ள அறிஞர் அண்ணு இந்திய மருத்துவ மனேயில் இதற்குச் சிகிச்சையளிக்கப்படுகிறது. நாள்தோறும் சுமார் இருபது முதல் முப்பது பேர் இந் நோய்வாய்ப் பட்டவர்கள், இந்த மருத்துவ மனேக்குச் சிகிச்சை பெற வருகின்றனர்.

இவர்கள் இங்கு வந்ததும் மருத்துவர்கள் இவர்களே ஆய்வு செய்கின்றனர். எந்த வகைச் சோகை நோய் என்பதைத் தெரிந்து கொள்கின்றனர். அதன் பின் அதற்கு வேண்டிய சிகிச்சையளிக்கப்படுகிறது.

நோயாளிக்கு வயிற்ருேட்டம் அல்லது மலச்சிக்கலிருந்தால் முதலில் அதற்குச் சிகிச்சை தரப்படுகிறது.

பேதியுள்ளவர்களுக்கு அரிசி நொய்க் கஞ்சி,‘ஆரோரூட்’ கஞ்சி ரொட்டி முதலியவை உணவாகக் கொடுக்கிருர்கள். உணவில் காரம், புளிப்பு எதுவும் சேர்க்கப்படுவதில்லே.

மலச்சிக்கல் உள்ளவர்களுக்கு உணவுடன் பழங்கள், குறிப்பாகச் சாத்துக்குடி தரப்படுகிறது. அதிலும் குணமாகாவிட்டால் மலக்கூடார லேகியம் அளிக்கப்படுகிறது.

நாக்குப் பூச்சியிருந்தாலும், இந்த நோய் ஏற்படுவதுண்டு. எனவே, அம்மாதிரி உள்ளவர்களுக்கு அதற்காகத் தனியாக மருந்து கொடுக்கிருர்கள்—வாயு விடங்கம் சூரணத்தைக் கொடுக்கிருர்கள்.

ரத்தச் செறிவுக்காக அன்னபேதி செந்தூரத்தை பஸ்பம் செய்துகொடுக்கிருர்கள். அயக்காந்தம் லோகமண்டூரம் ஆகியவையும் இதற்காகத் தரப்படுகின்றன. மலக் கட்டுள்ளவர்களுக்குப் பஞ்ச தீபாகினி லேகியமும் (பசிக்காக) பேதியுள்ளவர்களுக்கு வில்வாதி லேகியமும் தரப்படுகின்றன.

இவை தவிரச், சோகை நோய் உள்ளவர்களுக்குச் சத்துள்ள உணவு தர வேண்டியது மிகவும் அவசியம். தக்காளி சூப், கல்லீரல் சூப், அல்லது கால் எலும்பு சூப் ஏதாவது கொடுக்கிருர்கள். சாப்பாட்டுடன் காய்கறி வகைகள் தாராளமாகச் சேர்த்துக் கொள்ளப்படுகின்றன. சில நோயாளிகளுக்கு,வேக வைக்காத பச்சைக் கல்லீரலிலிருந்து சாறு எடுத்தும் கொடுப்பதுண்டு.

இவ்வாறு இரண்டு அல்லது மூன்று மாதங்கள் கொடுக்க வேண்டும். இரண்டு வார காலத்திலேயே நோயாளியின் உடல் நிலேயில்,இரத்த ஓட்டத்தில் முன்னேற்றம் ஏற்படும். தொடர்ந்து நல்ல சத்துணவு அளித்து வந்தால் நோயாளி பூரண குணமடைவது திண்ணம்.

### கல்லீரல் சூப் தயாரிக்கும் முறை

ஓர் ஆளுக்கு வேண்டிய அளவுகள் :—

கல்லீரல்—200 கிராம்.
சீரகம்—10 கிராம் (கால் தேக்கரண்டி)
மிளகு—10 கிராம்.
இஞ்சி—ஒரு சிறு துண்டு.
மஞ்சள் தூள்—சிறிதளவு

கல்லீரலேச் சிறிய துண்டுகளாக வெட்டி ஒரு தம்ளர் தண்ணீரில் போட வேண்டும். அத்துடன் சீரகம், மிளகு, இஞ்சி ஆகிய பொருட்களே அம்மியில் வைத்து லேசாக நசுக்கிப் போட்டு சுமார் அரை மணி நேரம் வேகவிட வேண்டும். அதன்பின் சிறிது மஞ்சள் தூளேச் சூப்பில் தூவி இறக்கிவிட வேண்டும். ஈரலேப் பிழிந்து விட்டு சூப்பை மட்டும் நோயாளிக்குக் கொடுக்கலாம்.

இந்தச் சூப்பை நாள் தோறும் காலே உணவுக்கு அரை மணிக்கு முன் வெறும் வயிற்றில் கொடுக்க வேண்டும். இரண்டு மூன்று மாதங்களுக்குக் கொடுக்கலாம்.




பணம் சம்பாதிப்பதையே குறிக்கோளாகக் கொண்டு இயங்கும் தொழிற்சாலைகளைத் தான் பொதுவாக எங்கும் பார்க்க முடியும். தொழிற்சாலையின் உற்பத்தியைப் பெருக்க வேண்டும், அதன் மூலம் அதிக வருவாய் அடையவேண்டும் என்பதே அவற்றின் லட்சியமாக இருக்கும்.

ஆனால் வேலூரில் உள்ள கூட்டுறவுப் பழம் பதனிடும் தொழிற்கூடம் இதற்கு விதிவிலக்கு. இவர்களது முக்கியக் குறிக்கோள், விவசாயிகள் புதிய முறைகளைப் பயன்படுத்தி அதிக அளவில் பழங்களை உற்பத்தி செய்யவேண்டும், அதன் மூலம் விவசாயிகளின் வருவாய் பெருகவேண்டும், வாழ்க்கை நிலை உயரவேண்டும், ஆலையின் உற்பத்தியும் வருவாயும் அதிகரிக்க வேண்டுமென்பதே.

1969-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 31-ஆம் நாள் இயங்கிடத் துவங்கிய இந்தக் கூட்டுறவுப் பழம் பதனிடும் தொழிற்கூடத்தில் 532 விவசாய உறுப்பினர்கள் உள்ளனர். இங்கு மாம்பழமும், தக்காளியுமே பயன்படுத்தப்படுகின்றன. இதற்கு முக்கியக் காரணம் அவை இவ் வட்டாரத்திலே பயிரிடப்படுவதுதான்.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் தற்போது 1,524 ஏக்கரில் தக்காளியும், 8,489 ஏக்கரில் மாம்பழமும் பயிரிடப்படுகின்றன. ஆயினும் இந்த வேளாண்மையில் ஈடுபட்டிருப்போருக்குப் போதிய வருவாயில்லை. எந்த முறையில் பயிரிட்டால் அதிக வருவாய் கிட்டும் என்பதும் அவர்களுக்குத் தெரிவதில்லை. பழைய முறையிலே வேளாண்மை செய்து வருகிறார்கள். இதன் மூலம் மகசூல் குறைவு; வருவாய் சிறிது; விவசாயிகளின் வாழ்க்கை நிலையிலும் முன்னேற்றமில்லை.


விவசாயிகளின் கூட்டுறவில் நடைபெறும் இத் தொழிற்கூடம் இந்த நிலையை மாற்ற விரும்புகிறது.

நமது நாட்டிற்கு (இந்தியா முழுமைக்கும்) 7 கோடியே 30 லட்சம் டன் பழங்கள் தேவை. ஆனால் உற்பத்தியாவதோ 2 கோடி டன். அதிலும் கால் பங்கு அழுகியும் சேதமடைந்தும் விடுகின்றது.

தேவையை அதிகரிப்பதற்குச் சரியான வழி, பழங்கள் உற்பத்தியைப் பெருக்குவது. சேதமடைதல்-அழுகுவதைத் தவிர்ப்பதற்கு ஏற்ற வழி பழங்களைப் பதனிடுதல்.

அமெரிக்காவில் 40 சதவீதம் பழங்களைப் பதனிடுகிறார்கள். நம் நாட்டிலோ மொத்தத்தில் 5 சதவீதம் பழங்களைத்தான் பதனிடுகிறோம்.

பழங்களைப் பதனிடத் தரமான சுவையான, நல்ல நிறமுள்ள பழங்கள் தேவை. ஆனால் விவசாயிகள் அவர்களுக்குக் கிடைக்கும்



ஏதாவதொரு பழத்தின் விதைகளைப் பயிரிடுகிறார்கள். அதனால் தரமான பழங்கள் கிடைப்பதில்லை.

விவசாயிகளின் கூட்டுறவால் அமைக்கப்பட்ட இந்தப் பழம் பதனிடும் தொழிற்கூடம் இதற்காகப் புதிய திட்டம் ஒன்றை வகுத்துள்ளது.

இதற்கென வட ஆர்க்காடு மாவட்டம், ஒடுகத்தூர் பகுதியில் 100 விவசாயிகளைத் தேர்ந்தெடுத்துள்ளனர். 100 ஏக்கர் நிலத்தில் அவர்கள் தக்காளி பயிரிடுவார்கள். அவர்களுக்குத் தேவையான தரமான தக்காளி விதைகளைத் தேசீய விதை வாரியத்திடம் வாங்கித் தரப்படும். முதலில் 'பூசாரூபி', ''பெஸ்ட் ஆஃப் ஆஃப்'' என்ற இரு தக்காளி விதைகளைப் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளனர். இந்த வகைத் தக்காளிகளின் பழங்கள் தரமானவை; சுவை மிக்கவை; அத்துடன்அதிக விளைச்சல் தரக்கூடியவை. எனவே இதன்மூலம் விவசாயிகளுக்கு மிகு விளைச்சலும், நல்ல வருவாயும் கிட்டும். ஆலைக்கும் தரம் மிக்க பழங்கள் கிடைக்கும்.




மா, நீண்ட காலப் பயிராகையால் அதற்கு நீண்ட காலத் திட்டமொன்றும் வகுக்கப்படுகிறது.

**இந்தியாவுக்கு இது புதிது**

இங்கு தக்காளிப் பழத்தில் நாலு வகையும், மாம்பழத்தில் ஆறு வகைப் பொருள்களும் தயாரிக்கப்படுகின்றன.

அதில் தக்காளித்திரட்டு (கட்டியானது) மாம்பழத் திரட்டு ஆகியவை இந்தியத் துணைக்கண்டத்தில் வேறு எங்கும் தயாரிக்கப்படுவதில்லை. இங்குதான் முதல் முறையாகச் செய்யப்படுகின்றன. விதை, தோல், தண்ணீர் ஆகியவை நீக்கப்பட்டுக் கட்டியாகத் தயாரிக்கப்படுபவை, இந்தத் திரட்டு. பழரசப் பானங்கள் மற்றும் இந்தப் பழங்களிலிருந்து தயாரிக்கப்படும் இதர வகைகளுக்கு இவற்றைப்பயன்படுத்தலாம். மேலை நாடுகளில் இவற்றிற்குக் கடுமையானகிராக்கி இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

தக்காளிச் சாறு, தக்காளித் திரட்டு, தக்காளி கச்சப், மாம்பழ ரசம், மாம்பழச் சாறு, மாம்பழ ஜாம், சர்க்கரைப் பாகில் போட்ட மாம்பழத் துண்டுகள், உப்பு நீரில் ஊறப்போட்ட மாம்பழத் துண்டுகள் ஆகியவை இங்கு தயாரிக்கப்படும் பிற பொருட்களாகும்.



செக்கசுலோவேக்கிய நாட்டு இயந்திரங்களுடன் 22 லட்ச ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்தத் தொழிற்கூடத்தில் இதுவரை ஆய்வுக்காகத் தயாரிக்கப்பட்ட பண்டங்களை மத்திய உணவு இயல் ஆய்வுக் கழகம் ஆய்ந்து இவை தரமானதயாரிப்புகள்என ஒப்புதல் அளித்துள்ளது.

எனவே வருகிற டிசம்பர் திங்கள் முதல், வணிக ரீதியில் விற்பனைக்கான தயாரிப்புகளில் இத் தொழிற்கூடம் முனையும்.

மணிக்கு 2 டன் பழச் சாறுகள் தயாரிக்கக் கூடியவை இங்குள்ள இயந்திரங்கள். நாளொன்றுக்கு 50 டன் பழரசங்கள், திரட்டுகள் தயாரிக்கப்படும்.

இங்கே இருக்கின்ற இயந்திரங்கள் அத்தனையும் தானாக இயங்கக் கூடியவை. பழங்களை இயந்திரத்தின் முதல் பகுதியான கழுவும் பகுதியில் கொட்டி விட்டால் அதன் பின் பணியாளர்கள்

எவரும் பழங்களைத் தொட வேண்டியது இல்லை. தொடவும் முடியாது. முதலில் கழுவி, அப்புறம் துண்டுகளாக நசுக்கி, விதைகளையும் தோல்களையும், காய்ப் பகுதிகளையும் நீக்கிப் பின், நீரை ஆவியாக்கிக் கடைசிப் பகுதியில் பழத்திரட்டைத் தகர டப்பாக்களில் அடைத்துத் தந்து விடுகிறது, இயந்திரம். பழரசங்களுக்குத் தனியான இயந்திரமுள்ளது. அதுவும் தானியங்கியே! புட்டிகளிலோ, டப்பாக்களிலோ அழகாக அடைத்துத் தருகிறது.

''விஞ்ஞான முறையில் தரமுடன், சுவையுடன், நல்ல நிறத்துடன் தயாரிக்கக் கூடிய இந்தத் தொழிற்கூடம் நாட்டிலுள்ள இவ்வகைத் தனியார் தொழிற்கூடங்கள் எட்டிப்பிடிக்கமுடியாத அளவுக்குத் தயாரிப்பில் ஈடுபடும்; கோடிக்கணக்கில் அந்நியச் செலாவணியைச் சம்பாதித்துத் தரும். இதன் மூலம் விவசாயப் பெருங்குடி மக்கள் மிகு பலன் பெறுவர்; தயாரிப்புகளை வாங்குவோருக்கும் தரமான சுவையான பழரசப் பண்டங்கள் கிடைக்கும்.'' என்று நம்பிக்கையுடன் தெரிவித்தார் இளைஞரான அதன் நிர்வாகி திரு. துரைசாமி. ஆலையின் பிரமாண்ட அமைப்பும் அதன் ஊழியர்களின் சுறுசுறுப்பும் அதனை உறுதிப்படுத்துவதாக உள்ளது.

சுமார் எட்டரை ஏக்கர் நிலத்தில் அமைந்துள்ள இந்தஆலையில், தொழிற்கூடப் பகுதி போக மீதி இடத்தை இவர்கள் தரிசுநிலமாக வைத்திருக்க வில்லை. பள்ளமான இடத்தில் நெல் பயிரிடுகிறார்கள். மேட்டுப் பகுதியில்தக்காளிக்கான மாதிரிப் பண்ணை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. தக்காளியை எந்த முறையில் பயிரிட வேண்டும் என்று விவசாயிகள் தெரிந்து கொள்ள, இந்தப் பண்ணை முன் மாதிரியாக விளங்கும். இவை தவிர, சுற்றியுள்ள இடங்களில் உயர்ந்த ரக மாமரங்களை நட்டுள்ளனர்.

'நாஃப்கோ (NAFCO) என்ற பெயரில் வெளிவர இருக்கும் இந்தப் பழச்சாறுகளும், பழரசப் பானங்களும் விரைவில் தமிழகத்தில் மட்டுமல்லாமல் அனைத்துலகத்திலும் புகழைப் பரப்பும் என்பது திண்ணம்.

# கடலும் காசும்

அன்புள்ள 'தமிழரசு' வாசகர்களே! சென்ற 16-10-70-ல் வெளியான ''கல்கத்தா செல்லும் கட்லா'' என்ற மீனைப்பற்றியும், கூட்டுறவுச் சங்கம் பற்றியும் தெரிந்து இருப்பீர்கள்.

இப்பொழுது அமெரிக்கா, ஜப்பான் செல்லும் இராலைப் பற்றித் தெரிந்துகொள்ளுங்கள்.

கடலூர் பழைய நகர் ஒரு துறைமுகப் பட்டினம். இங்கு அயல் நாடுகளில் இருந்து சரக்குக் கப்பல் வந்து போவது வழக்கம். தற்சமயம் இங்கு மீன்பிடித் தொழில் அதிகமாக நடைபெறுகிறது. அரசினரால் தவணை முறையில் வழங்கப்படும் விசைப் படகுகள் இங்கு சுமார் நூற்றுக்கு மேல் உள்ளன.

தினசரி கடலுக்குச் சென்று வரும் விசைப் படகின் ஓசை காலை 5 மணி முதல் மாலை 4 மணி வரை கேட்டவண்ணமிருக்கும். விசைப் படகில், கடலில் சென்று, இரால் மீன் பிடித்து வருவார்கள். மீன்களைக் கூடை கூடையாக ஏலம் விடுவார்கள். இராலை வியாபாரிக்கு 1 கிலோ இரால் தலையுடன் ரூ. 7·50-க்கு விற்பனை செய்வார்கள். இப்படி விற்பனை செய்யப்பட்ட இரால், வியாபாரியிடம் போனதும் இராலின் தலையை அகற்றி விடுவார்கள். இதற்காக கேரளத்தைச் சார்ந்த இரால் பதனிடும் கம்பெனி கடலூரில் ஒன்று உள்ளது. அங்கு இராலின் தலையைக் கிள்ளி விடுகின்றனர். 1 கிலோ தலை கிள்ளிய இரால் ரூபாய் 13·50க்கு விற்பனை செய்யப்படுகிறது. இப்படி விற்பனை செய்யப்பட்ட இராலைச் சுத்தம் செய்து அதைத் தரம் பிரித்து பாலிதீன் பைகளில் மடித்து, அட்டைப் பெட்டியினுள் வைத்துக் குளிர் சாதனப் பெட்டியில் வைத்து விடுவார்கள். குறிப்பிட்ட நேரம் சென்ற பின் நன்றாகப் பெட்டிகளில் அடைத்துச் சிப்பஞ் செய்து பல காட்டன்களாகபெரிய அட்டைப் பெட்டியில் வைத்துக் கேரளம் அல்லது சென்னைத் துறைமுகம் வழியே அயல் நாடுகளுக்கு அனுப்புகிறார்கள். அயல் நாடுகளில் இராலுக்கு நல்ல கிராக்கியுள்ளது. நல்ல விலையும் கிடைக்கிறது.

மீனவர் சமுதாயம் வளர்ச்சி பெற அரசு பாடுபடுகிறது.

சென்னையில் இரால் பதனிடும் தொழிற்சாலை ஒன்றினை அரசு கட்டியுள்ளது. அது தனியார் துறைக்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளது.

இன்றைய நிலையில் இரால் விலையைப் பார்த்தால் பவுன் விலைக்கு இணையாக உள்ளது. இது அமெரிக்கா, ஜப்பான், முதலிய அயல் நாடுகளுக்கு ஏற்றுமதியாகிறது.

தற்போது இரால் விற்பனையால் மீனவர்களுக்கு நல்ல வருமானம் கிடைக்கிறது. கடலில் இன்னும் பல விலையுயர்ந்த பொருள்களும் உள்ளன. கடல், மீனவ மக்களுக்குப் பணத்தைஅள்ளித் தரும் கருவூலமாகும்.

—எச். எம். சதகத்துல்லா,
கடலூர் பழைய நகர்.

# தானியப் பாதுகாப்பு, தானிய விளைவிப்பைப்போல் அதே அளவுக்கு முக்கியமானது.

## எவரெஸ்ட்

ஆஸ்பெஸ்ட்டாஸ் சிமெண்ட் தானியச் சேமிப்புப் பத்தாயங்கள், நடைமுறைக்கேற்ற, உன்னதப் பாதுகாப்புள்ள தானியச் சேமிப்பு முறையாகும்.



எவரெஸ்ட் தானியச் சேமிப்புப் பத்தாயங்களின் தனிச் சிறப்புகளை நோக்குங்கள் :

- எல்லா வகைத் தானியங்களின் பாதுகாப்பான சேமிப்புக்கும் உகந்ததென நிபுணர்களால் அங்கீகரிக்கப்பட்டவை.
- பல்வேறான தானிய வகைகளைத் தனித்தனியே வைப்பதற்கு இலகுவான உள்ளறைகள் அமைந்தவை.
- சிமெண்ட், செங்கல், அல்லது மரப் பீடத்தின் மீது எளிதில் நிறுவத் தக்கவை.
- பூச்சிகள், எலிகள், ஈரம் ஆகிய எதுவும் பாதிக்கமுடியாதவை.
- தானியங்கள் தனியே வெளியே பாயத்தக்கவை.
- நிரந்தரமானவை — ஆயுட்காலமுழுதும் நீடித்திருப்பவை.

## எவரெஸ்ட்

ஆஸ்பெஸ்ட்டாஸ் சிமெண்ட் தயாரிப்புகள்.

நாடுநெடுகப் பரவிய வினியோக அமைப்பையும், தேர்ச்சிபெற்ற தொழில்நுட்ப உதவியையும் பின்பலமாகக் கொண்டுள்ளன.

**ஆஸ்பெஸ்ட்டாஸ் சிமெண்ட் லிட்,**

(டர்னர் & நியூவால் க்ருப்பின் ஒரு உறுப்பினம்)

பம்பாய் • கல்கத்தா • ஜபல்பூர் • சென்னை • நியூ டெல்லி

போத்தனூர் (கோயம்புத்தூர் மாவட்டம்).

Focus—Q.11TM

நாட்டுமக்களிடையே நல்லெண்ணெயின் உபயோகம் நாளுக்கு நாள் பெருகி வருவதால், நல்லெண்ணெயின் தேவை அதிகமாகிக் கொண்டே வருகிறது. இதன் காரணமாகவே நல்லெண்ணெயின் விலையும் நாளுக்குநாள் கூடிக்கொண்டே இருக்கிறது.

நல்லெண்ணெயின் விலையைக் கட்டுப்படுத்துவதென்பது நம் தமிழ் நாடு அரசினால் மட்டும் முடிந்துவிடக் கூடிய காரியமல்ல. அனைத்து இந்திய ரீதியில் மத்திய அரசினால்தான், நல்லெண்ணெயின்விலையைக் கட்டுப்படுத்த இயலும். ஆயினும் தமிழ்நாடு அரசு நல்லெண்ணெய் விலையைக் குறைத்திடும் நோக்குடன், எள் உற்பத்தியைப் பெருக்கிட முயன்று வருகிறது. எள் உற்பத்தி பெருகினால் நல்லெண்ணெய் விலையும் கணிசமாகக் குறைந்து விடும்.

எனவே, எள் உற்பத்தியைப் பெருக்கி-அதன் மூலம் நல்லெண்ணெய் உற்பத்தியைப் பெருக்கி—நல்லெண்ணெய்விலையைக்குறைத்திட முயற்சி செய்யும் தமிழ்நாடு அரசுக்குத் துணை புரிய வேண்டுமென்று உழவர் பெருமக்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

தற்பொழுது தமிழ்நாட்டில் ஏறத்தாழ 1,13,000 ஹெக்டர் பரப்பில் எள் சாகுபடி செய்யப்பட்டு 36,000 மெட்ரிக் டன் எள் உற்பத்தியாகிறது ; ஒரு ஹெக்டரில் கிடைக்கும் மகசூல் 322 கிலோவாகவே உள்ளது. சில முன்னோடி உழவர்கள் இரசாயன உரமிட்டு, பொறுக்கு விதைகளை விதைத்து, பயிர்ப் பாதுகாப்பு முறைகளையும் மேற்கொண்டு ஹெக்டருக்கு 1,000 கிலோவுக்கு மேலும்மகசூல் எடுத்துள்ளதாகத் தெரிய வருகிறது. ஆகவே, அந்த முன்னோடி உழவர்களைப்போலவே எல்லா உழவர்களும் இரசாயன உரமிட்டு, பொறுக்கு விதைகளை விதைத்துப் பயிர்ப் பாதுகாப்பு முறைகளையும் மேற்கொண்டால் தமிழ் நாட்டின் தற்போதைய எள் உற்பத்தியைக் குறைந்தது 2 மடங்காகப் பெருக்க இயலும்.

தமிழ் நாட்டில் கார்த்திகை, மார்கழி மாதங்களில் குளிர் மிகவும் அதிகமாக இருக்கும். இக்குளிர்காலத்தில் செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் மானாவாரியாகவும், இறைவையாகவும் எள் சாகுபடி செய்யப்படுகிறது. இப்பகுதிகளிலெல்லாம், டி.எம்.வி. 2 (திண்டிவனம்-2) என்ற பொறுக்கு எள் விதையைக் கார்த்திகை மாதத்தில் (நவம்பர்-டிசம்பர்) விதைத்து மகசூலைக் கணிசமாகப் பெருக்கலாம். இதன் வயது 80 முதல் 85 நாட்களேயாகும்.

அடுத்து, மார்கழி மாதத்தில் (டிசம்பர்-ஜனவரி) திருச்சிராப்பள்ளி, சேலம், ஒசூர், கோயம்புத்தூர் (ஒருசில பகுதிகள்)ஆகிய மாவட்டங்களில் இறைவையாக எள் பயிரிடப்படுவது பழக்கத்தில் உள்ளது. இப்பகுதிகளிலெங்கும் 'கே. ஆர். ஆர். 1' (கரூர்-1) அல்லது 'கே. ஆர். ஆர். 2' (கரூர்-2) என்ற பொறுக்கு எள் ரகங்களை இறைவையாக விதைத்தால், எள் உற்பத்தி நிச்சயமாகப் பெருகும். 'கே. ஆர். ஆர். 1'-ன் வயது 125 நாட்கள். 'கே. ஆர். ஆர். 2'-ன் வயது 110 நாட்கள்.

மார்கழி மாதம் முதல் பங்குனி மாதம் வரை (டிசம்பர் முதல் மார்ச்சு வரை) டி. எம். வி. 3 (திண்டிவனம்-3) என்ற எள் ரகத்தை மாநிலமெங்கும் (நீலகிரி மாவட்டம் நீங்கலாக) இறைவையாகப் பயிரிடலாம். இந்த ரக எள் மற்ற ரகங்களை விட அதிகமாக மகசூல் அளிக்கும் திறனுடையது. இதன் வயது 90 நாட்களேயாகும்.

நல்ல வடிகால் வசதியுடைய வண்டல் கலந்த மணற்பாங்கான நிலம் எள் சாகுபடிக்கு மிகவும் ஏற்றது. தண்ணீர் தேங்கக்கூடிய இடங்களிலும், களர் நிலங்களிலும் எள் விதைத்தால் நல்ல விளைச்சல் கிடைக்காது.

எனவே, யார் யாருக்கு எள் பயிரிட வாய்ப்பும் வசதியும் இருக்கிறதோ அவர்களெல்லாம், தங்கள் பகுதிக்கேற்ற பொறுக்கு எள் ரகத்தைமேற்கூறப்பட்ட பருவத்திலும், மண்ணிலும் விதைக்கலாம். எள்ளின் விளைச்சலைப் பெருக்கக் கீழ்க்கண்ட சாகுபடி முறைகளை மேற்கொள்ளுமாறு பரிந்துரைக்கின்றோம்.

**நிலத்தைப் பண்படுத்துதல்**—எள் சாகுபடி செய்யப்படவிருக்கும் நிலத்தை நாட்டுக் கலப்பையால் 6 முதல் 8 முறை அல்லது இரும்புக் கலப்பையால் 4 முதல் 6 தடவை உழுது, நன்கு பண்படுத்த வேண்டும். மேடு பள்ளமில்லாமல் நிலத்தைச் சமப்படுத்தி வைக்க வேண்டியதும் மிகவும் அவசியமாகும்.

**உரமிடுதல்** : மானாவாரி எள் பயிரிட ஹெக்டர் ஒன்றுக்கு(2.47 ஏக்கர்) 12வண்டி (6 டன்) தொழு எரு, 22 கிலோ தழைச் சத்து (110 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 48.4கிலோயூரியா) 11 கிலோ மணிச் சத்து (68.75 கிலோ சூப்பர் பாஸ்பேட்), 11 கிலோ சாம்பல் சத்து (18·70 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ்), 5 கிலோ மாங்கனிஸ் சல்பேட் ஆகியவைகளை அடி உரமாக இடவேண்டும். மாங்கனிஸ் சல்பேட் இடுவதால் எள்ளின் விளைச்சல் அதிகமாகும்.






Shilpi BCB 21/70 Tam

இறைவை எள் பயிரிட ஹெக்டருக்கு 24 வண்டி (12 டன்) தொழு எரு, 33 கிலோ தழைச்சத்து (165 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 72.6 கிலோ யூரியா), 22 கிலோ மணிச்சத்து (137.50 கிலோ சூப்பர் பாஸ்பேட்), 22 கிலோ சாம்பல்சத்து (37.4 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ்), 5 கிலோ மாங்கனிஸ் சல்பேட் ஆகியவைகளை அடி உரமாக அளிக்க வேண்டும்.

**விதைப்பு** : மானாவாரியாக எள் பயிரிட ஹெக்டருக்கு 7 கிலோ விதையும், இறைவையாக எள் பயிரிட ஹெக்டருக்கு 6 கிலோ விதையும் விதைக்க வேண்டும். மானாவாரியாக விதைக்கும்போது செடிக்குச் செடி 9 அங்குலம்× 9 அங்குலம் இடைவெளியிருக்குமாறும், இறைவையாக விதைக்கும் போது செடிக்குச் செடி 12 அங்குலம்× 12 அங்குலம் இடைவெளியிருக்குமாறும் விதைக்க வேண்டும்.

**செடி கலைத்தலும் களை எடுத்தலும்** : எள் விதைத்த 10-வது நாளில் அதிகமாக உள்ள செடிகளைக் கலைத்து விட வேண்டும். விதைத்த 20 முதல் 25 நாட்களுக்குள் முதல் தடவையாக மண்ணைக் கொத்திவிட்டுக்களை எடுப்பதுடன் இரண்டாம் முறையாக அதிகமாக உள்ள செடிகளைப் பிடுங்கி அப்புறப்படுத்த வேண்டும். தேவையானால் விதைத்த 35 நாட்களுக்குள் 2-வது முறையாக மண்ணைக் கொத்திவிட்டு களை எடுக்க வேண்டும்.

**நீர்ப்பாசனம்**.— இறவை எள் விதைத்த உடனே நீர்பாய்ச்சவும். விதைத்த 3-வது நாள் முளைநீர் அல்லது உயிர்நீர் (Life Irrigation) பாய்ச்சவும். அதன்பின் 10 முதல் 15 நாட்கள் இடைவெளியில் நீர்பாய்ச்சிவர வேண்டும்.

**பயிர்ப் பாதுகாப்பு**.—கொண்டைப்புழு, காய்ப்புழு ஆகியவைகளால் ஏற்படும் சேதத்தைத் தடுக்க எள் விதைத்த 4-ம் வாரம் முதல் 15 நாட்களுக்கு ஒரு முறை வீதம் 3 முறை டி.டி.டீ. 5 சதத்தூளை ஹெக்டருக்கு 20 கிலோ வீதம் தூவலாம் அல்லது 0·02 சத என்ட்ரின் மருந்தை (900 மில்லி லிட்டர் என்ட்ரின் மருந்தை 900 லிட்டர் தண்ணீரில் கலந்து) தெளிக்கலாம்.

திண்டிவனத்திலுள்ள மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் மேற்கூறியவாறு டி.டி.டீ. 5 சதத் தூளைத் தூவியதனால் ஹெக்டருக்கு ரூபாய் 153·00-ம், என்ட்ரின் தெளித்ததனால் ஹெக்டருக்கு ரூபாய் 251·50-ம் அதிக லாபமாகக் கிடைத்துள்ளது.

காய்களில் சேதம் விளைவிக்கும் கட்டிக் கொசுக்களைத் (Gallfly) தடுக்க 0·02 சத என்ட்ரின் மருந்தைப் பூ பிடிக்கும் முன்பாக ஒரு முறையும், பின்பு 15 நாட்கள் கழித்து ஒருமுறையும் தெளிக்க வேண்டும். அல்லது 0·1 சத டி.டி.டீ. மருந்தை (1 கிலோ டி.டி.டீ. 50 சத நனையும் தூளை 500 லிட்டர் தண்ணீரில் கரைத்து) தெளிக்கலாம்.

பூவிலைநோய் (Phyllobydisease) தாக்கப்பட்ட செடிகளை அறவே பிடுங்கி எரித்துவிடவும்.

**அறுவடை**.—காய்கள் நன்கு முதிர்ச்சி அடைந்தவுடன், சரியான சமயத்தில் அறுவடை செய்யப்பட வேண்டும். இலைகள், தண்டுப் பாகம் ஆகியவை மஞ்சள் நிறம் அடைவதும், இலைகள் உதிர ஆரம்பிப்பதும், எள் செடிகள் போதிய முதிர்ச்சி அடைந்துவிட்டதைக் குறிக்கும் முக்கிய அறிகுறிகளாகும். இந்நிலைக்குப்பின் அறுவடை செய்யத் தாமதமானால், முற்றிய காய்கள் வெடித்து, விதைகள் சிதறி மகசூல் குறைய ஏதுவாகும்.



**டாக்டர் : உங்க மனைவிக்கு உடம்பு பலவீனமாயிருக்கு! இந்த டானிக்கை வாங்கிக் கொடுங்க**

**ஆசாமி : ஐயய்யோ! வேண்டாம் டாக்டர்! இப்பவே என்னால் சண்டை போட முடியலே......**

போதிய முதிர்ச்சியடைந்தவுடன் செடிகளை அறுவடை செய்து, அவற்றின் வெட்டப்பட்ட அடிப்பாகம் வெளிப்பக்கமாக இருக்கும்படி வைத்து வட்டவடிவமான குவியலாக (குதிர்) அடுக்கி, மேலே பாரத்துடன் சில நாட்கள் விட்டு வைப்பது சாதாரணமாக வழக்கத்திலுள்ளது. இவ்வாறு செய்வதனால், சரிவர முதிர்ச்சியடையாத ஒன்றிரண்டு காய்களும் குவியலின் உட்பகுதிகளில் ஏற்படும் அதிக வெப்பம், புழுக்கம் முதலியவைகளின் காரணமாகப் போதிய முதிர்ச்சியடைய வழி பிறக்கிறது. 4–5 நாட்களுக்குப் பின்னர், குவியலைக் கலைத்துச் செடிகளை வெய்யலில் 2 அல்லது 3 நாட்களுக்கு உலரவைக்கவும். இதனால் காய்கள் வெடித்து அதனுள்ளிருக்கும் விதைகள் அனைத்தும் கீழே கொட்டிவிடும். உலரும் செடிகளை மூங்கில் தடியால் அடித்தால், விதை கீழே உதிர்ந்துவிடும். பின்பு விதைகளைச் சேகரித்துச் சுத்தப்படுத்தி, மேலும் ஒன்றிரண்டு நாட்களுக்கு வெய்யிலில் உலர்த்திப் பத்திரப்படுத்தி வைத்துக்கொள்ள வேண்டும்.

விதை எள் எடுக்க, அறுவடை செய்த நன்கு முற்றிய எள் செடிகளை நேரடியாக வெய்யலில் உலர்த்தி, எள்ளினைச் சேகரிக்க வேண்டும். குவியல் முறையிலிருந்து எடுக்கப்படும் எள் விதைப்பதற்குச் சிறந்ததல்ல.

மேற்கூறிய சாகுபடி முறைகளை மேற்கொண்டு, எள் உற்பத்தியைக் குறைந்தது இருமடங்காகப் பெருக்கி நல்லெண்ணெய் விலையைக் குறைக்குமாறு உழவர் பெருமக்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகிறோம்.

## வண்ணப் படங்களில்...

### 39-ம் பக்கத்தில்

நேரு பிறந்த நாள் விழாக் காட்சிகள்.

(1 & 3) நேருவின் பிறந்த நாள் நவம்பர் 14-ஆம் நாள் தமிழகமெங்கும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சென்னை மாநகராட்சி நேரு அரங்கத்தில் சிறுவர் அணிவகுப்பைக் (படம்-3) கண்டு களிக்க வந்த பெருந்திரளான மக்கள் கூட்டத்தின் மகிழ்ச்சிக்கு முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் கையசைத்து நன்றி தெரிவிக்கும் காட்சி. வேளாண்மைத் துறை அமைச்சரும், நகரத்தந்தையும் படத்திலுள்ளனர்.

(2) சென்னை, இராசாசி மண்டபத்தில் நடந்த புத்தக ஓவியக் கண்காட்சியில் கல்வி அமைச்சர் நாவலர் அவர்கள்.

(4, 5, 6, 8) பல்கலைக் கழக நூற்றாண்டு அரங்கில் நடைபெற்ற இயல், இசை, நாடக விழா. (படம்-4) மெல்லிசை மன்னர் திரு. எம். எஸ். விசுவநாதன் இசைக் குழுவினரும் திரைப்படப் பாடகர்களான திரு. டி. எம். சவுந்தரராஜன், திருமதி பி. சுசிலா இன்னிசை விருந்தளிக்கின்றனர். (படம்-5) வெண்புரு நாடகத்தில் திரு. சண்முக சுந்தரம், கவிஞர் கண்ணதாசன். (படம்-6) கவியரங்கத்திற்கு தலைமை வகித்து முதல்வர் தலைமைக் கவிதை படிக்கிறார், (படம்-8) அனைத்துக்கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முதல்வர் பேருரை.

(7) புத்தக-ஓவியக் கண் காட்சியில் சிறுவர்கள் சூழச் சிரித்து மகிழும் முதல்வர்.

### 42-ஆம் பக்கத்தில்

(1) குழந்தைக்குச் சத்துணவு வழங்குகிறார் தொழிலாளர் பிற்பட்டோர் நல அமைச்சர் திரு என். வி. நடராசன் அவர்கள்.

(2) நகரியக்குழு மகப்பேறு இல்லத்தினை, மேட்டூரில், முதல்வர் கலைஞர் அவர்கள் திறந்து வைக்கும் காட்சி. மின்துறை அமைச்சர் திரு ஓ. பி. இராமன் அவர்களும் படத்திலுள்ளார்.

(3) பிரிட்டிஷ் கவுன்சிலின் தென்னிந்திய வட்டாரப் பிரதிநிதியான திரு. டெரிக்ஹக்ஸ், 11–11–1970 அன்று தமிழகக் கல்வி-பொது நல அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களைச் சந்தித்து உரையாடினர்.

(4) மரக்காணத்தில் சூணம்பேடு நெடுஞ்சாலைப் பாலத்தினைப் பொதுப் பணி அமைச்சர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் திறந்து வைத்தார்.

(5) சேலத்தில் 5–11–1970 அன்று நடைபெற்ற வேளாண்மை—அரிசன நலக் கருத்தரங்கில் சிறந்த அரிசன நலப் பள்ளிக்கான கேடயத்தை அறநிலைய அமைச்சர் திரு. கே. வி. சுப்பையா அவர்கள் வழங்கிடும் காட்சி.

(6) கோவை மாவட்டத்தைச்சேர்ந்த சத்திய மங்கலத்தில் 15 ஆயிரம் நிலம், வீட்டு மனைப் பட்டாக்களைத் தமிழக முதல்வர் வழங்கினர். ஒரு குடுகுடுப்பைக்காரர் முதல்வரிடம் பட்டாப் பெறுகிறார்.

(7) அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவினை 9–11–1970 அன்று சென்னையில் தமிழக முதல்வர் துவக்கி வைத்தார். அது போழ்து, கூட்டுறவு அமைச்சர் திரு. சி. பா. ஆதித்தனர் அவர்கள் கூட்டுறவு சிறப்பு மலரினை முதல்வருக்கு வழங்கினர்.

(8) பாலாறு குடி தண்ணீர்ப் பெருக்குத் திட்டத்தினை, தாம்பரத்தில் பொதுப்பணி அமைச்சர் 8–11–1970 அன்று துவக்கி வைத்தார்.

(9) நாமக்கல்லில், அறிஞர் அண்ணா அரசினர் கலைக் கல்லூரியை முதல்வர் துவக்கிவைக்கிறார்.

(10) அனைத்துலக நிதி வாரியத்தின் துணைத் தலைவர் திரு. லாடிஸ் லாஸ்வான் ஹாஃப் மேன் தொழிலமைச்சர் திரு. செ. மாதவன் அவர்களை 13–11–1970 அன்று சந்தித்து உரையாடுகிறார்.


### மையப் பக்கத்தில்

திருக்குற்றாலக் காட்சிகளும், தென்காசிச் சிற்பங்களும்.

### மூளை வைத்தியத்திற்குப் புதிய கருவி:

குழந்தைகள் மூளையில் துர்நீர் தேங்கி, தலை வீங்குவது, கண்பார்வை யிழப்பது, மூளை பாதிக்கப்படுவது போன்ற ஒரு நோயுண்டு. பெரும்பாலும் இந்நோய் பிறவியிலேயே ஏற்படுவதுண்டு. இதற்கான அறுவைச் சிகிச்சைக்குத் தேவையான மிக முக்கிய 'வால்வ்' வெளிநாட்டிலிருந்துதான் இதுவரை வாங்கப்படுகிறது.


தற்போது இந்தக் கருவியை இந்தியாவிலேயே செய்ய முடியுமென்று அனைத்திந்திய வைத்திய அறிவியல் நிலையத்தார் கண்டுபிடித்துள்ளனர். இந்நோயினல் பாதிக்கப்படும் ஆயிரக்கணக்கான குழந்தைகளுக்கு இந்தக் கண்டு பிடிப்பு ஒரு அரு மருந்தாக அமையும்.



1



2




3



4



5




6



7







கலையுணர்ச்சி என்று கூறும் பொழுது ஏதோ மேட்டு வீட்டு மாடியில் வாழும் ஒரு சில சுகவாசிகளுக்கே உரிய ஆடல்-பாடல், திரைப்படம் முதலியவை தான் கலை என்று எண்ணிவிடக் கூடாது. கலை நுணுக்கங்களை நன்கு அறிந்து புகழ் பெற்ற ஒரு கலைஞர், மக்கள் நெருக்கம் நிறைந்த நகரங்களில் ஒரு சில பிரமுகர்களின் முன்னிலையில் ஆடிப் பாடி அவர்களை மகிழ்விப்பதுபோல் நடிக்கலாம். பிரமுகரும் புரிந்து கொண்டது போல் தலையாட்டி ரசிக்க முயலலாம்.

ஆனால் எங்கோ ஒரு மலையோரத்திலே, ஏதோ ஓர் ஆற்றங் கரையிலே, ஊர் பேர் தெரியாத ஓர் ஏழை ஆடு மேய்ப்பவன் ஊதும் அபசுரமற்ற அந்த வேய்ங் குழலின் தூய்மையான கீதத்தை வறட்டு நகரங்களில் கேட்கவே முடியாது. அதில் ஓங்கி எழும் ஒலி அலைகளும் இயற்கையால் உந்தப்பட்டு எழுந்த இதய கீதமேயாகும். ஆக, பண்பாடும், கலையுணர்வும், பண்டிதனுக்கு மாத்திரம் சொந்தமல்ல. பாமரனுக்கும் இதில் ரசனையுண்டு, பங்குண்டு.

கிராமங்களில் வாழும் கோடான கோடி ஏழை எளிய மக்களுக்கும் கலையுணர்ச்சி உண்டு; அழகுணர்ச்சி உண்டு. இன்னும் சொல்லப் போனால் நாகரிகம் அடைந்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் நகர வாசிகளுக்கு இருக்கும் கலையுணர்ச்சியை விட, கிராமத்தையே நம்பி நிலமகளின் உண்மைப் புதல்வராக வாழும் அந்த ஏழையின் கலையுணர்ச்சி தூய்மை வாய்ந்தது; கள்ளங் கபடம் அறியாதது. பச்சைக் குழந்தையின் பரிசுத்தமான சிரிப்பைப் போன்றது. நமது கிராம மக்கள் போற்றி வளர்க்கும் சிறந்த கலைகளுக்குப் பெரிதும் விளம்பரம் இல்லாமலிருக்கலாம்; ஆனால் உண்மையின் எளிமை ஏராளமாக இருப்பதைப் பார்க்கிறோம்.

குழந்தையின் சிரிப்பிலே ஓர் அளவு இருக்காது; ஆடம்பரம் இருக்காது. சிரிப்புக்கு இலக்கணம் சொல்லுகிறார்களே சிலர்—குறுநகை—மென்னகை--புன்னகை—நன்னகை — வெண்ணகை—வெறிநகை— என்று இத்தகைய பாகுபாடுகளைப் பச்சைக் குழந்தையின் சிரிப்பிலே காண முடியாவிட்டாலும்—எல்லையில்லாததொரு பேரன்பின் தெளிவைப், பாசத்தின் காந்த ஒளியைக் குழந்தையின் சிரிப்பிலே காணலாம்.

ஒரு ஜீவநதியின் முதல் ஊற்றைப் போன்றது குழந்தைகளின் குமிழ்ச் சிரிப்பு. அறிவுள்ள மனிதன் அமைத்துள்ள ஆயிரமாயிரம் பல்கலைக் கழகங்களில் கற்ற தத்துவங்கள் எல்லாம் கூடக் கொண்டு வர முடியாத மன நிம்மதியைக் கொண்டு வரும் சர்வசக்தி வாய்ந்த ஒரு படைப்புக் கலை தான் குழந்தையின் கொள்ளை மலர்ச் சிரிப்பு.

அதைத்தான் மகாகவி பாரதி, ‘உன் முல்லைச் சிரிப்பாலே என் மூர்க்கந் தவிர்த்திடுவாய்’ என்று தன் மெய்ப் பொருள் அனுபவத்தைக் கூறுகிறான்.

அந்தக் குழந்தைச் சிரிப்புக்குள்ள அதே சக்தியைத் தன்னகத்தே கொண்டு கள்ளங் கபடமற்ற கிராம மக்களின் மனங்களுக்கு அமைதியை வாரி வாரி வழங்கும் வளர்கலையூற்றுக்களாக விளங்குகின்றன நமது கிராமியக் கலைகள். அவற்றையே மக்கள் கலைகள் ( Folk Arts ) என்று அழைக்கிறோம்.
அன்று—

ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன், அங்கே முறையான நாடகக் கொட்டகைகள் இல்லை; —மூலைக்கு மூலை முணகும் ரேடியோக்கள் இல்லை— சிந்தையைத் துளைக்கும் சினிமாக்கள் இல்லை. பார்ப்பவன் நெஞ்சைப் பிழியும் பேசும் படங்கள் இல்லை. பூமி அதிர்ச்சி உண்டாக்கும் பூகம்ப நடனமில்லை. காதுகளை அதிர வைக்கும் கச்சேரி மேடைகள் இல்லை.



அந்தச் சிறு கிராமத்தில்.... உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்யும், உண்மை மனிதர்கள் இருந்தார்கள்—சத்தியமும் சாந்தியும் அவர்களது நித்திய வாழ்வின் இரண்டு கால்களாகப் பணி செய்தன.

வீரமும் தீரமும் அவர்கள் இரண்டு கண்களாகக் காவல் செய்தன. உடம்பிலே வலிமை, உள்ளத்திலே எளிமை, உழைப்பிலே பெருமை, ஒற்றுமையிலே ஆசை, உபகாரத்திலே தாராளம், நெஞ்சிலே வீரம், நினைவிலே ஈரம்.

இத்தகைய கிராம மக்கள் வாழையடி வாழையாக வளர்ந்து அனுபவித்த பழம் பெருங் கலைகளை இன்னும் உயிரோடு காணுகிறோம்; கேட்கிறோம்; ரசிக்கிறோம்; மகிழ்கிறோம்.

பெருமை மிக்க உழவர் பெரு மக்கள் பாரம்பரியமாக வளர்த்த பெருங் கலைகளின் பழைய வடிவங்களை இன்னும் காணுகின்றோம். அவர்களது மழலைக் கீதங்களை இன்றும் ரசிக்கிறோம்.

வடிவமும், பொருளும் பழமையாக இருப்பினும் அதில் அடங்கியுள்ள ஜீவனுள்ள கலையம்சத்தின் கனிவு, என்றும் புதுமையானது; புதுமைக்கும் புதுமையானது.

பழமையின் அடித்தளத்தை வைத்துக்கொண்டுதான் புதுமையை வளர்க்கிறோம். முதல் ஆலமரத்தின் ஆதி விதையிலிருந்தே ஆயிரமாயிரம் ஆலமரங்கள் முளைக்கின்றன. மீண்டும் அதே சிறிய, பழைய விதைதான் புதிய மரத்துக்குக் காரணமாய் விளங்குகிறது. அதேபோல் கலைகளில் பழமை, புதுமை என்பதில்லை. பயிர் நடுவதும் அறுப்பதும் பழமை என்று ஒதுக்கிவிட்டால் பயிர் வளர முடியாது. பழமையான முறைகளிலிருந்து புதிய நெறிகள் தோன்றுவது போல், நமது பழமையான கிராமீயக் கலை முறைகளிலிருந்து தற்காலத்திய பல்வேறு புதிய கலை அமைப்புகளும் தோன்றி உள்ளன.

நமது பழைய கலைகளையும், பண்பாடுகளையும் ஒழித்துவிட்டால் புதிய கலைகள் வாழ முடியாது; வளர முடியாது. கலைகளின் பழைய உருவத்தை இன்றும் நமது கிராமங்களில் காண முடிகிறது.

பாவக் கறை படாத கிராமத்தின் இயற்கைச் சூழ்நிலையில் எழுந்து பரவும் இந்த இன்பக் கலையைச் சுவைத்து ரசித்து அனுபவிக்கும் மகாகவி பாரதியார் கிராமியப் பாட்டியல் பற்றிய தொரு பட்டியலையே நம்முன் வைக்கிறார்.

''காற்று மரங்களிடைக்
காட்டு இசைகளிலும்
ஆற்று நீரோசை அருவி
யொலியினிலும்
நீலப் பெருங்கடலெந்
நேரமுமே தானிசைக்கும்
ஓலத் திடையே உதிக்கும்
இசையினிலும்
மானுடப் பெண்கள்
வளருமொரு காதலினால்
ஊனுருகப் பாடுவதில்
ஊறிடுந்தேன் வாரியிலும்
ஏற்றநீர்ப் பாட்டின்
இசையினிலும், நெல்லிடிக்குங்
கொற்றொடியார் குக்குவெனக்
கொஞ்சும் ஒலியினிலும்
சுண்ணமிடிப் பார்தஞ்
சுவைமிகுந்த பண்களிலும்
பண்ணை மடவார்
பழகுபல பாட்டினிலும்
வட்டமிட்டுப் பெண்கள்
வளைக்கரங்கள் தாமொலிக்கக்
கொட்டி யிசைத்திடுமோர்
கூட்டமுதப் பாட்டினிலும்
வேயின் குழலோடு
வீணைமுதலா மனிதர்
வாயினிலுங் கையாலும்
வாசிக்கும் பல்கருவி
நாட்டினிலுங் காட்டினிலும்
நாளெல்லாம் நன்றொலிக்கும்
பாட்டினிலும் நெஞ்சைப்
பறிகொடுத்தேன் பாவியேன்''.

என்று படம் பிடித்துக் காட்டுகிறார். இந்தக் கவிதையில் பொதிந்துள்ள கவியின் கனவு, இக்கலைகளை மக்கள் எல்லாரும் எப்படி ரசனைப் பார்வையோடு அணுக வேண்டுமென்று நமக்குச் சொல்லித் தருகிறதல்லவா?

இந்தக் கிராமியக் கலைஞர்கள் சாதாரணமானவர்கள் அல்லர். இன்று நகர்ப்புறத்துப் பெயர் பெற்ற நட்சத்திரங்களைப் போலவே அவரவர்கள் கலையில் அவரவர்கள் பாணியில் அவர்கள் ஆற்றல் மிக்கவர்கள். கிராமத்தில் இவர்கள் நட்சத்திரக் கலைஞர்கள். அவர்களை நாமும் நேரில் காண வேண்டும். கண்டால்தான் உண்மை புலப்படும்.

நகர மக்களைப் போல், கலை வேறு, காரியம் வேறு என்று கிராம மக்கள் பிரித்து வைக்க முடியாது. காரணம் அவர்களது உழைப்பு ஓய்வறியாதது. அவர்கள் காலம் மிகவும் அரியது—அவர்கள் நிமிட நேரத்தையும் வீணாக்காமல், நிலத்தில் பாடுபட்டால் தான், நிலம் விளையும்—பயன் பெருகும்—ஆயிரக்கணக்கான நகர மக்களுக்கு உணவளிக்க முடியும்.

வயலில் நாற்று நட்டபின் அதை அறுத்துக் களஞ்சியத்தில் சேர்க்கும் வரை நிலத்தை விட்டு அவர்கள் நகர முடியாது. எப்படி ஒரு வீட்டன்னை உலையில்



அரிசியைப் போட்டுவிட்டு நடுவில் வேறு வேலை பார்க்க முடியாதோ, அதே போல் நிலத்தில் நடவு செய்துவிட்டால் அறுவடை முடியும் வரை வேறு எதிலும் விவசாயிகள் ஈடுபட முடியாது. அதனால் விவசாயப் பெருமக்கள் தங்கள் கலையை, தாங்கள் செய்யும் வேலையுடன் கூடவே இணைத்துக் கொள்ளுகின்றனர். பயிர்த் தொழிலில் பாடுபடும் பொழுது பாடும் இன்பத்தையும் சேர்த்துக் கொள்கின்றனர்.

பாமர மக்களின் இந்த உயிர்க் கலைகளை நாம் உயர்வு தாழ்வு பாராட்டாமல் போற்றி ஆதரிக்க வேண்டும். மேலே குறிப்பிட்ட கவிதையில் எதிரொலிக்கும் கவிஞனின் களிப்புமிகுந்த எழுச்சியுள்ளம் இதற்கான தூண்டுதல் போல அமையும் என்பதில் ஐயமில்லை.

தென்னாட்டின் வனப்புமிக்க கிராமச் சூழ்நிலையில் வானளாவி

புத்தம்புதுப் பொன்னியம்மா!
காவேரி-உன்
சித்திரமே சிங்காரப்
பூஞ்சோலை
கம்பனுக்குக் கவிதருவாள்
காவேரி-எம்
கண்களுக்கு ஒளிதருவாள்
காவேரி.

மேலைமலைக் காற்றரசன்
பூசைசெய்வான்-காவேரிக்கு
மேகராஜன் ஓடிவந்து
குடைபிடிப்பான்
கவிராசர் நூலாடை போர்த்
திடுவார்-காவேரியைக்
கடலரசன் கைகூப்பிக்
கும்பிடுவான்.

கோயில்குளம் கோட்டை
வாசல் கொத்தளங்கள்-
காவேரி—எம்
தாயின்அருள் தந்தபெரும்
சீதனமாம்

அன்று நாடெங்கும் உழவர் பெருமக்கள் மகிழ்ச்சி கொள்ளும் திருநாள். ஆண்டு முழுவதும் அவர்கள் செய்த உழைப்பின் பலனைக் கண்ணாரக் கண்டு களிக்கும் நல்ல நாள். இவ்வுலகம் செழித்து ஓங்க வேண்டுமானால் விவசாயப் பெருமக்கள் செழிப்புற வேண்டும். ஒரு நாட்டின் அமைதியும் பண்பாடும் பெருக வேண்டுமானால் பயிர்த் தொழில் பெருக வேண்டும். காவேரியின் வளமான இயல்புகள் பெருக வேண்டுமானால் விவசாயம் செழித்து ஓங்கவேண்டும். பணியில் ஈடுபடும் பொழுது கூடப் பக்தன் மனை வழிபடுதல் போல விவசாயப் பெருமக்கள் தமது அன்றாட அலுவல்களுடன் கலைகளையும் இணைத்துக் கொள்ளுகின்றனர்.

அங்கே வேலையோடு கீதம் கேட்கும். உழவோடு ஒலி முழங்கும். நடவோடு இசை நடக்கும்.



முழங்கும் கிராமியப் பாடலைக் கேட்போம்.

''ஆத்துவெள்ளம் நாளைவரத்
தோத்தங் காணுதே—மலை
யாளமின்னல் ஈழமின்னல்
சூழமின்னுதே
நேத்தும் இன்றும் கொம்பு
சுத்திக் காத்தடிக்குதே-நல்ல
நீர்ப் படும்சொரித்தவளை
கூப்பிடுகுதே''.

பழஞ் சிறப்புமிக்க கிராமியப் பாடல் இது. இந்த கிராமியப் பாடல்முறையை ஒட்டி ஒரு பட்டணக்கவிஞர் பாடும் மற்றொரு பாட்டினைக் கேட்போம். இப்பாட்டு காவேரி நதியைப் பற்றியதாகும்.

''சத்தியத்தைப் போலஎங்கள்
காவேரி
இத்தரையைக் காவல்செய்யும்
காவேரி
ஆயகலைப் பாட்டோடு
நாட்டியமும்-எம்
அன்னைபாடும் தாலாட்டுப்
பாடல்களாம்!
ஆடிமாதம் ஓடிநாங்க நாத்து
நட-காவேரியே
தேடிவந்து காத்தருளும்
தேவியம்மா
ஏரிகுளம் எல்லாம்உன்
கருணைபெற-காவிரியே
வாரிவாரி பாரிபோல
தாராய்நீ''

இந்தியாவின் ஆத்மா கிராமங்களில் தான் இருக்கிறது என்பது அண்ணல் மகாத்மாவின் நம்பிக்கை. இந்த ஆத்ம ஜோதியை அணையாமல் காப்பது நமது உழவர் பெரும்படை. பட்டின வாசிகளைப் பட்டினிவாசிகளாக்கி விடாமல், உணவு படைக்கும் உழவர் பெருமக்களின் திருவிழா தான் **பொங்கல் பெருவிழா**.

ஏற்றத்தோடு ஏழிசை இயங்கும். ஆயிரம் மந்தை மேயும். அங்கே ஆயன் குழல் இசை ஊதும். ஆம் பரந்த மேடையே அவர்களது கலை அரங்க மண்டபம். ஆகாயமே அணிவேய்ந்த அழகு விதானம் சூரியனும் சந்திரனும் சுடர்கின்ற நட்சத்திரங்களும், அந்த விதானத்திலே ஒளிவீசும் விளக்குகள். கரையேற்ற காடும், மலையும், நதியும் வனமும் அவர்களது கிராமீய அரங்கின் காட்சி ஜோடனைகள்.

பயிர்த் தொழிலிலும் பாட்டு; பண்ணை வயலிலும் பாட்டு; தோப்புத் துரவிலும் பாட்டு; வாய்க்கால் வரப்பிலும் பாட்டு, வண்டிப் பாட்டு, பரம்படிக்கும் பாட்டு-வரம்புயர்த்துப் பாட்டு, மடை திறக்கும் பாட்டு, நீர் பாய்ச்சும் பாட்டு-நாற்றுநடும் பாட்டுகளை எடுக்கும் கானம், கதிர் பிடிக்கும் பாடல், அறுவடைப் பாட்டு, களமடிக்கும்

பாடல்; இப்படிப் பாட்டாளிகள் வாழும் கிராமம் முழுவதும் ஒரே பாட்டு மயமாக முழங்கும்.

அறுவடை முடிந்ததும் திரு விழாக்கள் துவங்கும். தை மாதம் வரை கிராம மக்களின் உழைப்போடு இணைந்திருந்த கலை உணர்ச்சி, மாசி, பங்குனி மாதங்களில் இறைவன் திரு விழாக்களோடு சங்கமமாகி ஆடத் தொடங்கி விடுகின்றது.

ஆம். அறுவடை வரையில் பாடல் மயமாய் இருந்த மக்கள் கலை இப்பொழுது ஆடல் மயமாக மாறிவிடுகிறது. இசைமயமா யிருந்த கலை அறுவடை முடிந் ததும் கூத்து மயமாக மாறு கிறது.

எப்போதும் இயங்கிக்கொண்டே இருக்கும் சுறுசுறுப்பான சுபாவம் படைத்தவர்கள் அல்லவா இவர் கள். ஆதலால் உழவன் உழைப் பியக்கம் முடிந்ததும், எல்லை யற்ற பொருளின் இயக்கமாகத் தங்களது கலைகளை மாற்றிக் கொள்ளுகிறார்கள். வயிற்றுப் பசி தீர்க்கும் அறுவடையை முடித்து உழவர் பெருமக்கள் உயிர்ப் பசிக்குரிய விடை தேடிக் கடந்திருக்கும் பொருளைப்பற்றிக் கருத முற்படுகிறார்கள்.

இந்த மூன்று மாதங்களில் (மாசி முதல் சித்திரை வரை) கிராமங் களில் எங்கும் வாலிபர்கள் மஞ்சி விரட்டு முதலிய வீர விழாக்களை நடத்துவார்கள். அவை முழங் கும் வெற்றிப் பறையுடன் தொடங்கும். கிராமங்களில் இருக் கும் சிறுசிறு கோயில்கள் புதுப் பிக்கப்படும். அந்தக் கோயில் களில் பொங்கல் அடுப்பு சூடேறி ஒளி வீசும். குமரிப் பெண்கள் **கும்மி கொட்டுவர் - கோலாட்டம் போடுவர் - கூட்டமாக நடனமாடுவர்,** அதற்குப்பின் நடுத்தர வயதினர் -குறிஞ்சி நிலக் கடவுள் குமர னுக்குக் **காவடி எடுப்பர்.** ஆயிர மாயிரம் காவடிகள் அணி அணி யாகக் கிளம்பி தாளந் தவறாத அற்புத நடனத்தைத் துவக்கும். அந்த அமர கானத்தின் சூழ் நிலையில் ஆகாயமளாவி எழும் ஆனந்தக் கீதங்களுக்குத்தான் எத்தனை வடிவங்கள், எத்தனை உத்திகள். நொண்டிச் சிந்து, ஆனந்தக் களிப்பு, காவடிச்சிந்து, நையாண்டி மேளம் முதலிய நூற்றுக் கணக்கான முறைகளில் எத்தனை எத்தனை லயக் கோலங் கள், இசை நுட்பங்கள்! இனிய நுணுக்கங்கள்! ஆயிரக்கணக்கான



காவடிகள், மயில் தோகை விரித்து மலையேறிச் செல்லும் பொழுது அம்மலையே மயிலுரு வம் கொண்டு ஒரு பெரிய மலை மயிலாக மாறி ஆடுவது போன்ற தோற்றம் ஏற்படும்.

பொங்கலில் அம்மனுக்குக் **கர கம்** எடுப்பார்கள்-அம்மன் கரக ஆட்டத்தின் அழகை இன்றைக் கெல்லாம் பார்த்தாலும் சலிக் காத பேரின்பமாக இருக்கும். அதன் பாடலில் இன்பத்தின் பேரெழுச்சி உண்டாகும். மழை பொழியவும் சுகம் பெருகவும் மாவிளக்கு ஏற்றி வரங் கேட்கும் கரகப் பாடல்கள், சக்திக் கவிதை கள் ஆகும். தேர்த் திருவிழாக் காலங்களில், புரவி நாட்டியம், காளை நடனம், மயிலாட்டம், ஒயில் கும்மி, சிலம்பாட்டம் முத லியன நடைபெறும்.

அடுத்தது வில்லுப்பாட்டு. இது கிராம மக்களுக்காக நடத்தப்படும் சரித்திர வகுப்பு என்று கூறலாம். அரிச்சந்திரன் கதை முதல் அந்தத் தொகுதி சட்டசபை வேட்பாளர் சங்கதி வரை, கட்டபொம்மன் கதை முதல் காந்தி மகான் கதை வரை யில் வில்லுப்பாட்டில் பாடப் பெறும். விரிவுரைகளும், விளக்க உரைகளும் இரவு முழு வதும் நடக்கும். இதயம் சலிக் காமல் மக்கள் கேட்டுச் சுவைப் பார்கள்.

அதற்குப் பின் **தெருக்கூத்து.** இது தான் நாடகக் கலையின் ஆதி உருவம். இவர்களுக்கு ஒலி பெருக்கி, இரவல் குரல் எதுவும் தேவையில்லை. அவர்களே பாடு வார்கள். முன்பு எல்லாம் இவர் களது குரல் நீள் தொலைவுவரை கேட்கும். இப்பொழுது கூட ஒரு மைல் சுற்றளவுக்குக் கேட் கும்படி கணீரென்று குரல் சுருதி யோடு சேர்ந்து பாடும் கூத்த பிரான்கள் இருக்கிறார்கள். பார்ப்பதற்குக் கூட்டம் இருந் தால் போதும்-விடிய விடியக் கொட்டி முழங்கும் கோல எழில் கூத்து நடக்கும். அடேயப்பா! ஒவ்வொரு அங்க அசைவிலும், நடிப்பின் அஸ்திவாரத்தையும் சிகரத்தையும் போட்டுக் காண பிக்கும் ஆற்றல் பெற்றவர்கள். இவைகளையெல்லாம் பிரதிபலிப் பதைப்போல் மற்றொரு பக்கம் **பொம்மலாட்டம்** நடைபெறும். உலக ஆட்டத்தின் உணர்வின் துடிப்பாக விளங்கும் பொம்ம லாட்டம், கலையின் பல **கிளைகளில்** உருவாகும். இன் னும் எத்தனையோ வகையான இன்பக் கலைகளைக் கிராம மக்கள் வாழையடி வாழையாக வளர்த் துக் காப்பாற்றுகிறார்கள்.

இக்கலைகளின் பெருமைக்கு மேலும் பெருமை செய்யுமுறை யில் தமிழரசின் ஆதரவில் இயங் கும் தமிழ்நாடு சங்கீத நாடகச் சங்கம் 1967 தைப் பொங்கலில் மூன்று நாட்கள் பொங்கல் திரு விழாவினை உழவர் திருவிழாவாகக் கிராமியக் கலைகளின் திருவிழா வாகவும் நடத்தியது. மிகப் பெரிய கலைஞர்கள் டில்லியிலிருந் தும் மற்ற ஊர்களிலிருந்தும் வந்து சுவைத்துப் போற்றினர் கள்.

கிராமியக் கலைஞர்களுக்கு அர சின் சார்பில் சிறப்பு விருதுகளை யும் சங்கீத நாடக சங்கம் தகுந்த கலைஞர்களுக்கு வழங்கிச் சிறப்புச் செய்கிறது.

கிராமியக் கலைஞர்களுக்கு மேலும் மேலும் ஆதரவு தருவது நமது கடமை.



# பூண்டு வைத்தியம்

வெள்ளைப்பூண்டைச் சாதாரணமாக எல்லா இல்லங்களிலும் அதிலும் பெரும்பாலும் அசைவ உணவுச் சமையலுக்குப் பயன்படுத்துவது வழக்கம். ஆனால் பலருக்கு வெள்ளைப் பூண்டின் சத்தும், மருந்துச் சக்தியும் தெரிந்திருக்காது.

சளி பிடிப்பதன் அறிகுறி தென்பட்டால், பல்லுக்கு இடையில் கன்னத்தின் இரு புறமும் சிறு துண்டு பூண்டினை ஒதுக்கிக்கொண்டால் சில மணி நேரங்களில் சளி பறந்துவிடும்.


இரத்த அழுத்தம் அதிகம் உள்ளவர்களுக்கு அழுத்தத்தைக் குறைக்கிறது. இரத்த அழுத்தம் மிகக் குறைவாக உள்ளவர்களுக்கு அதிகப்படுத்துகிறது.

பூண்டை மலமிளக்கியாகப் பயன்படுத்தலாம். உணவு நன்றாகச் சீரணமாக அது உதவுகிறது.

முகப் பரு உள்ளவர்கள் முகப் பருவில் சிறு துண்டு பூண்டைப் பல முறை தடவினால் முகப் பரு மறையும். தழும்பும் இருக்காது.

பூண்டில் உடம்புக்குத் தேவையான கலோரி சத்து அதிகம் உள்ளது. ஒரு பூண்டில் 14 கலோரி சத்து உள்ளது. புரதச் சத்து 6.7 சதவீதம் உள்ளது.

ஆயுர்வேத—சித்த மருந்து வகைகளில் பூண்டு பெரிதும் பயன்படுத்தப்படுகிறது. தினமும் ஒரு பூண்டு பயன்படுத்தி வந்தால் உடல் கோளாறு, மனக் கோளாறுகளை அது விரட்டிவிடும்.



# கற்பகத்தைத் தேடி..

**வே**லூர், கல்லூரி விரிவுரையாளர் கல்லூரி முடிந்ததும் நேராக வந்தார், கற்பகத்தைத் தேடி !

ஆந்திர மாநிலத்திலுள்ள குண்டக்கல் பகுதியைச் சேர்ந்த ஒரு குழுவினர், உறவினர் ஒருவரை வேலூர் மருத்துவ மனையில் பார்த்துவிட்டு நேராகக் கற்பகத்தைப் பார்க்க வந்து விட்டனர்.

அமெரிக்க சமாதானக் குழுவைச் சேர்ந்த இளைஞர் பார்க்கர் கற்பகத்திடமே ஐக்கியமாகி விட்டார்.

இவர்களை மட்டுமல்ல ! நாள்தோறும் நூற்றுக்கணக்கான மக்களைக் கவரும் கற்பகம், வேலூரில் நடு நாயகமாக உள்ள சிறப்பு அங்காடி.

மற்ற சிறப்பங்காடிகளுக்கும் இதற்குமுள்ள வித்தியாசம், பிற அங்காடிகளில் கடைகள் உட்புறங்களிலிருக்கும். இங்குள்ள கடைகள் நாற்புறமும் சாலையைப் பார்த்தபடி வெளிப்புறமாக உள்ளன. பலன் ? காற்றோட்டமுள்ள அமைப்பு ; சாலையில் வருவோரைக் கவர்ந்திழுக்கும்







தன்மை. நாற்புறத்தில் எங்கிருந்து வந்தாலும், ஏதாவது ஒரு பகுதியைப் பார்க்கக்கூடிய வசதி.

முட்டை முதல் பரிசுச்சீட்டு வரை இங்குக் கிடைக்காத பொருளே இல்லை எனலாம். மொத்தம் 16 பகுதிகளாகப் பிரிக்கப்பட்ட இந்த அங்காடியின் கீழ்ப் பகுதியில் மருந்துகள், பிளாஸ்டிக் பொருட்கள், மளிகை சாமான்கள், மின்சாரப் பொருட்கள், சைக்கிள்கள், புத்தகங்கள், மேஜை, நாற்காலிகள், எண்ணெய்க் கடைகள் உள்ளன.

மாடியில் துணிக்கடை, எவர் சில்வர்- அலுமினிய- பித்தளைப் பாத்திரங்கள், பொம்மைகள், தைத்த சட்டைகள், உடுப்புகள், செருப்பு, தோல் பெட்டிகள் ஆகியவை உள்ளன.

''தேன் இருக்கிறதா?'' என்று கேட்டார் ஒரு அம்மையார் !

'' காஷ்மீர் தேன் வேண்டுமா? குடகுத் தேன் வேண்டுமா ? '' என்று ஆர்வத்துடன் எடுத்துக் காட்டினார் விற்பனையாளர்.

மற்றொரு பக்கத்தில் ஈராக்கிலிருந்து தருவிக்கப்பட்டு பிளாஸ்டிக் தாளில் சுற்றப்பட்டு முத்திரையிடப்பட்ட பேரிச்சம் பழங்களை விலைக்கு வாங்கினார் ஒரு வாடிக்கையாளர்.

மளிகைச் சாமான்கள் அனைத்தும் கண்ணாடிபோல் வெளியே தெரிய, பிளாஸ்டிக் பைகளில் வைக்கப் பட்டுள்ளன.

'' அம்மா ! தாகமா இருக்கும்மா '' என்று அடம் பிடிக்கிறான் சிறுவன்.

'' காபி வேணுமா ? ஐஸ்கிரீம் வேணுமா ?'' என்று தாய் அன்பு ததும்பக் கேட்கிறார். ஆம். இரண்டும் அங்கே கிடைக்கும். ஐஸ் கிரீமிற்காகத் தனிப்பகுதியும், ஓர் உணவு, சிற்றுண்டி விடுதியும் அங்கே உள்ளன.

நாளொன்றுக்கு 17,000 முதல் 20,000 ரூபாய் வரை விற்பனை செய்கிறது, இந்த அங்காடி. கடந்த மாதத்தில் தீபாவளியையொட்டி ஒரே நாளில் 43,000 ரூபாய்க்கு விற்பனை ஆகியுள்ளது. தீபாவளிப் பட்டாசு மாத்திரம் 17 ஆயிரம் ரூபாய்க்கு விற்கப்பட்டுள்ளது, சென்ற மாதத்தில்.

இங்கே அதிகமாக விற்பனை செய்யும் பகுதி வீடுகளுக்குத் தேவையான மளிகைப் பொருள்கள், அலங்காரப் பொருட்கள் விற்கும் பகுதிதான். இருப் பினும் பலவித வண்ணத்தில் பளபளப்பாகக் காட்சி யளிக்கும் பிளாஸ்டிக் பொருட்களைப் பார்த்த எவரும் எதையாவது வாங்காமல் வருவது கடினமே! சிறுவர்- சிறுமியரைக் கவரும் பொம்மைகளில் தான் எத்தனை விதங்கள் ! பொம்மைகள் மட்டுமா ? சிறுவர்களின் அறிவை வளர்க்கக் கணக்குப்போடும் புதுமையான விளையாட்டுச் சாதனங்கள் எத்தனை எத்தனை அங்கு உள்ளன!

துணைவியாருடன் அங்காடிக்கு வந்த விரிவுரையாளர் குருசிங்கிடம் ''நீங்கள் இங்குதான் பொருட்கள்

வாங்குவது வழக்கமா'' என்று கேட்க, ''ஆமாம்'' எனது இல்லம் ஒரு மைல் தொலைவிலுள்ளது, இருப்பினும் பெரும்பாலான பொருட்களை இங்குதான் வாங்குகின்றேன்'' என்று பதிலளித்தார்.

காரணம், ''இங்கு நம்பிக்கையோடு வாங்கலாம். குறைந்தவிலையில் தரமான, சுத்தமான பொருட்கள் கிடைக்கின்றன. அதோடு கூட்டுறவு முறையில் நடக்கும் இந்த அங்காடியை வரவேற்க வேண்டியது, ஆதரிக்க வேண்டியது நமது கடமையல்லவா?'' என்ருர் விரிவுரையாளர்.

குறைந்த விலையாக இருப்பதற்குக் காரணமென்ன ?

சிறப்பங்காடியின் பொது நிர்வாகி திரு. கே. நடராஜன் இதற்குச் சிறப்பாகத் தெளிவாக விளக்கம் தந்தார்.

''புளி முதல் பிளாஸ்டிக் வரை எல்லாப் பொருட்களையும் நாங்கள் அவை உற்பத்தியாகுமிடத்திலேயே வாங்குகிரேம். எடுத்துக் காட்டாக மிளகாய் வற்றலை இராமநாதபுரத்திலிருந்தும், புளியை மைசூரிலிருந்தும், தனியாவை குண்டூரிலிருந்தும் வாங்குகிரேம். பிளாஸ்டிக் பொருட்கள், மருந்துகள், பொம்மைகள் முதலியவற்றை, அவற்றின் தயாரிப்பாளர்களிடமிருந்தே மொத்தமாகப் பெறுகிரேம்.

பருப்பு வகைகளையும், மற்றும் பல பொருட்களையும் எங்களுக்குத் தேசியக் கூட்டுறவு உபயோகிப்போர் கழகமும், மாநிலக் கூட்டுறவு உபயோகிப்போர் கழகமும் மொத்தமாக வாங்கித் தருகின்றன. எனவே விலைமலிவாக இருக்கிறது. சுத்தமாகத் தரமாக இருப்பதற்குக் காரணம், தரமான பொருட்களையே வாங்குகிரேம். அத்தோடு வாங்கும் பொருட்களைச் சுத்தம் செய்து வைத்திருக்கிரேம்'' என்று விளக்கினர், பொது நிர்வாகி.


மாதம் சுமார் ரூபாய் நாலரை லட்சத்திற்கும் ஆண்டுக்குச் சுமார் 50 லட்சமளவிலும் விற்பனை செய்துவரும் இந்தச் சிறப்பங்காடி, லாபத்துடனேயே நடைபெறுகிறது என்று அவர் பூரிப்புடன் குறிப்பிட்டார்.


அதிக அளவுப் பொருட்கள் வாங்க விரும்புவோருக்கு மூன்று சக்கர சைக்கிள் வண்டிகள் மூலம் வீடுகளில் விநியோகம் செய்யும் திட்டத்தையும் விரைவில் அமல் படுத்த இருக்கின்றனர்.

மாலை ஆறு மணி : அங்காடி பொங்கி வழிகிறது, பொதுமக்கள் கூட்டத்தால். முகமலர அகமலர ஒவ்வொரு கடையாக ஆடவரும் பெண்டிரும், சிறுவர்களும் சுற்றிவந்து, ஒவ்வொரு பொருளாகப் பார்த்து வாங்குவது கண்கொள்ளாக் காட்சியாக உள்ளது. ஆமாம்! கற்பகத்தை நாடிச் சென்று பொருட்கள் வாங்குவது, இன்பமான லாபமான ஒரு பொழுதுபோக்கு.














# இவ்வளவு அமோக விளைச்சலுக்கு உதவியது எது?








## புத்திசாலியான விவசாயி விவேகமாகத் தேர்ந்தெடுத்த ஒர்த்திங்டன்-சிம்ப்ஸன் பம்பு செட்

**விஷயமறிந்த விவசாயிகள்
பெஸ்ட் அண்ட் கம்பெனி தயாரிக்கும் நம்பகமான
ஒர்த்திங்டன்-சிம்ப்ஸன் பம்பு செட்டுகளையே
கேட்டு வாங்குகிறார்கள்.**

ஈடு இணையற்றது என்று புகழ் பெற்ற 'மானோபிளாக்' பம்பு செட்டுகள் உட்பட பலவகை சென்டிரிப்யூகல் பம்புகளையும் **பெஸ்ட்** அளிக்கிறது.
ஒர்த்திங்டன்-சிம்ப்ஸன் பம்பு செட்டுகள் கண்டிப்பான தரக்கட்டுப்பாட்டுடன் தயாரிக்கப்படுபவை.
விற்பனைக்குப் பிறகும் சேவை செய்ய, நாடெங்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
மேலும், தக்க பம்புகளை தேர்ந்தெடுப்பதற்கு ஆலோசனைகளையும் அளிக்கிறது, **பெஸ்ட்!**




BEACON

**பெஸ்ட் & கம்பெனி பிரைவேட் லிட்.**

(ஸ்தாபிதம் : 1879)
13/15, நார்த் பீச் ரோடு, சென்னை-1
தமிழ் நாட்டில் கிளைகள்:
6/434, திருச்சி ரோடு, கோயமுத்தூர்.
49-D, மதுரை ரோடு, திருச்சி.1

Focus.BC.192 Tam




மேல்துண்டைத் தலையிலே கட்டிக் கொண்டு, தோளிலே நனைந்த மண்வெட்டியோடு, உழைத்துக் களைத்துப் போன சோர்வுடன் முற்றத்தில் வந்து நின்ற நாச்சிமுத்துக் கிழவன், வீட்டை ஏறிட்டுப் பார்த்தான்.

அவனே பாடுபட்டுக் கட்டிக் கொண்ட கெட்டிக் கட்டடம். முன்பக்கம் இருமருங்கிலும் திண்ணைகளுக்கு மேல் ஓட்டுச் சாய்ப்பு; தலைவாசல் கதவு ஒருக்கணித்திருந்தது.

ஆயாசத்தோடு படிகளில் ஏறி, நீள அகலமான வலது பக்கத்துத் திண்ணையின் மூலையில் மண்வெட்டியை வைத்து விட்டு, தலைத்துணியை அவிழ்த்து உதறி முகத்தைத் துடைத்துக் கொண்டே ஓரமாகக் கிடந்த பலகைக் கட்டிலிலே உட்கார்ந்தான் கிழவன்.

தோட்டத்திலே இல்லையென்றால், கிழவனை இந்தத் திண்ணையிலேதான் பார்க்க முடியும். சற்றுப் பாதுகாப்பாகத் தெருவின் பக்கமாக மூங்கில் தட்டி அடைப்பு இருக்கிறது.

உள் பக்கமாகச் சுருட்டிக்கட்டியிருந்த சாக்குத் திரையை அவிழ்த்து விட்டு, அலுப்போடு கட்டிலிலே படுத்துக்கொண்டான் கிழவன். ஒன்றுமே வேண்டாம், இப்படியே கண்ணயர்ந்தால் போதும்போலிருந்தது அவனுக்கு. ஆனால் கண்களை மூடும் போது, கவலைகளே வந்து மோதுகின்றன.

இப்பொழுதெல்லாம் மகன் வடிவேலுவை நினைக்கும்போது, கிழவனுக்கு நிம்மதியே இருப்பதில்லை.

உள்ள விவசாயத்தைப் பார்க்கச் சிறுவயதிலிருந்து உடம்பு வளையாமலே போய் விட்டது. பொழுது விடிந்ததிலிருந்து அடையும் வரையிலும் வடிவேலுவுக்கு எத்தனையோ ஒன்றுக்கும் உதவாத வேலைகள் இருந்து கொண்டே இருக்கும். மடிப்புக் கலையாமல் உடுத்திக்கொண்டு, இரண்டு மைல் நடந்து சென்று டவுனில் காபி குடிக்க வேண்டும். அப்புறம் அங்கே நாலு பேரோட குந்தி, ஊர் விவகாரம், நாட்டு நடப்பையெல்லாம் பேசித்தீர்க்க வேண்டும். இது, நாளைக்குச் சோறு போடப் போகிறதா?

கிழவன் தனியாளாகவே நின்று பாடுபட்டுத் தேடிக் கொண்ட புன்செய்யில், சர்க்காரிலிருந்து கடனை வாங்கிக் கிணறு வெட்டி, தண்ணீர் இறைவைக்கு மின்சார மோட்டாரும் போட்டு, இன்றைக்கு முப்போகம் விளையும் தோட்டமாக, போன வருடமே ஒரே தவணையாகக் கடனையும் அடைத்து, சொத்து வில்லங்கம் இல்லாமல் இருக்கிறது. கிழவனது மூச்சு இருக்கும் வரையிலும் இந்தக் கட்டுக் கோப்புக் குறையாமலே இருக்கலாம். அதன்பிறகு, பிறந்த மகன் இதையெல்லாம் கட்டிக் காத்துக் கொள்ளப் போகிறானா?

நல்ல காலம்.

வடிவேலுவுக்கு ஒரே மகள் செண்பகவல்லி.

· இருக்கும் நிலத்தில் பாடுபட்டு, இருப்பது கரையாமல் பாதுகாக்கும் உழைப்பாளிக்குப் பேத்தியைக் கட்டிக்கொடுத்து விட்டால் நிம்மதியாகக் கண்களை மூடலாம்.

பொழுது இருட்டிவிட்டது.

படுத்த படியே தலையைத் திருப்பி, வாசல் பக்கமாகப் பார்த்தான் கிழவன்.

வீடு இப்படியா இருண்டு கிடக்க வேண்டும்! விளக்கை ஏற்றிவைக்காமல் இந்தப் பெண் செண்பகம் உள்ளே என்ன செய்கிறாள்?

கிழவன் ஒருச்சாய்ந்து படுத்துக் குரல் கொடுக்க முற்பட்ட போது, பேத்திப் பெண்ணான செண்பகவல்லியே தலை வாசல் கதவைத் திறந்து வெளியே வருவது நிழற்படமாகத் தெரிந்தது. அதே சமயம், வாசற்படியோரமாக முற்றத்தில் நின்று, யாரோ செண்பகம் என்று கிசுகிசுத்த குரலில் அழைப்பதும் கேட்டது.

கிழவன் நிமிர்ந்து பார்த்தான்.

செண்பகவல்லி, கிழவன் இங்கே கட்டிலில் படுத்திருப்பதை அறியாதவளாக, திண்ணையோரமாகப் போய் நிற்கிறாள்.

கிழவனுக்குப் புரிந்து விட்டது.

மேலத்தெரு கன்னையாவின் இளைய மகன் சுப்பையா, இன்றைக்கு வாசலுக்கே வந்து விட்டான்.

"உன்னைப் பாக்குறதுக்கு எத்தனை தடவை இந்தத் தெரு வழியா வந்துக்கிட்டிருக்கேன். வாசலுக்காவது வந்து நிக்கிறியா?" என்று கேட்கிறான் அவன்.

"திண்ணையிலே வந்து நின்னு தாத்தா சத்தம் போடுவாரு! இன்னம் தாத்தா தோட்டத்திலே யிருந்து வரலே" என்கிறாள் செண்பகம்.

"உங்கம்மா?"

"கடைக்குப் போயிருக்காங்க"

"செண்பகம்" என்கிறான் அவன்.

"என்ன"

அவன் கவலையுடனேதான் சொல்கிறான்.

''முன்னாலேயெல்லாம் ஒரு நாளைக்கி ரெண்டு ஏக்கர் வரப்பு வெட்டுவேன். இப்ப உன்னை நினைச்சுக்கிட்டு வேலையே ஓட மாட்டேங்குது'' என்கிறான்.

செண்பகவல்லி 'களுக்'கென்று சிரிக்கிறாள்.

''அதுக்கு நான் என்ன செய்யட்டும்?''

''உன்னோட மனசிலே இருக்கிறதையும் சொல்லு''

''நானும் உங்களைத்தான் நினைச்சுக்கிட்டிருக்கேன். நாம நினைக்கிறது நடக்குமான்னுதான் ஏக்கமா இருக்கு'' என்கிறாள் அவள்.

''அப்படி நடக்கலையின்னா உன்னை நினைச்சே செத்துப்போயிடுவேன் செண்பகம்.''

''நல்லாயிருக்கு. இதைச் சொல்லத்தான் இந்த நேரத்திலே வந்திங்களா? தாத்தா வர்றநேரமாச்சு—விளக்குக்கூடப் பொருத்தாம இருக்கேன்'' என்று அவசரத்துடனே சொல்லிவிட்டு வீட்டிற்குள் திரும்புகிறாள் செண்பகம். அவனது தலையும் மறைந்து விடுகிறது.

கிழவன் எழுந்து உட்கார்ந்தான்.

இவள்—வாசலுக்கு வந்து பேசும்போது—அவன் நெருங்கி வந்து நிற்கத்தானே செய்வான். இப்படி எத்தனை நாட்களாகப் பேசுகிறார்களோ!

வாசலுக்கு வந்து விட்டுப் போகும் இந்தச் சுப்பையாவின் தகப்பன் கன்னையா, கிழவனோடு ஒத்த வயது. கன்னையாவுக்கு இரண்டே ஆண் மக்கள். மூத்தவன் கல்யாணத்தைச் செய்து கொண்டு தனியே போய்விட்டான். இளையவன் சுப்பையா படுபயல்—படிக்கவில்லை யென்றாலும், விவசாயத்தில் கருத்தோடு பாடுபடுகிறவன். நல்ல உழைப்பாளி.

இப்போது வேலையே ஓடவில்லையாம். இங்கே வந்து நிற்கிறான்.

கிழவனுக்குச் சிரிப்புத்தான் வந்தது.

அப்போது கையில் விளக்கோடு திண்ணைக்கு வந்த செண்பகவல்லி கிழவன் கட்டிலிலே உட்கார்ந்திருப்பதைப் பார்த்துத் திகைத்துப் போனவளாகத் தடுமாற்றத்துடன் நின்றாள்.

கிழவன் தலை நிமிர்ந்து பேத்தியைப் பார்த்தான்.

தூக்கிப் பிடித்திருந்த விளக்கொளியில், வெட்கத்தாலும், பயத்தாலும் சிவந்து விட்ட அவளது முகம் தெளிவாகவே தெரிந்தது.

கிழவன் அவளிடம் கேட்க நினைத்தது உள்ளடங்கிப் போய் விட்டது.

செண்பகவல்லியும், நெஞ்சு படபடக்க, விளக்கைக் கம்பியிலே மாட்டிவிட்டு மெதுவாக உள்ளே நழுவினாள்.

அதே நேரத்தில் கடைக்குச் சென்றிருந்த மருமகள் சின்னத்தாயும் திரும்பிவிட்டாள்.

இடுப்பிலே சுமந்து வந்த நார்ப் பெட்டியைத் திண்ணையின் விளிம்பிலே இறக்கி வைத்து விட்டு, முந்தானையால் முகத்தைத் துடைத்துக் கொண்டு, கிழவனைத் திரும்பிப் பார்த்தாள் சின்னத்தாய்.

''சோறு போடட்டுமா'' என்று கேட்டாள்.

''எனக்குச் சோறு வேண்டாம்மா!'' என்றான் கிழவன் திரும்பிப் பார்த்து.

''உடம்பு சொகமில்லையா? கசாயம் வச்சுத் தரட்டுமா?'' என்று பரிவோடு கேட்டுத், திண்ணையிலேறிக்கட்டிலருகேவந்தாள் சின்னத்தாய்.

## மக்கள் தொகைப் பெருக்கம்

**தற்போது உலக மக்கள் தொகை 360 கோடியாக உள்ளது. இன்னும் 75 ஆண்டுகளில் மக்கள் தொகை 1,400 கோடியாகப் பெருகும் என்று இங்கிலாந்து நாட்டு விஞ்ஞானி டாக்டர் ஜான் எலாரைன் மதிப்பிட்டிருக்கிறார்.**

இந்தப் பரிவுக் கெல்லாம் குறைவில்லை. கிழவன் இல்லையென்றால் தோட்டம் விளையுமா?

கிழவன் தலை நிமிர்ந்து அவளைப் பார்த்தான்.

''காலையிலேயிருந்து உன் புருசன் எங்கேம்மா போயிட்டான்? களை எடுக்க ஆள் விட்டா பக்கத்திலே நிக்க வேண்டாமா?'' என்று கேட்டான்.

''அவருஎப்பத்தான் எங்கிட்ட சொல்லிட்டு போனாரு? நானும் கேட்டுக் கேட்டுத் தவிச்சுப் போயிட்டேன்'' என்ற சின்னத்தாய், அடுத்து, மாமனாரிடம் எதையோ சொல்ல முற்படுகிறவளைப் போலச் சுவரோரமாக ஒதுங்கி நின்றாள்.

''என் கண்ணுக்குப் பிறகு இந்த காடுகரையெல்லாம் என்ன ஆகப் போகுதோ? அதை நினைச்சுத்தான் எனக்குக் கவலையா இருக்கு'' என்று கவலையுடனே சொன்னான் கிழவன்.

இந்தக் கவலை அவளது மனத்தில் பட்டதாகத் தெரியவில்லை.

''என் சித்தப்பன் மகன் தங்கராசுவுக்கு நம்ம செண்பகத்தைப் பெண்ணு கேட்டு நாளைக்கு வரப் போறாங்களாம். சொல்லி அனுப்பிச்சிருக்காங்க'' என்று இடையிலே சேதி சொன்னவள், கம்பியிலே தொங்கிக்கொண்டிருந்த விளக்கின் சுடரைத் தூண்டி விட்டாள்.

சற்று நிதானித்துக், கிழவன் மருமகளை ஏறிட்டுப் பார்த்தான்.

''வரட்டும்மா. செண்பகத்துக்கும் தள்ளிப் போடாம கல்யாணத்தை முடிச்சிப் போடணும். நானும் இதைத்தான் நினைச்சுக்கிட்டிருந்தேன்'' என்றான் கிழவன் பொதுப்படையாக.

இந்த அளவிலேயே சின்னத்தாய் பூரித்துப் போனாள்.

''நாலு நாளைக்கி முன்னாலே இவரும் போயிட்டு வந்திருக்காரு. ஒண்ணுக்குள்ளே ஒண்ணு கொடுத்தாத்தான் எப்பவும் நிறையும்ன்னு இவரும் நினைக்கிறாரு'' என்று மேலும் கூறினாள்.

''எங்கிட்ட வடிவேலு அப்படியொன்னும் சொல்லலையே!'' என்று கேட்டுத் திரும்பினான் கிழவன்.

'' ஊரெல்லாம் உக்காந்து பேசத்தான் அவருக்கு நேரம் சரியா இருக்கு. ஆகவேண்டிய காரியத்தைச் சொல்றதுக்கு நினைவிருக்குமா?'' என்று அங்கலாய்த்துக் கொண்ட சின்னத்தாய், இறக்கி வைத்திருந்த பெட்டியைத் தூக்கிக்கொண்டு, உள்ளே போய்விட்டாள்.

கிழவன் மறுபடியும் சாய்ந்து படுத்துக்கொண்டான்.

எப்படியும், செண்பகவல்லியை, தன் சித்தப்பன் மகனுக்குக் கொடுத்து, வீட்டோடு இழுத்து வைத்துக் கொள்ள






வேண்டுமென்ற துடிப்பு இவளுக்கு. இவளது சித்தப்பன் பெருமாள்சாமி வாய்த்தாட்டியக்காரன். பெற்றவன் இரண்டு ஏக்கர் நன்செய்யாவது சேர்த்து வைத்து விட்டுத்தான் போனான். வயலிலே இறங்காமல் ஊர் சுற்றிக் கொண்டே திரிந்தால் கட்டுபடியாகுமா? இப்போது இருக்கும் சொத்துக்குச் சரிக்குச் சரியாகக் கடனும் கூடியிருப்ப

தாகக் கேள்வி. அவன் பெற்ற மகன் தங்கராசுவுக்குப் படிப்பும் ஏறுமல், அவன் வேலை செய்யவும் பழகாமல், ஒதிய மரமாகவே வளர்ந்து விட்டான். இன்றைக்கு இங்கே உருப்படியாக இருக்கும் தோட்டம் கண்ணுக்குத் தெரிந்து விட்டது பெருமாள்சாமிக்கு. மகனை முன்னுல் வைத்துக் கண்ணி வைத்து விட்டான்.

இங்கே பிறந்த மகன் வடிவேலு, தோட்டத்திலே கருத்தோடு பாடுபடுவான் என்ற நம்பிக்கையும் இல்லாதிருக்கும் போது, அவனது ஒரே மகளுக்கு வரப்போகும் மருமகனுவது, பாடுபடுகிறவனுக இருக்க வேண்டாமா?

இதையெல்லாம் நினைத்துப் பார்க்க வடிவேலுவுக்குத் தெரியாது. எட்டுத் திசையிலும் சுற்றி வருகிறவன், வீட்டிற்குள் நுழைந்துவிட்டால், பெண்டாட்டியின் கைக்குள் அடக்கமாகி விடுவான்.

அவளுக்கிருக்கும் அவசரமே வேறு. இந்தச் சொத்துக்களைக் கட்டியாளத், தனது தம்பியை இங்கே கொண்டுவந்து உட்கார வைப்பதிலேயே முனைந்து நிற்கிறுள்.

இருப்பதையும் இழந்துவிட்டு நிற்கும் போதுதான் அவளுக்குப் புரியும். அப்போது மண் குதிரையாக நிற்கப் போகும் வடிவேலு என்ன செய்யப்போகிருன்?

இன்றளவும், தகப்பனிடம் எதிர்நின்று முகம் பார்த்துப் பேசமாட்டான். அந்த பயபக்தியெல்லாம் உண்டு. இருந்து என்ன செய்ய?

முன்னும் பின்னுமாக நினைத்துக் கொண்டே—தன்னை மறந்து அயர்ந்து விட்டான் கிழவன்.

* * *

கிழவன் கண் விழித்தபோது, விளக்கின் சுடர் குறுகியிருந்தது.

எதிரே—தலை மட்டத்துக்கு மேலே, படுக்கை வசமான ஜன்னல். திண்ணையை ஒட்டிய உள் அறையில் காற்று வசதிக்காக அது எப்போதும் திறந்தே இருக்கும். அந்த அறைக்குள்ளே தான் வடிவேலு படுத்துக்கொள்வது.

அறைக்குள்ளே விளக்கின் ஒளி தெரிகிறது. பேச்சுக்குரலும் கேட்கிறது.

கிழவனுக்குக் கேட்காத அளவுக்கு, அடக்கமாகப் புருசனிடம் ஏதோ சொல்லுகிருள் மருமகள். அவன் கேட்டுக்கோண்டே இருக்கிருன்.

மருமகள் முடிவு செய்துவிட்டாள். மகனும் மறுத்துச் சொல்லவில்லை.

வெகுநேரத்திற்குப் பிறகு தான்—அந்த அறைக்குள்ளே விளக்கு அணைகிறது.

* * * *

காலையிலிருந்தே சின்னத்தாய் மிகுந்த உற்சாகத்துடனும், பரபரப்புடனும் காணப்பட்டாள். முதல் காரியமாக, மகள் செண்பகவல்லியை இழுத்துப் பிடித்து உட்கார வைத்து, சீவிச் சிங்காரித்து விட்டாள். அத்துடன், மாப்பிள்ளையாக வரப்போகிற தம்பியின் அழகையும், அறிவுத் திறனையும்பற்றி அடுக்கடுக்காகச் சொல்லிவைத்தாள்.

டவுனுக்குச் சென்று, அங்கு தாமதியாமல், பெரிய பையில் காய்கறி இலைக்கட்டோடு சீக்கிரமே வந்து சேர்ந்தான் வடிவேலு. அதன் பிறகுதான் வெளியே சென்றிருந்த கிழவனும் வந்து சேர்ந்தான்.

எதிர்பார்த்தபடியே உச்சிப் பொழுதுக்குள் மாப்பிள்ளை வீட்டார் வந்து இறங்கிவிட்டார்கள்.

வடிவேலுவும் சின்னத்தாயும் விழுந்து விழுந்து உபசரித்தார்கள்.

என்னுடைய மதம், சிறைச்சாலை போல மற்றவர்களை வெளியே ஒதுக்கும் மதமல்ல! அதன் வாசல் எப்போதும் திறந்தே கிடக்கும். கடவுள் படைப்பிலே மிகத் தாழ்ந்த உயிருக்கும் அங்கே இடமுண்டு; ஆனுல் இறுமாப்பு, சாதித் திமிர், நிறத் திமிர், மத விரோதம் ஆகியவற்றிற்கு அங்கே இடமில்லை.

—காந்தியடிகள்

திண்ணையிலேயே பத்தமடைப் பாயை விரித்துப், பெருமாள்சாமியும், உடன் வந்த ஆண்களும் உட்கார்ந்து கொள்ளக், கொண்டு வந்த வரிசைகளை முன்னுல் வைத்து விட்டுப் பெண்கள் வீட்டிற்குள்ளே போய்விட்டார்கள்.

''நம்ம தங்கராசுவுக்கு—உங்க பேத்தியைப் பொண்ணு கேட்டு வந்திருக்கோம்!'' என்று சொல்லிப் பக்குவமாக அடியெடுத்து வைத்தான்.

கிழவனும் நிமிர்ந்து உட்கார்ந்தான்.

''எல்லாரும் ஒண்ணுபட்டு வர்றப்ப-நான் சொல்றதுக்கு என்ன இருக்கு?'' என்ருன் கிழவன்.

''என்ன மாமா அப்படிச் சொல்லிட்டிங்க. உறவுமுறை விட்டுப் போகக் கூடாதுன்னு தான் நாங்களும் படியேறி வந்திருக்கோம். இந்த வீட்டிலே, உங்க சொல் இல்லாமத் துரும்பு கூட அசையுமா?'' என்று சொல்லிக் குழைந்தான் பெருமாள்சாமி.

கையைத் துடைத்தவாறு வழி நடையில் வந்து நின்ற சின்னத்தாயின் அபிநயத்தைப் புரிந்துகொண்ட வடிவேலு முடிவை நோக்கிப் பாய்ந்தான்.

''நாங்க போடுற நகையைத் தான் போடுவோம். கல்யாணச் செலவையும் நீங்கதான் ஏத்துக்கணும்'' என்ருன்.

''அது சரிதான் மாப்பிள்ளை—நமக்குள்ளே என்ன இருக்கு? உங்க சம்மந்தம் கிடைக்கிறதே எங்களுக்குப் பெரிசு'' என்று ஆமோதித்தான் பெருமாள்சாமி.

கிழவன் எதுவும் பேசவில்லை.

''நாளைக்கித் தை பிறக்குது. மாசக் கடைசியிலே முகூர்த்தத்தை வச்சுக்கலாம்!'' என்று சொல்லிப் பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைக்க முயன்ருள் சின்னத்தாய்.

அப்போது, கையில் தேங்காய்-பழம் தட்டுகளோடு பெருங் கூட்டமே தெருவை அடைத்துக் கொண்டுவர, முன்னுல் வந்த கன்னையா, இந்த வீட்டுப் படிகளில் தானே ஏறி வருவதைக் கண்டு, சின்னத்தாய் முன்னுல் வர, வடிவேலு ஒன்றும் புரியாமல் எழுந்து நின்ருன்.

கன்னையா, திண்ணையில் கூடி இருந்தவர்களை ஒரு சுற்றுப் பார்த்துவிட்டு, கொண்டுவந்த தட்டுகளை ஒரு பக்கம் ஓரமாக இறக்கிவைத்து, தானும் உட்கார்ந்து கொண்டு, ''என்ன வடிவேலு திகைக்கிறே- என் மகன் சுப்பையாவுக்குப் பெண் கேட்டு வந்திருக்கோம்'' என்று பதட்டமில்லாமலே சொன்னான்.

'' உள்ளூரிலே பெண்ணு கொடுக்கிறதா யாரும் சொல்லலையே'' என்று சொல்லி எட்டி வந்து நின்று குமுறினாள் சின்னத்தாய்.

''எனக்கு உங்க குடும்பத்திலே பெண்ணு எடுக்கணும்னு ஆசை இருக்கு. முறையோட கேட்டு வந்திருக்கேன்'' என்று அமைதியாகவே சொன்னான் கன்னையா.

பெருமாள் சாமிக்குக் கோபம் வந்து விட்டது. கிழவனின் பக்கமாகத் திரும்பினான்.

'' நான் எங்கேயும் பார்க்காத நாடகமா இருக்கு. நாங்க பெண்ணுகேட்டு வந்து உட்கார்ந்திருக்கோம். இந்த நேரத்திலே இவரும் தட்டைத் தூக்கிட்டு வரணுமா? சொல்லி வச்சது மாதிரியில்ல இருக்கு'' என்றான்.

''இதிலே சொல்லி வைக்கிறதுக்கு என்னங்க இருக்கு. வீட்டிலே பொண்ணுன்னு இருந்தா, நாலு பேரு கேட்டுத் தான் வருவாங்க. மத்தது பெத்தவங்க விருப்பத்தைப் பொறுத்தில்ல இருக்கு'' என்று சொல்லிக் குறுக்கே புகுந்தான், கன்னையாவோடு வந்து உட்கார்ந்து விட்ட இன்னொருவன்.

''அதைத்தான் சொல்றோம். இங்கே பொண்ணு கொடுக்கிறதா இல்லை. தட்டைத் தூக்கிட்டுப் போங்க''என்று ஆங்காரத்தோடு இரைந்தாள் சின்னத்தாய்.

''பொண்ணு கேட்டு வந்த மாதிரித் தெரியலையே?'' என்று தொடர்ந்தான் வடிவேலு.

கிழவன் அமைதியாகவே மகனைத் திரும்பிப் பார்த்தான்.

''கொஞ்சம் பொறுமையா இருடா வடிவேலு. இப்ப உன்னோட முடிவு என்ன அதைச் சொல்லு'' என்று கேட்டான்.

''அதான் காலையிலேயே சொல்லிட்டேனே-செண்பகத்தை, தங்கராசுக்குத் தான் கொடுக்கணும்'' என்று தீர்மானமாகவே சொன்னான் வடிவேலு.

''உன்னோட முடிவு என்னம்மா?'' என்று மருமகளைத் திரும்பிப் பார்த்துக் கேட்டான் கிழவன்.

சின்னத்தாய் இந்த மட்டிலும் பிரச்சனை தீரப் போகிறதே என் பதில் அமைதி அடைந்தவளாக ''தம்பிக்குப் பெண் கொடுக்க எனக்குச் சம்மதம் தான்'' என்றாள் முன்னுக்கு வந்து.

''உன் தம்பியைக் கட்டிக்கப் பெண்ணுக்கும் சம்மதமா?,'' என்று மேலும் கேட்டான் கிழவன்.

''ஆமா'' என்றாள் சின்னத்தாய் அழுத்தமாக.

''அப்பச் செண்பகத்தையும் கூப்பிடம்மா. அதுகிட்டயும் ஒரு வார்த்தை கேட்டுக்கலாம். அதோட முடிவே முடிவா இருக்கட்டும்'' என்றான் கிழவன் அடுத்து.

ஒருவாறு,மாமனாரின்போக்கைப் புரிந்து கொண்ட சின்னத்தாய், ஆவேசம் வந்தவளாக, ''நல்லாக் கேட்டுக்கிங்க'' என்று சொல்லிவிட்டு வீட்டுக்குள் பாய்ந்து சென்றாள்.

''சுத்தி வளைச்சுப் போறீங்க மாமா?'' என்றான் பெருமாள்சாமி கோபத்துடன்.

கிழவன் சிரித்தான்.

''சுத்தி வளைச்சாலும் எட்டின மட்டுக்கும் தான் கைக்குள்ளே சிக்கும் மாப்பிள்ளை! கல்யாணம்ங்கிறது ஆயிரம் காலத்துப் பயிர். நெடுகலும் வாழப் போற பொண்ணுகிட்ட கேட்டுக்கிறது தான் முறை. எப்பவும் நிறைவோட இருக்கும். அதிலேயும் இப்ப ரெண்டு பக்கமும் பெண்ணு கேட்டு வந்திருக்கிறப்ப . . . பெண்ணோட விருப்பப்படி முடிவு செய்கிறது தான் ஒத்ததா இருக்கும்'' என்றான் கிழவன்.

அதற்குள்ளாகத் தெருவெங்கும் கூட்டம் சேர்ந்து விட்டது.

உள்ளே மகளுக்குச் சொல்ல வேண்டியதையெல்லாம் சொல்லி முடித்து, அவள் வாயால் 'சம்மதம்' என்று பல முறை சொல்ல வைத்து, திருப்தியுடன் மகளைத் திண்ணைக்கு இழுத்து வந்தாள் சின்னத்தாய்.

பேத்தியைக் கண்டதும் கிழவன் எழுந்து முன்னால் வந்தான்.

தாத்தாவை நிமிர்ந்து பார்த்து விட்டு மீண்டும் தலை குனிந்து கொண்டாள் செண்பகவல்லி. தாயின் கை, தோளில் அழுத்துவதால் ஏற்படும் படபடப்பில், அவளது உடலே நடுங்கிக் கொண்டிருந்தது.

கிழவன் குனிந்து, தட்டுகளிலிருந்த சிவந்திப் பூவையும் மல்லிகைப் பூவையும் சிறிது சிறிது கிள்ளியெடுத்து, தனித்தனியாக, விரித்த உள்ளங்கைகளில் வைத்துக்கொண்டு, குனிந்த தலையோடு நிற்கும் பேத்திப் பெண்ணைப் பார்த்து, ''நீ வாழப் போற பொண்ணு. இப்ப உன்னோட விருப்பம் தான் முக்கியம். தங்கராசுவைக் கட்டிக்கணுமுன்னா சிவந்திப் பூவை எடு. சுப்பையாவைக் கட்டிக்கணுமுன்னா மல்லிகை பூவை எடம்மா'' என்றான்.

அத்தனை கண்களும் ஆவலோடு பார்த்துக் கொண்டிருக்க, செண்பகவல்லி தலை நிமிர்ந்தாள். தாத்தாவைப் பார்த்தாள். திரும்பித் தாயையும் பார்த்தாள்.

''மனசுக்குப் பிடிச்ச பூவை எடேன். இதிலே என்ன திகைப்பு வேண்டியிருக்கு'' என்று சொல்லி மகளின் தோள்பட்டையை அழுத்தினாள் சின்னத்தாய்.

''எடுக்கிற பூவை உங்கம்மா கையிலே தான் கொடம்மா'' என்றான் கிழவன்.

தெருவெங்கும் நிறைந்துவிட்ட கும்பல் நெருங்கியடித்துக் கொண்டு முன்னால் வந்தது.

''எடம்மா செண்பகம்'' என்று சொல்லி வடிவேலுவும் நெருங்கி வந்தான்.

செண்பகவல்லி கையைத் தூக்கினாள். தாத்தாவின் வலது கையிலிருந்த மல்லிகைப்பூவையெடுத்து வடிவேலுவின் கையில் கொடுத்து விட்டு, வெட்கமும் திகைப்பும் சூழ்ந்து கொள்ள, மெய் மறந்து நின்று விட்ட தாயையும் கடந்து வீட்டிற்குள்ளே ஓடி விட்டாள்.

அப்புறம் என்ன ?

வீடு வாசல்—மாடுமனை—காடு கரை யென்று இருப்பவையெல்லாமே, கிழவனது சுய உழைப்பில் தேடிக்கொண்ட சொத்துக்களாக அவனது பெயரிலேயே இருக்கும் போது, அங்கே, யாரால் வேறு என்ன மறுத்துப் பேச முடிந்தது?

இனிய மாலைப் பொழுது. சென்னை அரும்பாக்கம் புறநகர்ப் பகுதியில் ஓர் இல்லத்தின் மொட்டை மாடி. அமெரிக்க மங்கை செல்வி சுசன் நீல்ட் ஊதா நிறக் கைத்தறிப் புடவை அணிந்து, புத்தகம் ஒன்றினைப் புரட்டிக் கொண்டிருக்கிறார். அருகில் சென்று பார்த்தால் அது ஒரு தமிழ் நூல்! பக்கத்தில் தமிழ் வார, மாத இதழ்கள், புதினங்கள் கிடக்கின்றன.

அன்று, முத்தும், மணியும் வாசனைத் திரவியங்களும் வாங்க, மரக்கலங்களில் திரை கடலைத்தாண்டித் தமிழகம் நாடி வந்தனர், யவனர்களும், ரோம் நாட்டவர்களும், எகிப்தியரும்.

இன்று தமிழைத் தேடி அமெரிக்காவிலிருந்து எண்ணாயிரம் மைல்கள் கடந்து அரும்பாக்கம் வந்திருக்கிறார் செல்வி சுசன்நீல்ட். வைணவக் கல்லூரிப் பேராசிரியர் திரு ஜி. விசுவநாதனின் இல்லத்தில் தங்கித் தமிழ்பயிலும் இவரைத் திரு விசுவநாதனின் குடும்பத்தினர் ''சுசன் .. .. சுசன்'' என்று அன்புடன் செல்லமாக அழைக்கின்றனர். செல்வி நீல்டும் அவர்களது குடும்பத்தினரில் ஒருவராய் மாறிவிட்டார்.




'தமிழரசு' இதழுக்காகப் புகைப் படம் எடுக்கச் சென்றபோது, 'என்னுடைய குடும்பத்தினரோடு சேர்த்து எடுக்க வேண்டுமென்று, நிபந்தனையுடன் ஏற்றுக்கொண்டார்.

''தம்பி! என்ன வெட்கம் இப்படிவா, படம் எடுக்கலாம்'' என்று விசுவநாதனின் மூன்று வயது மகனைச் சகோதர பாசத்தோடு தமிழில் அழைத்த பாங்கு அவர் அக் குடும்பத்தோடு ஒன்றிவிட்டதை எடுத்துக் காட்டுவதாக அமைந்தது.

சிறுவனிடமும் அவனது பாட்டியிடமும் சுசன் உரையாடுவது தமிழில்தான்.

இதோ! தமிழரசுக்கு அவர் அளித்த பேட்டியைப் படியுங்கள்.

**நிருபர் :** அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் எந்த அளவுக்குத் தமிழ் இடம் பிடித்துள்ளது?

**செல்வி சுசன் நீல்ட் :** வெகுகாலமாக இந்திய மொழிகள் என்றால் சமஸ்கிருதமும், இந்தியும் என்றுதான் அமெரிக்கர்கள் நினைத்து வந்தனர். அமெரிக்கப் பல்கலைக் கழகங்களிலும் இந்த இரு மொழிகள் பற்றிய ஆய்வும், கல்வியும்தான் இருந்து வந்தன. இந்திய நாட்டினைப் பற்றித் தெரிந்து கொள்ள விரும்பும் அறிவியல் வல்லுநர்கள் இவ்விரு மொழிகளின் உதவியையே நாடினர். அண்மைக் காலத்தில்தான் தென்னிந்திய மொழி பற்றியும் குறிப்பாகத் தமிழைப் பற்றியும் அவர்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

**நிருபர் :** தமிழ் கற்க அங்கு வசதிகள் உள்ளனவா?

**சுசன்:** நான் பயின்ற சிகாக்கோ பல்கலைக் கழகத்தில் தமிழ் பயிற்றுவிக்க மூன்று பேராசிரியர்கள் உள்ளனர். தமிழ் நாட்டைச் சேர்ந்த டாக்டர் ராமானுஜம், திரு ஈ. அண்ணாமலை ஆகியோரும், செக்கோசுலோவேக்கியா நாட்டினைச் சேர்ந்த திரு கமில் சுவலபில் அவர்களும் தமிழ் பயிற்றுவிக்கின்றனர். அவர்களது ஆர்வத்தின் காரணமாகப் பல மாணவர்கள் இந்த மொழியைப் பயில முன்வந்துள்ளனர்.

முதலாண்டு வகுப்பில் பத்துப் பன்னிரண்டு மாணவர்களும், இரண்டாவது மூன்றாவது ஆண்டு வகுப்புகளில் மூன்று நான்கு மாணவர்களும் பயின்று வருகின்றனர். இதே போன்று அமெரிக்காவிலுள்ள வேறு பல் கலைக் கழகங்களிலும் தமிழ் பயில வசதிகள் இருப்பதாக அறிகிறேன்.

**நிருபர் :** தமிழ்படிக்கவேண்டுமென்ற ஆவல் உங்களுக்கு எப்போது ஏற்பட்டது?

**சுசன் :** அமெரிக்காவில் நான் படிக்கும்போது எனக்குத் தென்னிந்தியா என்று ஒன்று இருப்பதே தெரியாது. நான் 'அரசு' (Government) என்ற முக்கிய பாடம் எடுத்துப் படித்த மாணவி. 1964-ல் இந்தி படிப்பதற்காக இந்தியா வந்தேன். உத்திரப் பிரதேசத்தில் தங்கியிருந்து ஓராண்டு இந்தி கற்றேன்.

அப்போது ஒரு முறை டெல்லிக்கு வந்தேன். அங்கு சில தமிழர்களுடன் எனக்கு அறிமுகம் ஏற்பட்டது. அத்துடன் கர்நாடக இசையினைக் கேட்கும் வாய்ப்பும் ஏற்பட்டது. அந்த இசை என்னைக் கவர்ந்தது. தமிழைப் பற்றியும், தமிழ் நாட்டைப் பற்றியும் அறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவல் அப்போதுதான் முதன் முதலில் ஏற்பட்டது.

அமெரிக்க அறிஞர்களும் வட நாட்டவரும், தமிழ்மொழியையும், தென்னகத்தையும் அலட்சியப் படுத்துவதாக என் மனத்தில்பட்டது. அந்த உணர்வு தமிழைப்பற்றியும் தென்னிந்திய வரலாறு பற்றியும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவலை மேலும் அதிகப்படுத்தியது.

நான் அமெரிக்கா திரும்பினேன். இரண்டாண்டுகள் சிகாக்கோ பல்கலைக் கழகத்தில் தமிழ் கற்றேன்.

**நிருபர்**; சென்னைக்கு எப்போது வந்தீர்கள்?

**சுசன்** : சென்னைக்கு நான் முதலில் ஒரு முறை வந்து மூன்று மாதங்கள் தங்கியிருந்துவிட்டுச் சென்றேன். இப்போது இரண்டாவது முறையாக வந்திருக்கிறேன். தற்போது நான் இங்கு வந்து சுமார் ஐந்து மாதங்கள் ஆகின்றன. அடுத்த ஜூன்வரை இங்கு தங்கியிருப்பேன்.

**நிருபர்** : சென்னையில் எங்கு தமிழ் பயில்கின்றீர்கள்?

**சுசன்** : எனது ஆசிரியர் திரு. பாலசுப்பிரமணியம் வாரம் இரு முறை இங்கு வந்து எனக்குத் தமிழ் சொல்லித் தருகிறார்.

**நிருபர்** : இது எத்தகைய கல்வி? கல்விக் கூடங்களில் முறையாகப் பயிலுவது போன்றா?

**சுசன்** : நீங்கள் கேட்பது புரிகிறது. தமிழ் மட்டும் கற்பது எனது குறிக்கோள் அல்ல. தமிழகத் தென்னக வரலாறு பற்றியும், குறிப்பாக சென்னை நகரின் வளர்ச்சி பற்றியும், அதிலும் குறிப்பாக 1800-1860 ல் ஏற்பட்ட புதிய மாறுதல் பற்றியும் ஆய்வு செய்து அது பற்றி ஓர் ஆய்வுக் கட்டுரை (Thesis) அளிப்பதே எனது இந்தக் கல்வியின் நோக்கம். எனவே, தமிழ் பற்றிய அறிவு, தமிழ் எழுதப் படிக்கத் தெரிவது இதற்கு உதவும் என்பது எனது எண்ணம். அதற்குத் தேவையான அளவில் தேவையான முறையில் தமிழைக் கற்கிறேன்.

எனக்குத் தற்போது எல்லாரிடமும் உரையாடத் தக்க அளவு தமிழ் தெரியுமென்று சொல்ல முடியாது. ஆனால் எளிமையாக உள்ள தமிழ் நூல்களைப் படித்துப் புரிந்துகொள்ள முடியும். அப்படிப்பட்ட நூல்களையும், தமிழில் வரும் வார இதழ்களையும், சிறுகதைகளையும் அவ்வப்போது படித்து வருகிறேன்.

**நிருபர்:** நீங்கள் தமிழ் அறிஞர் யாரையாவது சந்தித்திருக்கிறீர்களா?

**சுசன்** : டாக்டர் மு.வ. டாக்டர் ராகவன் ஆகியோரை அடிக்கடி சந்திக்கிறேன். ஆராய்ச்சி சம்பந்தமாகத் தமிழக ஆவணக் காப்பக இயக்குநரையும் சந்திப்பது உண்டு.

எனது இந்த ஆய்வில் அவர்கள் மிகவும் துணையாக இருக்கின்றனர். இன்னும் பலரைச் சந்திப்பேன்.

சென்னையின் வரலாறுபற்றி நான் தெரிந்து கொள்ள விழைவதால், பழைய மன்னர்களின் பரம்பரையில் வந்தவர்கள், பழமையான குடும்பத்தினரைச் சேர்ந்தவர்களையும் சந்திக்க விரும்புகிறேன். அப்படிப்பட்டவர்கள் எவரேனும் இருந்தால் என்னைச் சந்தித்தால் எனது ஆராய்ச்சிக்குப் பயனுள்ளதாக இருக்கும்.

**நிருபர்** : கர்நாடக இசை உங்களைக் கவர்ந்ததாகச் சொன்னீர்களே! இங்கு கர்நாடக இசை கேட்டீர்களா?

**சுசன்** : ஒரு மாற்றம்! கேட்பதோடு மட்டுமின்றி கர்நாடக இசை பயிலவும் செய்கிறேன். திருமதி ஆர். வேதவல்லிதான் எனது ஆசிரியை.

**நிருபர்** : சென்னையைத் தவிர மற்ற எந்தெந்த இடங்களைச் சுற்றிப் பார்த்தீர்கள்?



**சுசன்** : எனது குடும்பத்துடன்—அதுதான் திரு விசுவநாதன் தம்பதியருடன் தஞ்சாவூர், கும்பகோணம் ஆகிய ஊர்களுக்குச் சென்றிருந்தேன். அவ்வூர்களின் இயற்கை அழகு, பச்சைப் பசேலென்ற நெல் வயல்கள், வானுயர்ந்த, கலை அழகுமிக்க கோபுரங்கள் என்னை மிகவும் கவர்ந்தன.

பொதுவாக உத்தரப்பிரதேசத்தைவிடத் தமிழகம் எனக்கு மிகவும் பிடித்துள்ளது. அதற்கு மற்றொரு காரணம், இங்குள்ள மக்கள். பெண்கள் இயல்பாக இனிமையாக நெருங்கிப்பழகுகிறார்கள். இது எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது.

தமிழகத்தில் என்னைக் கவர்ந்த மற்றொன்று, அழகுமிக்க உங்கள் சேலைகள். காஞ்சிபுரம் பட்டுப் புடவைகள்— ஆகா . .என்னே அழகு. முடிந்தால் நான் ஊர் திரும்பும்போது தமிழ் நூல்களுடன் தமிழகத்துச் சேலைகளையும் எடுத்துச்செல்வேன்.

**நிருபர்** : எங்கள் உணவு உங்களுக்குப் பிடிக்கிறதா? அதனை நீங்கள் விரும்பி உண்பது உண்டா?

**சுசன்** : ஓ! நான் காலையில் ராகிக் கஞ்சி குடிக்கிறேன். அரிசிச் சாப்பாடு எனக்கு மிகவும் பிடிக்கிறது. ஆனால் எனக்கு நன்றாக மென்று நிதானமாகச் சாப்பிட்டுப் பழக்கம். அதற்குச் சப்பாத்திதான் வசதியாகயிருக்கிறது. நீங்கள் விறுவிறு என்று சாப்பிட்டுவிடுகிறீர்கள். எங்களது பழக்கம் சாப்பிடுவதை ஒரு கலையாக—குடும்பத்தினர் அனைவரும் அமர்ந்து பேசிக்கொண்டே—மெள்ள உணவை அருந்துவது.

**நிருபர்** : உங்கள் தமிழ்க் கல்வியை எந்த விதத்தில் பயன்படுத்தப் போகிறீர்கள்?

**சுசன்** : நான் ஆய்வு அறிக்கை அளித்தபின், ஒருவேளை தமிழ் ஆசிரியராக மாறினாலும் மாறுவேன். பின்புதான் அதுபற்றி முடிவு செய்ய வேண்டும்.

**நிருபர்** : இங்குள்ள அமெரிக்கர்களைச் சந்திப்பது உண்டா?



சுசன் அம்மையாரும் விசுவநாதன் குடும்பத்தினரும்

**சுசன் :** எனது தோழி ஒருத்தி — அவள் பெயரும் சுசன்தான் — இங்கு மலையாளம் கற்க வந்திருக்கிறாள். நாங்கள் இருவரும் சந்தித்துக்கொள்வோம். மற்றபடி பொதுவாக ஓர் அமெரிக்கர் — மற்றொரு அமெரிக்கரைக் காரணமின்றிப் பார்க்க விரும்புவதில்லை.

**நிருபர் :** நீங்கள் திரு விசுவநாதனின் இல்லத்தைத் தேர்ந்தெடுத்தது எப்படி ?

**சுசன்:** திருமதி விசுவநாதனின் உறவினர் அமெரிக்காவில் இருக்கின்றார். அவர் மூலமாக இவர்களைத் தெரிந்து கொண்டேன். மேலும், சென்னை நகருக்குள் தங்குவதை விடப் புற நகர்ப் பகுதியிலுள்ள குடியிருப்புகளில் ஒருவித கிராமியச் சூழ்நிலை உள்ளது. அது எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது.

இங்கு நான் வெளியில் வந்தால் பெண்கள் என்னைப் பொதுவாகக் கேட்கும் கேள்விகள் சில. ''அமெரிக்காவிலிருந்து தனியாகவா வந்தே?''

''உனக்கு வயது எவ்வளவு ?''

''உனக்கு எப்போ கல்யாணம் ?''

இவற்றிற்கெல்லாம் எனது பதில், ஒரு புன்முறுவல்தான்!

ஆமாம். புன்முறுவலோடு தமிழகம் வந்து, புன்னகையுடன் தாய் நாடு செல்லவிருக்கும் செல்வி சுசன் நீல்ட், நிச்சயம் தமிழகத்தின் நல்லுறவையும் எடுத்துச் சென்று அமெரிக்க மண்ணில் பரப்புவார் என நம்பலாம்.

---


**தங்கபஸ்பம்—சிட்டுக்குருவி லேகியம்**



DR. S. K.

கலந்து சாப்பிடுங்கள். இதற்கு நிகரானது எதுவும் இல்லை. இழந்துபோன சக்தியை மீட்டெடுக்கவும், சொப்பன ஸ்கலிதம், இல்வாழ்க்கை பிரச்சனை, இளமை உணர்ச்சிக் குறைவு, கைகால் அசதி, புஷ்டி நஷ்டம், தளர்ச்சி, வெட்கம், பயம், ரத்தக் குறைவு, கெட்ட கனவுகள் முதலியவற்றைக் குணப்படுத்தி புதிய சக்தி, புத்துணர்ச்சி தந்து இல்வாழ்க்கையில் இணையில்லாவெற்றி தருகிறது. 73 வருட அனுபவமும் நற்சாட்சிகளும் பெற்றது இதுவே! பத்தியம் இல்லை. 30 வேளை தங்கபஸ்பம்—சிட்டுக்குருவி லேகியம்— விலை ரூ. 60·00. பாதி அளவு அனுப்ப இயலாது. வி.பி.பி.-யில் பெற இன்றே எழுதுங்கள்.

வைத்தியத் திலகம்—வைத்திய ராஜ்

**டாக்டர் S. காளிமுத்து, R.M.P.(IND), V.V.C.,A.M.I.H.**

**பழனி சித்தர் வைத்தியசாலை (REGD) பழனி S.I.**

**போன் : 16** **தந்தி : சித்தர்**

சென்னை கிளை ஆபீஸ் :

**41, நைனியப்பன் தெரு, G. T. சென்னை-1**

**போன் : 21448**



**யுனைடெட் இந்தியா ரோலர் 'ப்ளவர்' மில்ஸ்**
**பிரைவேட் லிமிடெட்**

**1/4 சூரியநாராயண செட்டி தெரு,**
**சென்னை—81.**

உயர்ந்த தரமுள்ள

'' கோபுரம் '' மார்க் மைதா, சூஜி

மற்றும்


'' கப்பல் '' மார்க் ஆட்டா

கோதுமைத் தவிடு தயாரிப்பாளர்கள்

**தொலைபேசி எண் : 52670—52671—52672—52673**

**தந்தி : MONARCH**

SARATH




மலிவான விலையுள்ள வலிவான அலமாரிகள்

போஸ் சாலையில் அவர்களது விற்பனை நிலையம் ஒன்று இருக்கு. அங்கே கூடப் பார்த்து வாங்கலாம்.''

''இது அரசாங்க வாரியம் நடத்துறதுன்னு சொன்னிங்களே! வேறே எங்கேயாவது இருக்கிறதா?''

சைக்கிள்கள் தயாராகின்றன



''பீரோ செய்வதற்கு ராஜ பாளையம், பழனி ஆகிய இடத்திலும் தொழிற்கூடங்கள் உள்ளன. மற்றபடி வெவ்வேறு இடங்களிலுள்ள தொழிற்கூடங்களில் வெவ்வேறு பொருட்கள் தயாரிக்கிறார்கள்.''

''இந்தத் தொழிற்கூடத்தில் எவ்வளவு தயாரிக்கிறார்கள்?''

''சென்ற ஆண்டு (1969-70) 17 லட்சம் ரூபாய்க்குத் தயார் செய்திருந்தார்கள். அதிலே 1·2 லட்ச ரூபாய் லாபம். நடப்பு ஆண்டிலே 22 லட்சத்திற்குத் தயாரிக்கத் திட்டமிட்டுள்ளனர். சாதாரணமாக ஆண்டுக்கு 2,500 சைக்கிள் தயாரிப்பாங்க; அல்மைரா 1,000 தயாராகும்; நாற்காலிகள் சுமார் 3,000; கட்டில்கள் 2,000 தயாரிப்பாங்க.''

''ஆமாம்! குறிப்பிட்ட அளவிலே தானே அவங்க தயாரிச்சு வைச்சிருப்பாங்க''

''ஆமாங்க. பீரோவை எடுத்துக்கிட்டா $4\frac{1}{2}$ அடி, 6 அடின்னு ஏதோ சில அளவுகள் வைச்சிருக்காங்க. ஆனால் நிறையப் பொருட்களுக்கு நீங்க ஆர்டர் கொடுப்பதானா, உங்களுக்குத் தேவைப்படும் அளவுகளில் செய்து தருவார்கள். திருப்திதானே·''

''மிகவும் திருப்தி. முதலில் ஒரு டாக்சி பிடியும். நேரில் போய்ப் பார்த்துவிட்டுஅங்கேயே வாங்கிவிடுவோம்.''

தமிழரசு
சந்தா
ஓர் ஆண்டு ரூ 8·00
அரைஆண்டு ரூ 4·00
தனிப்பிரதி 35 காசு
விவரங்களுக்கு:
இயக்குநர்,
செய்தி, விளம்பரத்துறை,
தமிழ்நாடு அரசு - சென்னை.9.

# கதர் - கிராமத் தொழில்கள்

விவசாயிகளுக்கு ஊதியத்துடன் கூடிய வேலைவாய்ப்பளிக்கின்றன

தமிழ் நாட்டுக் கதர் - கிராமத்தொழில் வாரியத்தின் நிறுவனங்களில் உற்பத்தி செய்யப் பெற்ற பற்பல கைநுட்பப் பொருள்கள்.

கதர் கிராமத் தொழில்களை ஆதரிப்பது உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு உதவுவதாகும்

கதர் - கதர்ப்பட்டு
சோப்பு - தேன்
செக்கெண்ணெய்
தோல்பொருள்கள்
பனைவெல்லம் சர்க்கரை
மண்பாண்டம் - வார்ப்படங்கள்
பனைபொருள்கள்
பித்தளை. வெண்கலப்
பாத்திரங்கள்

மேலும்
பற்பல கைநுட்பப் பொருள்கள்

கதர் கிராமத்தொழில்
விற்பனை நிலையங்களில்
கிடைக்கும்.

வெளியீடு:

## கதர் கிராமத் தொழில் துறை

உ, சர் தேசிகாச்சாரி ரோடு சென்னை-4.

சென்னை எழும்பூர் பாந்தியன் சாலையில் ஒருகல்லூரிஇருக்கிறது. 1851-ஆம் ஆண்டிலிருந்து செயல்படுகிறது. அதாவது சென்னையில் அதுதான் மிகப் பழமையான கல்லூரி. அதற்குப் பெயர் என்ன தெரியுமா? ''செத்த காலேஜ்''!

சென்னையில் நீண்ட நெடுநாட்களாக வாழ்கின்ற மக்கள் அன்புடன் அழைக்கும் பெயர் ''செத்த காலேஜ்'. இதே எழும்பூர் பாந்தியன் சாலையில் தான் மிகப் பெரிய மருத்துவ மனையும் இருக்கிறது. புதுப்புது உயிர்கள் நாள்தோறும் இந்த மருந்துவ மனையில் தோன்றி, தமிழ்ச் சமுதாயம் என்னும் பெருங்கடலில் சங்கமமாகிக் கொண்டே இருக்கின்றன. புது உயிர்கள் தினந்தோறும் உற்பத்தியாகிக் கொண்டேஇருக்கும் இந்த மருத்துவ மனைக்கு அடுத்த கட்டடத்தில் தான் இந்த 'செத்த காலேஜ்' இருக்கிறது! இந்தக் ''காலேஜ்'' தான் சென்னை மியூசியம் என்பது. இந்த மருத்துவ மனை போலவே, இந்த மியூசியமும் மிகப் பழமையானது. இந்த 'அரும் பொருட்காட்சிச் சாலை' தோன்றி சுமார் 120 ஆண்டுகள் ஆகிவிட்டன. 1951-ல் இந்தக் காட்சிச் சாலையின் நூற்றாண்டு விழாக் கொண்டாடப்பட்டது. இந்த நூற்றாண்டு விழாவைத் துவக்கி வைத்தவர் அன்றையப் பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேரு ஆவார்கள். அவ்வமயம், இந்த மியூசியத்தைச் சார்ந்த தேசியக் கலைக் கூடமும் (National Art Gallery) பொதுமக்களுக்குத் திறந்துவைக்கப்பட்டது.



சென்னை மாநகருக்குச் சுற்றுலா வருவோர் அன்றும் இன்றும் கண்டு களிக்கின்ற முக்கியமான இடங்களில் சென்னை மியூசியமும் ஒன்று. அந்தக் காலத்தில் சென்னை மாநகரம் இவ்வளவு பெரிய நகரமாக இல்லை. சென்னைக்கு இன்று வருவோரின் சிந்தனைக்கும் கண்களுக்கும் விருந்தாகப் பல்வேறு இடங்கள் உள்ளன. சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த நிலைவேறு. அன்று, சென்னையில் முக்கியமான காட்சி சாலைகள் சென்னை மியூசியம், மூர் அங்காடியை அடுத்து உள்ள மிருகக் காட்சிச் சாலை (Zoo), லொடக் லொடக் என்று வீதியின் நடுவே ஓடிக்கொண்டிருந்தடிராம்வண்டி, மெரினுக் கடற்கரை, அடையாறு ஆலமரம் இவைதான். அன்றும் இன்றும் அருமையான காட்சிப் பொருளாகத் திகழ்வது இந்த மியூசியம்!


பல விசித்திரமான இடங்கள் சென்னையில் உள்ளன. பாந்தியன் சாலையை அடுத்துச் சென்றால் காலேஜ் ரோடு என்று ஒன்று உள்ளது. இன்று அந்தக் காலேஜ் ரோடில் 'மகளிர் கிறித்துவக் கல்லூரி' உள்ளது. ஆனால், அதன் காரணமாக 'காலேஜ் ரோடு' என்று பெயர் பெறவில்லை. மியூசியம் போலவே நீண்ட நெடுநாட்களுக்கு முன்னால் அந்தச் சாலையில், இன்று கல்வி இயக்குநர் அலுவலகம் உள்ள இடத்தில் ஒரு காலேஜ் இருந்தது. வெள்ளைக்காரர்கள் ஆண்ட காலத்தில் அரசுப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கும் கல்லூரி ஒன்று அங்கே இருந்தது. அதனால் அந்தச் சாலைக்கே 'காலேஜ் ரோடு' என்று பெயர் வந்தது; இன்றும் கல்வி இயக்குநர் அலுவலகம் இருக்கும் இடம் 'பழையகல்லூரிக் கட்டடங்கள்'' (Old College Buildings) என்றே அழைக்கப்படுகிறது.

சென்னை பழம்பெரும் நகரமல்லவா? அதனால் பழைமை வாய்ந்த பல இடங்கள் சென்னையில் உள்ளன. இந்த இடங்களில் சென்னை மியூசியமும் ஒன்று. மிருகக் காட்சிச் சாலையை மக்கள் ''உயிர் காலேஜ்'' என்றும், இந்த அரும் பொருட் காட்சிச் சாலையை 'செத்த காலேஜ்' என்றும் செல்லமாக அழைக்கத் தொடங்கினர். அந்தக் காலத்தில் சென்னைக்குப் போய் வந்தால் 'செத்த காலேஜ் பார்த்தியா' 'உயிர் காலேஜ் பார்த்தியா' என்று ஊரில் கேட்காமல் இருக்க மாட்டார்கள். அந்த அளவுக்குப் புகழ் வாய்ந்தது இந்த மியூசியம். இன்றைக்கும் அதே





புகழுடன், மேலும் பல முன்னேற்றங்களுடன் காண்போர்கண்ணையும், சிந்தனையையும் கவரும் எழிற்கூடமாகத் திகழ்கிறது.

மாநில அளவில் நடத்தப்பெறும் காட்சிச் சாலைகளுள் சென்னை மியூசியம் தான் மிகப் பெரியது; மிகப் பழமையானது. தினந்தோறும் சராசரி இரண்டாயிரம் பேர்களுக்கு மேல் இந்தக் கண்காட்சி சாலையைக் காண வருகின்றனர். பாந்தியன் சாலையில் இந்தக் காட்சி சாலையைப் பார்க்க உள்ளே நுழைந்தால், நம் கண்ணைக் கவருபவை, நிழல் தரும் பெரிய பெரிய மரங்களும், பச்சைப் பசேலென்றுள்ள கொடிகளும் செடிகளும் தான்! இந்த இடத்திலிருந்து சற்றுத் தள்ளிச் சென்றால் சென்னை மாநகரின் அசுர வேகம், கலகலப்பு எல்லாம் உண்டு. கூப்பிடு தூரத்தில் சென்னை எழும்பூர் ரயிலடி. ஒரே பரபரப்பினை ஊட்டும் சூழ்நிலை. இதன் மத்தியில், அழகின் திரு உருவாக, அமைதியின் பிறப்பிடமாக, தமிழகத்தின் அரும் பெரும் கலைச் செல்வங்களை, காட்சிப் பொருள்களைத் தன்னகத்தே கொண்டு கம்பீரமான தோற்றத்துடன் திகழ்கிறது இந்த மியூசியம். நாளொன்றுக்கு இரண்டாயிரம் பேருக்கு மேல் இக் காட்சி சாலையினைக்காண வருகிறார்கள். சிறப்பான நாட்களில், காணும் பொங்கல் நாளன்றும், துவாதசி நாளன்றும் மற்ற மற்ற நாட்களிலும் இங்கு பல்லாயிரக் கணக்கான மக்கள் வருகிறார்கள். எப்பொழுது பார்த்தாலும் சுற்றுலாப் பேருந்துகள் நின்று கொண்டே இருக்கின்றன. திருப்பதியில் ஏழுமலையானைத் தரிசனம் செய்துவிட்டுத் திரும்பும் பக்த கோடிகள் சென்னை வந்தால் தவறாமல் இந்த மியூசியத்திற்கு வந்து பார்க்கிறார்கள். இந்த மியூசியத்திற்கு வந்து விட்டால் சுற்றுலாக்காரர்களுக்கு நல்ல வேட்டை தான்! அமைதியான இடம், மனத்திற்கு ரம்மியமான சூழ்நிலை, உள்ளே மரமும், கொடியும்செடியுமாகக் குளுகுளு என்றுஇருக்கிறது. கம்பீரமான கட்டடங்கள், அக் கட்டடத்தினுள்ளே பார்த்துக் களிக்க வேண்டிய காட்சிப் பொருள்கள் ஏராளமாக உள்ளன.










''இது ஒரு பெரிய மியூசியம். ஒரே வகையான, ஒரே ரீதியான காட்சிப் பொருள்கள் இங்கு வைக்கப்படவில்லை. பல்வேறு வகையான பொருள்கள் பல்வேறு கோணங்களில் கண்டு ரசிக்கத் தக்க வகையில் அமைந்துள்ள இந்த மியூசியம். இது ஒரு பல நோக்குக் காட்சிச்சாலை. (Multi Purpose Museum). மாநில அளவில் நடத்தப் பெறும் காட்சிச் சாலைகளினுள், இந்த மியூசியம் தான் மிகவும் பழைமையானது; மிகவும் பெரியது. அத்துடன் புதுக்கோட்டை மாநிலம் தமிழகத்துடன் இணைக்கப்பட்டதும், புதுக்கோட்டையில் இருந்த பொருட் காட்சிச் சாலையும் சென்னைக்காட்சிச் சாலையுடன் இணைக்கப்பட்டு விட்டது. இன்று பல முன்னேற்றங்களை, பல புதிய அம்சங்களை இந்த மியூசியத்தில் சேர்த்துள்ளோம். இது வெறும் காட்சிச் சாலை மட்டும் அல்ல. அறிவுக்கு விருந்தூட்டும் அற்புதப்படைப்புகள் பலவற்றைத் தன்னுள்ளே கொண்டுள்ள கலைக்கருவூலமாகும். புத்தகத்தைப் படித்தால் தான் அறிவு வளருமென்பதில்லை. இப்படிப்பட்ட காட்சிச் சாலைகளும் சிறந்த அறிவாலயங்கள் தான்'' என்று பெருமிதத்துடன் கூறுகிறார், காட்சிச் சாலைகளின் இயக்குநராகஉள்ள திரு எஸ். டி. சத்தியமூர்த்தி அவர்கள். அவர் கூற்று நூற்றுக்கு நூறு உண்மை





என்பது இந்தக் காட்சிச் சாலையை ஒரு முறை சுற்றிப் பார்த்துவிட்டு வந்த பிறகு நன்ருகத் தெளிவாகப் புரிகிறது,

காவி நிறக் கலவை பூசப்பட்ட அந்தப் பிரமாண்டமான கட்டடத்தினுள் புகும் பொழுதே, ஏதோ தெய்வத் தமிழ் நாட்டின் திருக்கோயில்களினுள் புகுந்துவிட்டோமா என்ற பிரமை நம்மை அறியாமலேயே நமக்கு ஏற்படுகிறது. பாரத நாட்டின் சிற்பக்கலையின் மகோன்னதம், சிலைசெய்யும் திறன், பெருமிதம், அத்தனையையும் அங்கு காணலாம். இந்த அரங்குக்கே சிறப்பூட்டும் முறையில் அவை அமைந்துள்ளன. சுமார் 2,200 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலம் தொடங்கி, அண்மைக் காலம் வரையில், சிற்பக் கலை, சிலை வடிக்கும் கலையின் வரலாற்றை வடித்துக் கொடுக்கின்ற வகையில் பல்வேறு சிற்பங்கள், சிலைகள் இந்த அரங்கில் காணப்படுகின்றன.

நாட்டு வரலாறு, மக்களின் கலைத் திறன் கற்பனைச் செறிவு, இக்கலைச் சிற்பங்களில் அப்படியே தத்ரூபமாக விளையாடிக் கொண்டிருக்கின்றன. படிமக் கூடத்தை (BronzeGallery) இன்றைக்கெல்லாம் பார்த்துக்கொண்டேயிருக்கலாம். விசாலமான மண்டபத்தில் கண்ணாடிகள் பொருத்தப்பட்ட அறைகளில் படிமங்களான சிலைகள் நம் சிந்தனையைக் கிளறி விடுகின்றன. செங்கை மாவட்டம் திருவாலங்காட்டிலிருந்து கொண்டுவந்து வைக்கப்பட்டுள்ள நடராசர் சிலை இக்காட்சிச் சாலைக்கே மணிமகுடமாகத் திகழ்கிறது எனலாம். கூத்தபிரானின் அந்தச் சிலை நமக்குக் கதைகதையாகச் சொல்கிறது. சிலையின் ஒவ்வொரு அசைவும், பார்ப்போரின் இதயத்தை யெல்லாம் கிறங்க வைத்து விடுகிறது.

கம்பீரமான தோற்றத்துடன் ஒரு காலைத் தூக்கி நின்ருடும் நிலையில் உள்ள அழகின் திரு உருவாக அமைந்துள்ள ஆடலரசனின் அந்தச் சிலையைப் பார்ப்பதற்காக மட்டுமே இந்தக் காட்சிச் சாலைக்கு ஒரு முறை போய்விட்டு வரலாம். இங்கே புத்தர் காலச்சிலைகள் உள்ளன. சோழர் காலச் சிற்பங்கள், சிலைகள் உள்ளன. தமிழ் நாட்டின் வரலாற்றுப்பின்னணியைத் தெளிவாகக் காட்டும் வகையில் சிற்பங்கள், சிலைகள், எழுத்து வடிவங்கள், செப்பேடுகள், பழங்கால நாணயங்கள் எல்லாமே கலைக் கண்ணேட்டத்துடன் இந்த அரங்குக்குள் ஒளிவீசிக் கொண்டிருக்கின்றன.

மனித இன வரலாற்றினைச் சுட்டிக் காட்டும் பிரிவு (Anthropology) மிக முக்கியமான ஒன்ருகும். கற்காலம் தொட்டு மனித இனத்தின் வரலாற்றை இங்குள்ளபொருட்கள்நமக்குப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. இந்த வகையில் சென்னை மியூசியம் தான் மிகப் பழமையான நிறுவனம் என்று சொல்லப்படுகிறது. செங்கை மாவட்டம் அதிராம்பாக்கத்தில் கண்டெடுக்கப்பட்ட பழங் கற்கள் (Palacolith) 1863-ம் ஆண்டில் புருஸ் ஃபுட் என்ற ஆங்கிலேயரால் சேகரிக்கப்பட்டு இந்தக் காட்சிச் சாலையில் வைக்கப்பட்டுள்ளன. நீலகிரி மாவட்டத்தில் வதியும் பழங்குடிகளான தோதவர்கள் கையாண்டு வரும் கருவிகள், மட்பாண்டங்கள், நகைகள் இரும்புக் கருவிகள், எல்லாமே இங்கே தொகுத்து





வைக்கப்பட்டுள்ளன. பழங்கால வரலாற்றில் ஈடுபட்டுள்ள மாணவர்களுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும் இவை பெரிதும் பயன்படும்.

பழங்கால நாணயங்கள் சேகரிக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ள பிரிவுகள் பண்டைக்கால மக்களின் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. திராவிட நாட்டின் பல்வேறு பகுதிகளில், பல்வேறு காலங்களில் பயன்படுத்தப் பட்ட பழங்கால நாணயங்கள் ஏராளமாக உள்ளன. இவற்றில் குப்தர் கால நாணயங்கள் பெரும்பாலனவை. ஆந்திர மாநிலத்தில் இராசமகேந்திரபுரம் அருகில் உள்ள தௌலேஸ்வரம் என்ற ஊரில் கிடைத்த 127 தங்க நாணயங்கள் அண்மையில் இந்தக் கருவூலத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. கீழைச் சாளுக்கிய மன்னர்கள், முதலாம் இராசராசசோழன், குலோத்துங்க சோழன் முதலிய மாமன்னர்கள் காலத்தவை இவை.

இயற்கைப் பொருள்கள் பலவும் வைக்கப்பட்டுள்ளன. மிருகங்கள், தாவரங்கள், கற்கள் என்று சிறு சிறு பிரிவுகளாக உள்ள இப்பிரிவு சிறார்களுக்குப் பெருமகிழ்ச்சி ஊட்டுவதாகும். இங்கே ஒரு பெரிய யானையின் எலும்புக் கூட்டினைக் கொண்டு வந்து அரங்கின் மத்தியில் வைத்திருக்கிறார்கள். சுமார் 11 அடி உயரம் உள்ளது இது. வட ஆர்க்காடு மாவட்டம் செங்கம் பகுதியில் வசித்து வந்த மிகப்பெரிய யானை ஒன்று திடீரென்று திமிர் பிடித்து ஓடி பலரைச் சாகடித்து விட்டதாம். அதைச் சுட்டு அந்த எலும்புக் கூட்டைக்கொண்டு வந்து வைத்திருக்கிறார்கள். இன்னும் கடல் சிங்கம், கடல் கன்னி, பறக்கும் அணில் எல்லாம் இங்கே பார்க்கலாம். பாம்பு வகைகள் தான் எத்தனை உள்ளன! எல்லாம் உயிரில்லாதவைதான். குழந்தைகள், சிறுவர்கள் எல்லாம் மிகவும் வியப்புடன், அதே சமயம் அச்சமின்றி அவற்றைக்கண்டு களிக்கின்றனர்.

தனிச் சிறப்புடன் திகழ்வது குழந்தைகள் அரங்கு (Childrens Gallery). இது அண்மையில் துவக்கப்பட்டது. பள்ளி மாணவர்கள் பார்த்து ரசிக்க வேண்டிய எல்லாப் பொருட்களும் இங்கே உள்ளன. மண் வளம் பற்றி விளக்கும் பொருட்கள், இந்திய நாட்டின் கனிவளம், சிறு சிறு வடிவங்களில் அமைந்துள்ளன. கற்காலப் பிராணிகளின் அமைப்புகள், அந்தக்காலப்பழக்கவழக்கங்களைக் காட்டும் பொருள்கள், மனிதன் அன்று தொட்டு இன்று வரை பயன் படுத்திவந்த, வரும் போக்குவரத்துக் கருவிகளின் ‘ மாதிரி அமைவு’ கள் எல்லாம் அழகான கண்ணாடிப் பெட்டிகளில் வைக்கப்பட்டுள்ளன.



## ஒரு கண்ணோட்டம்

**சென்னையின் மக்கள் தொகை— சுமார் 21 லட்சம்.**

**குடிசைகளில் வாழ்வோர்— சுமார் 7 லட்சம்.**

**சென்னையிலுள்ள வீடுகளின் எண்ணிக்கை—சுமார்1,15,000**

**குடிசைப்பகுதிகள்—491**

**வீட்டுவசதி வாரியம் இதுவரை தீட்டியுள்ள திட்டங்கள்—59.**

**(மதிப்பீடு—ரூ. 963 லட்சம்.)**

**இது வரை நிறைவேற்றியது— 24 திட்டங்கள்.**

**(செலவிடப்பட்ட தொகை—ரூ.755 லட்சம்.)**

**இது வரை கட்டப்பட்ட குடியிருப்புகள்—7,454**

**சென்னை நகரிலுள்ள எல்லா குடிசைப் பகுதிகளையும் மாற்றத் தேவை ரூ. 60 கோடி.**

அஞ்சல் தலைகள் ஏராளமாகச் சேகரிக்கப்பட்டு அஞ்சல் தலைகள் அரங்கில் ( Philatelic Gallery ) வைக்கப்பட்டுள்ளன. இந்தப் பிரிவு அண்மையில் புதிதாக இங்கு சேர்க்கப்பட்டுள்ளது. இந்தப் பிரிவில் உலகத்தின் எல்லா நாடுகளிலிருந்தும் சேகரிக்கப்பட்ட நாற்பத்து மூன்றாயிரம் அஞ்சல் தலைகள் உள்ளன ; இந்த மாதிரி பெருவாரியான அளவில் உள்ள அஞ்சல் தலைகள் பிரிவு இந்தியாவில் வேறு எந்த மியூசியத்திலும் இல்லை.

இந்தக் காட்சிச் சாலையைச் சேர்ந்த இரசாயனப் பொருள்கள் ஆய்வுக்கூடம் (Chemical Conservation Laboratory) தனிச் சிறப்பு வாய்ந்தது. இக் காட்சிச் சாலையில் வைக்கப்பட்டுள்ள பழம் பொருட்கள் கெட்டுப்போகாமல், இரசாயன முறையில் பாதுகாத்து வைக்கின்ற பணியினை இந்த ஆய்வுக்கூடம் செய்கிறது.

உலகத்தின் எல்லா நாடுகளிலிருந்தும் சேகரிக்கப்பட்ட 43,000 அஞ்சல் தலைகள், உலகத்தின் வேறு எங்குமே இல்லாத வகையில் மிகவும் சிறப்புவாய்ந்த தென்இந்திய படிமத்திலான சிலைகள், உலகப் புகழ் பெற்ற பழங் கற்களாலான பொருள்கள், அமராவதி ஸ்தூபத்திலிருந்து சேகரித்து வைக்கப்பட்டுள்ளபெரிய அளவில் உள்ள புத்தர் காலச் சிற்பங்கள் இவை அத்தனையும் சென்னை அரும் பொருட்காட்சிச் சாலையின் சிறப்புக்கு மணி மகுடங்களாகத் திகழ்கின்றன.

புத்தர் பெருமானின் அழகுச் சிலையிலிருந்து கடற் பாசி வரை, அத்தனையும் தன்னகத்தே கொண்டுள்ள சென்னை மியூசியம்— வெறும் கண்காட்சிச் சாலை மட்டுமல்ல, சுற்றுலா வருவோர்க்கு அது ஒரு சுவர்க்கம். சின்னஞ் சிறார்களுக்கு ஓர் அறிவாலயம் ; படித்த மக்களுக்கு அது ஒரு பயிற்சிக்கூடம்.

எல்லாமே இங்கே, இந்தக் காட்சிச் சாலையில், பழைமையானவைதான். பழம் பொருட்கள் காட்சிச் சாலை. அதனால் பழம் பொருள்கள் தான் உள்ளன. இந்த அரும் பொருட்களஞ்சியத்தைப் பார்க்க வருவோர்க்கு ஒரே ஒரு குறைதான் இருக்கமுடியும். மணிக்கணக்காகச் சுற்றிப் பார்த்துவிட்டு மன நிறைவுடன் காட்சிச் சாலையை விட்டு வெளியே வரும் பொழுது ‘‘ செத்த காலே’’ ஜைப் பார்த்த நினைவோடு நாம் திரும்பவில்லை. காலத்தால் சாகடிக்க முடியாத காலேஜைப் பார்த்த நினைவோடு தான்வருகிறோம்!

# வெண்பாப் போட்டி

‘காணக் குளிர்ந்ததே கண்’ என்ற ஈற்றடியை வைத்து எழுதப்பட்ட வெண்பாவில், திரு. ந. ஜாபர் எழுதிய வெண்பா பரிசு பெறுகிறது. பரிசு பெற்ற வெண்பாவும், வெளியிடுவதற்குத் தகுதி படைத்த நூற்றுக்கணக்கான வெண்பாக்களில் இட நெருக்கடி காரணமாகச் சில வெண்பாக்களும் இங்கே வெளியிடப் படுகின்றன.

(ஆ-ர்.)

## 3. காணக் குளிர்ந்ததே கண்

மென்மைத் தளிருடலும் மின்னும் இளநகையும்
சின்னக் கருவிழியும் சேர்ந்திலங்கி—இன்னமுதும்
நாணச் சுவையளிக்கும் நன்மழலைச் செல்வமதைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—ந. ஜாபர், சித்தையன்கோட்டை.

ஏழைச் சிரிப்பில் இறைவன் உளன் என்னும்
ஊழை வெலுஞ்சொல் ஒளிபெறவே—கூழைத்தான்
காணத் துடித்தழுவார் கையில் நிலப்பட்டா
காணக் குளிர்ந்ததே கண்.

—உலகன், ஈரோடு.

பாசனத்தால் நீர்பெருக்கிப் பாடுபடு வோர்க்குநிலச்
சாசனத்தால் சீர்பெருக்கித் தண்டமிழ்சிம்—மாசனத்தார்
நாணற் கரையெல்லாம் நன்செய்யாய் மாற்றுவதைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—செவ்வேள், புதுவை-3.

முத்துத் தமிழ்வளர்த்த முன்னோர்க்குச் சென்னையிலே
பத்துச் சிலைவைத்துப் பாங்குறவே—எத்திக்கும்
பேணப் பெருமையுடன் பீடுபெறும் நம்மரசைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—எ. மாணிக்கம், விசூர்.

உட்குழிந்த கன்னம் உலர்ந்த வயிறெல்லாம்
தட்டில் உணவால் தழைத்தனவே—முட்டின்றி
வேணவா நீக்க விளையும் நிலமகளைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—முத்தரசன், காரைக்குடி.

காய்ந்திட்ட ஏரிகுளம் கால்வாய்கள் தூரெடுத்துப்
பாய்ந்தநீர் குன்றாப் பசுமையுடன்—சாய்ந்தகதிர்
காணப் புதிதாம் கருணைநெற் கண்டுமுதல்
காணக் குளிர்ந்ததே கண்.

—கரு.சோமு, அம்பத்தூர்.

பஞ்சநதீர் ஆடுதுறை பத்மா கருணைவும்
அஞ்சுடனே ஐஆரெட் டாம்நெல்லும்—தஞ்சையில்
மாணக் கொழிக்கும் மருத நிலந்தன்னைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—கோ. பாவை. ஆயங்குடிப்பள்ளம்-

விண்ணிலவிற் காலூன்றி வீரக் கொடிநாட்டி
மண்ணெடுத்துப் பேசி மகிழ்ந்துலவி—வண்ணமுடன்
காணப்படம் பிடித்துக் கண்குளிர வந்தவரைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—பழ. மு-முத்தழகப்பன், சென்னை-28.

கல்வி, நிலப்பட்டா, கட்டுமனை, ஆழ்கிணறு
நல்ல குடிநீரும், நற்றொழிலும்—பல்வேறு
கோணத்தில் முன்னேறக் கூட்டுறவும் ஏர்வளமும்
காணக் குளிர்ந்ததே கண்.

—க. ஆ. இராசன், திருச்செங்கோடு.

ஏற்ற தொழிலாளர் ஏருழுவர்—ஏழைபலர்
போற்றுதமி ழாட்சிநிதிப் பொன்பெற்று—வேற்றயலார்
நாணத் தமிழ்நாட்டில் நன்மையடைந் தின்பமுறல்
காணக் குளிர்ந்ததே கண்.

—ஐ. க. பெருமாள்சாமி, பவானி.

சிந்தையினில் ஆர்வம் செழித்துவளம் பெற்றோங்கச்
செந்தமிழ்க்குத் தொண்டு தினம்புரிந்த—முந்தையரின்
மாணற் புதச்சிலைகள் மன்னுசென்னை மாநகரிற்
காணக் குளிர்ந்ததே கண்.

—மாதையூரான், திருவாமாத்தூர்.

---

பரிசு பெற்ற வெண்பா எழுதியவர் :
திரு. ந. ஜாபர், தெற்கு முஸ்லிம் தெரு,
சித்தையன் கோட்டை அஞ்சல், திண்டுக்கல் வட்டம்.

ஆளும் அரசுலகில் ஆயிரந்தான் ஆனாலும்
நீளும் தமிழரசின் நேராமோ ?—நாளும்
மாணக் குடிபுரக்கும் மாக்கலைஞர் நல்லரசைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—வே. கா. அப்துல்ரசாக், ஈரோடு-5.

சாதி சமயச் சழக்கொழித்துச் சீர்திருத்தக்
காதல் மணங்கள் கமழ்ந்திடவே—மேதகுசீர்
பேணும் பரிசும் பிறவும் திருமணத்தைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—இல. க. இரத்தினவேல், திருச்சி-1.

பொங்கு கடல்தாண்டிப் பூதலத்தோர் போற்றிடவே
மங்காத் தமிழ் பரப்பும் சிங்கமென—எங்கும்
நாணமிகு சாதிதனை நன்றாய் ஒழிப்பவனைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—உ. வி. செயக்குமார், பழனி.

அப்போது ஆண்டார் அரசர் தமிழகத்தைத்
தப்பாமல் ஆளும் தமிழரசை— இப்போது
காண அயலார் கடைப்பிடிக்கு மாட்சிதனைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—எம். செல்வம், இடையகோட்டை.

காலைக் கதிரொளியில் கந்தன் திருவடியும்
மாலை மதியில் மலர்முகமும்—நீலமுறு
மாணக் கடலில் மயிலின் திருநடமும்
காணக் குளிர்ந்ததே கண்.

—சி. சுவாமிநாதன், சென்னை-17.

அம்பொன் குறளாம் அறிவுயர்த்தும் நற்சிலம்பாம்
கம்பன் சுவையார் கவியமுதாம்—இம்மூன்றைப்
பேணப் புவியனைத்தும் பேசப் புகழ்ந்தேத்தக்
காணக் குளிர்ந்ததே கண்.

—அ. கிருஷ்ணன், கணியூர்.

செங்கோலுஞ் செந்தமிழுஞ் சேர்ந்தவிதழ்ச் செம்மலர்தேன்
பொங்கிவழிந் தாளவரும் பொன்னருவி—தங்குபுகழ்
மாணப் பெருவளஞ்சேர் மாக்கடலின் தண்ணொளியைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—எழிற்கோவன், ஒசூர்

எப்பாலும் சொல்ல வியலாத ஆட்சிமுறை
முப்பா லரசு மொழிந்ததுபோல்— இப்போது
பேணக் கிடைத்தநம் நாட்டின் பெருமையைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—நந்தி, வெங்கல்பாளையம்.

எங்குந் தமிழ் முழக்கம் ; இன்பத் தமிழ்நாடு ;
பொங்கும் வளங்கள் பொருள்வளர்ச்சி—தங்கம்நாம்
பூணும் கலப்பு மணத்திற்கும் போற்றுதலைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—அர. கலியபெருமாள், இலால்குடி.

கூவம் மணம்வீசக் கோட்டையினில் செந்தமிழின்
மேவு புகழ்மணக்க மேம்படுத்தி—மேவாரும்
மாணப் புகழ்ந்துரைக்கும் மாண்புத் தமிழரசைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—பா. முருகையன், சென்னை-1.

நெற்றி வியர்வை நிலத்தின்கண் சிந்திஏர்
பற்றி உழும்நல்ல பாட்டாளி—வெற்றியுடன்
மாணநிலப் பட்டாவை வாங்கிப் பெறுமின்பம்
காணக் குளிர்ந்ததே கண்.

—அன்பு. செயராமன், அரக்கோணம்.

மலையின் அருவி ; மழலைச் சிரிப்பு ;
கலையில் நமதரசு காட்டும்—விலைமதிப்பாம் !
நாணயம்போல் நாட்டினிலே நாயகத்தின் பல்வளத்தைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—ப. சின்னச்சாமி, ஏரிப்பாளையம்

சேரிகள் எல்லாமே செவ்வனே நீங்கிவர
மாரியினால் மக்களுமே மாண்புறவே—சீரிலங்கப்
பேணும் மனைப்பட்டா பேசுகலை ஈண்டுயரக்
காணக் குளிர்ந்ததே கண்.

—ம. இரா. தர்மலிங்கம், வித்யாலயம்.

அன்னம் இலாவயிறும் ஆடை யிலாமெய்யும்
இன்னம் இலாவண்ணம் ஏற்றவே—மன்னுலகில்
மாண மகிழ்ச்சிகொள் மாந்தரை ராக்கனவில்
காணக் குளிர்ந்ததே கண்.

—கி. கா. இராசேந்திரன், சென்னை-7.

வளமிழந்து வாழ்விழந்து வீழ்ந்ததமிழ் மக்கள்
வளம்பெற்று வாழ்வாங்கு வாழ—விளக்கேற்ற
'' வானமெழு ஞாயிறென '' வந்த தமிழரசைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—வா. அ. நத்தோடு, கடையநல்லூர்.

முத்தமிழ் வாழ்த்த, முழங்குகடல் சீர்பாட
மெத்த புகழ்த்தென்றல் மேல்தழுவ—எத்திக்கும்
நாண வளங்கொழிக்கும் நாட்டில் தமிழரசைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—கே. சின்னசாமி, காட்டு எடையார்,

பொட்டில்லை ; பூச்சூடச் சுற்றத்தார் ஒப்பவில்லை ;
கட்டினேன் காரிகைக்குப் பொற்றாலி—சுட்டெடுத்த
ஆணிப்பொன் பூமுகத்தில் ஆனந்தப் புன்முறுவல்
காணக் குளிர்ந்ததே கண்.

—வெ. செகநாதன், குறிச்சி–போத்தனூர்.

கண்டுநிகர் அண்ணா கண்குளிரச் சென்னையிலே
கண்டதமிழ் மாநாடு, கண்டனையா—என் நண்பா !
காணருங் காட்சியாம் கண்கொள்ளா ஊர்வலமாம்
காணக் குளிர்ந்ததே கண்.

—வி. ஆர். துரை, திருப்பத்தூர்.

அன்னைத் தமிழை அரியணையில் வைத்தவரை
செந்நெல் விளைவுமிகச் செய்தவரை—நன்னெறியே
பூணுகின்ற நெஞ்சினரை, கற்புடைய பூவையரைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—திருவாட்டி செல்லம் பாண்டியன், மதுரை.

காலைக் கதிரைக் கடலினிலே, செந்தமிழைக்
கோலோச்சும் ஆட்சிக் கொலுவினிலே—சீலத்தைப்
பேணுகின்ற நெஞ்சினிலே, பேரின்பம் தொண்டினிலே
காணக் குளிர்ந்ததே கண்.

—பேகன், மதுரை-1.

முன்னம் தமிழ்காத்து மூவேந்தர் நாடாண்டார்
இன்னும் தமிழ்காக்க யாமுண்டென்—றின்னமுதாய்ப்
பேணித் தமிழ்வளர்த்த பேரறிஞர் நற்சிலையைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—சிகோ. ஆறுமுகம், இராசபாளையம்.

தேன்சொட்டும் செந்தமிழின் தேர்ந்த தமிழிதழே !
வான்முட்ட வாழ்த்துகிறேன் வாழ்க நீ !—நான்முகப்பில்
பேணப் பெருமைமிகு பேசுவதில் நாவலரைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—வெ. குமாரசாமி, பாலசமுத்திரம்.

பாடச் சிறந்தது பைந்தமிழே ; நன்மைகள்
கூடப் பிறந்தது கூட்டுறவே—ஆடகப் பொன்
பூணத் தகுந்தது பூவுடலே ; ' நல்லரசைக் '
காணக் குளிர்ந்ததே கண்.

—மு. சிக்கந்தர், கோரிக்கடவு.

கல்லடியும் சொல்லடியும் காட்டாறாய்க் கண்டாலும்
நல்லதைச் செய்திடுவீர் நாளுமென்றே—சொல்லிஉயர்
நாணலாய் வாழ்ந்திட்ட நல்லறிஞர் அண்ணாவைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—எம். ஆரோக்கியசாமி, மட்டப்பாறை.

பொட்டல் நிலமெல்லாம் பூத்துக் குலுங்குவதைக்
கட்டுக் கலங்காணுங் காட்சிதனைத்—தொட்டவிடம்
மாணச் சிறக்கும் ; மகராச ணுட்சியினைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—ஆனந்தக் கூத்தன், கோபாலசமுத்திரம்.

பொட்டிட்டுப் பூச்சூடிப் புன்னகையும் தான்கொண்டு
மட்டில்லா ஆவல் மனத்தடக்கிக்—கட்டழகி
நாணம் மிகுந்து எனையழைத்தாள் ஆங்கவளைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—ச. வீரப்பன், போதுப்பட்டி.

காலையிலே கண்மலர்ந்து கஞ்சி குடித்துவிட்டே
ஆலைக்கே ஓடும் அவனுக்கு—மாலையிலே
பேண வருகின்ற பீடுதரும் கூலியினைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—எம். சண்முகன், பெரியசேமூர்.

சிங்கா தனத்திற் செழுந்தமிழே நீயமர்ந்து
செங்கோற் பிடித்தாளுஞ் சீர்மைதனைப்—பொங்குகலை
வாணர் கணமெல்லாம் வாழ்த்திசைப்ப நின்னெழிலைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—திரு. மு. நம்மாழ்வார், கோயம்புத்தூர்-1.

பூட்டிய வாரசையப், பூங்குழல் சீரசைய,
நாட்டியக் காலாட, நாற்புறமும்—ஒட்டுவிழி
நாணச், சிவக்க நடைபோடும் நங்கைமுகம்
காணக் குளிர்ந்ததே கண்.

—க. தனபால், இரும்பேடு.

சீவித் தலைமுடித்துச் சீரார் திலகமிட்டே
ஓவியம் போலுடுத்தி ஓடிவந்த—காவியமே
நாணல்போல் நங்கை நடக்கும் ஒயிலழகைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—எச். எலிசபெத், சென்னை-12.

'' வான்மழையின் வாடைக்கும் வன்கதிரின் கோடைக்கும்
ஊன்கரைய மெய்யளிப்பான் ஊக்கமிகப்—பான்மைசூழ்
மாண்போடு வீதிமுறை மாற்றிநல் வீட்டுமனை
காணக் குளிர்ந்ததே கண்.''

—அமிழ்தப்பன், சென்னை-18.

சாதிமுறை யெல்லாந் தவிர்த்துத் தடையெதிர்த்து
நீதிமுறை யொன்றால் நிலமளிக்கும்—ஓதுமுயர்
மாணப் பெருமை மலியுந் தமிழரசைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—சி. இரத்தினவேலனார், சென்னை-19.

பனிமொழியைப் பாராப் பிரிவுத்தீ வாட்ட
தனிமைச் சிறையில் தவித்தேன்—இனிதின்று
நாணமுடன் இன்பூட்ட நாடிவந்த பெண்ணவளைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—க. தமிழ்ச் செல்வன், குறும்பூண்டி.

நாவளத்தால் நல்ல தமிழ்வளர்த்துச் சங்கத்துப்
பாவளர்த்த நாட்டில்வெண் பாவளர்த்து—கோவளத்தால்
வேணதெலாஞ் செய்து விளம்பும் தமிழரசைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—சத்திரமனை, சித்திரகவி, மேட்டுப்பாளையம்.

வெப்பக் கதிரால் வெடித்திட்டே காய்ந்தவயல்
செப்பரிய நிர்மாணச் செய்முறையால்—இப்பொழுது
நாநிலமும் நெல்விளையும் நன்னிலமாய் மாறியதைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—அ. சாரங்கபாணி, திண்டுக்கல்-2.

'' வங்கக் கடலலைகள் வந்து தழுவுகின்ற
மங்காப் புகழுடைய மல்லையில்—எங்கணுமே
காண்பார் உளம்கவரும் கற்றளியைச் சிற்பத்தை
காணக் குளிர்ந்ததே கண்.''

—காந்திதாசன், பல்லவராயன்பட்டி.

ஆமை முதுகின் வரியொப்ப அங்கங்கே
பூமி வெடிப்புற்ற போதினிலும்—ஊமைபோல்
நாணித் தலைகுனிந்த நல்லகதிர் நாட்டின்கண்
காணக் குளிர்ந்ததே கண்.

—ரெ. அழகப்பன், திருவொற்றியூர்.

துள்ளிக் குதித்துத் துணையாக ஆடியவள்
அள்ளும் பருவம் அடைந்தவுடன்—மெள்ளமெள்ள
நாணி வளைந்தாள் நகங்கடித்து நின்றிட்டாள்
காணக் குளிர்ந்ததே கண்.

—புலவர் ச. மருதமுத்து, உடுமலை.

அன்பும் அகிம்சை அறவழியே காட்டித்தன்
என்பும் நமக்கீந்தே கினரே—அன்பில்லார்
நாணவே காந்திமகான் நல்வழிபோம் நம்மரசைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—வெ. ஜெகந்நாதன், காட்டிடையார்.

பத்தினிக்கும் பாவலர்க்கும் பைந்தமிழின் காவலர்க்கும்
சித்த மினிக்கச் சிலையெடுத்த—புத்தரண்ணு
பூணப் புகழ்ந்த பசுமைப் புரட்சியினைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—தொ. முத்துசாமி, தாத்தையங்கார்பேட்டை.

பஞ்சொத்த மெல்லிய பாதந் தொடுகின்ற
குஞ்சந் தவழ்கின்ற கூந்தலாள்—மஞ்ஞைபோல்
நாணமொடு மெல்ல நடந்துவரும் பேரழகைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—இலமா. பூங்குன்றன், சென்னை-28.

சிந்தை விருந்தாகச் சீரணிதேர், ஊர்திகள்
சுந்தரச் சென்னையில் சூழ்ந்ததம்மா—எந்தெந்தக்
கோணத்தில் காந்தியக் கொள்கைள் ! அத்தனையும்
காணக் குளிர்ந்ததே கண்.

—ஏ. சேவியர், திருச்சி-8.

எண்ணக் குளிர்ந்த திதயம்; இதழமுதை
உண்ணக் குளிர்ந்த துடலெங்கும்—வண்ணவிழி
நாணிச் சிவந்த நளின முகத்தாளைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—குழ. அண்ணாமலை, கோவை.

அண்ணா மலையருகே ஆடிச் சிறப்போடு
வண்ணம் மலிந்து வளங்கொழிக்கும்—தண்வயலில்
பூணும் கதிர்மணிகள் பூத்துக் குலுங்குவதைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—பி. ஜே. கிருஷ்ணமூர்த்தி, ஆரணி.

கண்ணிற்கு மையிட்டுக் காதில் குழையணிந்து
பண்ணுடனே மெல்லிசையால் பாடுகின்ற—பெண்மகளே
நாணமுடன் நின்று நகைப்பூட்டும் நின்னுருவைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—இரா. பசுபதி, ஆயக்காரன்புலம்-2.

ஒற்றுமையை நாடும் உலகக் கவிவிருதைப்
பெற்றேதான் நாட்டிற்குப் பேர்சேர்த்துச்—சுற்றம்போல்
பேணி அரசாளும் பெம்மான் கலைஞரைக்
காணக் குளிர்ந்ததே கண்.

—மு. அ. முகில்வண்ணன், செய்துங்கநல்லூர்.

சீராட்சி எங்கும் சிறப்பாட்சி—நம்கலைஞர்
பேராட்சி பைந்தமிழ் பேசுமாட்சி—நேராட்சி
மாணாட்சி மக்கள் மகிழாட்சி ஓராட்சி
காணக் குளிர்ந்ததே கண்.

—அபமு. போடிநாயக்கனூர்.

'பட்டா' வழங்காட்சி; பாட்டாளி நல்வாழ்வின்
திட்டம் வகுத்தாட்சி திண்முரசு—கொட்டுதடா
மாணப் பெருமையெல்லாம் மட்டில் பெருங்காட்சி
காணக் குளிர்ந்ததே கண்.

—இ. பண்டாரம், கருங்குளம்.

# உங்களுக்குத் தெரியுமா?

## கரையும் தாள்

தண்ணீரில் போட்டதும் கரையக் கூடிய தாளை பென்சில்வேனியா நாட்டு நிறுவனம் ஒன்று கண்டு பிடித்துள்ளது. இந்தத் தாளுக்கு 'டிசால்வோ' (கரையும்) என்று பெயர் கொடுத்திருக்கிறார்கள்.

இந்தத் தாளில் செய்த பையில் சர்க்கரைபோட்டுக் கொண்டுவந்தால், இனிப்பு சிற்றுண்டி செய்யப் பையை உடைத்துச் சர்க்கரையைக் கொட்ட வேண்டியதில்லை. அப்படியே பையோடு போட்டுவிடலாம். பையும் சர்க்கரையும் அப்படியே தண்ணீரில் கலந்துவிடும்.

மிக ரகசியக் குறிப்புகளுக்கும் (Very Secret documents), விவசாயப் பொருட்களுக்காகவும், இரும்புக் குழாய்களை ஒட்டவைக்கவும் (வெல்டிங்) இந்தத் தாள்களைப் பயன்படுத்தலாம் என்று அந்த நிறுவனம் தெரிவிக்கிறது.


## புதிய தொலைபேசி

புதிய தொலைபேசிக் கருவியை தமிழ்நாடு கண்டுபிடிப்பாளர் சங்கத்தைச் சேர்ந்த திரு பி. கருணாகரனும், திரு பி. சூரியநாராயணனும் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

மற்ற தொலைபேசியைப் போல், இதில் பேச்சு வாங்கியை (receiver) எடுத்துக் காதிற்கும் வாய்க்கும் நேராக வைத்துக் கொண்டு பேச வேண்டியதில்லை. எண்களைச் சுழற்றிவிட்டு தொலைபேசிப் பெட்டியில் (cabinet) நேரடியாகப் பேசலாம். இதில் பேசும் போது நண்பருடன் எதிரில் அமர்ந்து பேசுவதுபோல் தெளிவாகயிருக்கும். தொலைபேசியில் பேசும் உணர்வு ஏற்படாது. இந்தத் தொலைபேசியின் விலை ரூ. 196 என்று தெரிகிறது.

## மருத்துவத்திற்குப் பரிசுச் சீட்டு!

பரிசுச் சீட்டிலிருந்து கிடைக்கும் வருவாயிலிருந்து சென்னை நகருக்கு மருத்துவ வசதி அளிப்பதற்காக 25 லட்சம் ரூபாயும் தமிழகத்தின் பிறபகுதிகளுக்காக 50 லட்சம் ரூபாயும் தமிழக அரசு ஒதுக்கியிருக்கிறது. ஏழை மக்களுக்குப் பயன்தரும் இத்திட்டம் விரைவில் அமுலுக்கு வரும்.




தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (T.N.S.I.D.C.) என்ற அமைப்பைஉருவாக்கியதில் நமது தொழிலமைச்சர் மாண்புமிகு மாதவன் அவர்கள் பெரும் அக்கறை காட்டியுள்ளார். இந்த நிறுவனம் சிறு தொழிலுக்குத் தேவையான உள்நாட்டுக் கச்சாப் பொருட்களைப் பல்வேறு இடங்களிலிருந்து சேகரித்து நியாயமான விலையில் விநியோகிக்க முற்பட்டுள்ளது. சாதாரணமாக அதிக விலைகொடுத்து வாங்க வேண்டிய பொருள்களை நியாய விலைக்குச் சிறு தொழில்களுக்குக் கிடைக்கச் செய்துள்ள இந்தஏற்பாடு வரவேற்கத் தகுந்தது. அது மட்டுமல்ல சிறு தொழில்களின் பல்வேறு இறக்குமதி லைசன்ஸு களை நன்கு ஒன்று சேர்த்து ஒட்டு மொத்தமாகச் சர்வதேச அரங்கில் இறக்குமதிப் பொருள்களுக்குப் பேரம் செய்து, குறைந்த விலையில், துரித காலத்தில் மேற்கண்ட பொருள்களை இறக்குமதி செய்து சிறு தொழில்களுக்குக் கொடுக்க இந்த நிறுவனம் திட்டமிட்டுள்ளது. தற்போதுள்ள தொழிற்பேட்டைகளுக்கு அருகில் சிறு ஷெட்டுகள் அமைத்துப் படித்துப் பட்டம் பெற்ற எஞ்சினியர்களில் புதிதாகத் தொழில் ஆரம்பிக்க விரும்புவோர்களுக்கும் உதவி செய்ய நமது தமிழக அரசு முன் வந்துள்ளது.

சிறு தொழில்களின் நிதித் தேவைகளை நிறைவு செய்யத் தமிழ்நாட்டுத்தொழில் முதலீட்டு நிறுவனம் ( TNIIC ) மூலம் தாராளமான முறையில் தொழிற்சாலை ஷெட்டுகள் அமைக்கவும், இயந்திரங்கள் வாங்கவும், கடன் கொடுப்பது என்று நமது அரசு கொள்கை அளவில் முடிவு எடுத்துள்ளது. இந்த முடிவு விரைவில் நடைமுறைக்கு வரும் என்று எதிர்பார்க்கலாம். இந்த நிறுவனத்தின் கடன்களைப் பெறும் சிறு தொழில் உரிமையாளர்கள் பத்து வருடங்களில் கடன்களைத் திருப்பிக் கொடுக்கும் வகையிலே ஏற்பாடுகள் செய்யப்படும் என்று அறிகிறோம். இது தவிர நமது ஸ்டேட் பாங்க், சிறு தொழில்களுக்காகக் கச்சாப் பொருள்கள் வாங்குவதற்கும் இயந்திரங்கள் வாங்குவதற்கும்அன்றாடத்தேவைகளைப் பூர்த்தி செய்யவும் நிதி உதவி செய்ய வெகுவாக முன் வந்துள்ளது.

நம் அரசு, சிறுதொழில்கள் பதிவு செய்யப்படுதல் இது வரை இருந்த கால தாமதத்தை வெகுவாகக் குறைக்கநடவடிக்கை எடுத்துள்ளது. அதோடு மட்டுமல்ல, சிறுதொழில்களுக்கான கச்சாப்பொருள்களுக்காக மத்திய அரசின் லைசென்ஸ் அதிகாரிகளிடம் தேவையான சிபாரிசு செய்து அவைகள் கிடைக்க ஆவனசெய்து வருகிறது. சுருங்கக் கூறவேண்டுமானால், நமது மாநில அரசு சிறு தொழில் வளர்ச்சிக்குத் தேவையான எல்லா முயற்சிகளையும் செய்து வருகிறது.

தமிழகத்தில் பெரும்பான்மை தொழில்கள் இயந்திர சாதனங்களை அடிப்படையாகக்கொண்டு உற்பத்தியில் ஈடுபடும் தொழில்கள். ஏற்பட்ட தொழில் தேக்கத்




தில் இந்த எஞ்சினியரிங் தொழில்கள் எல்லாம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன. ஆகவே நமது அரசு எல்லாத்துறையிலும்ஒருமுகமான வளர்ச்சி காண எண்ணி, ரசாயனம், பிளாஸ்டிக், ரேடியோ சம்பந்தமான தொழில்கள் தன் இயங்கு (Instrumentation Industries) இயந்திரங்கள் கொண்ட தொழில்கள் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. ரேடியோக்களுக்கும், டெலிவிஷன்களுக்கும் தேவையான உப பொருள்களை உற்பத்தி செய்வதில் நமதுஅரசு முக்கியத்துவம் காட்டி அதற்காக ஒரு தொழிற் பேட்டை அடையாறில் தோற்றுவிக்க முடிவெடுத்துள்ளது. ரசாயனப்பொருட்கள் சம்பந்தமான தொழில்களுக்கு ஊக்கமூட்டுவதற்காக நமது அரசு சமீபத்தில் ஒரு கருத்தரங்கை நடத்தியது.

இது சம்பந்தமான தொழில்களுக்கும் சாயம், சோப்பு சம்பந்தமான பல தொழில்களுக்கும் இந்த மனுக்கள் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் அறிகிறோம். இந்த மனுக்கள்மீது உத்தரவு பெற்றுக் கூடிய சீக்கிரம் இத் தொழில்கள் உருப்பெறும் என்று நம்புகிறோம். நமது தமிழக அரசு பொதுவாகச் சிறு தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமூட்டுவதற்கு ஒரு சிறு தொழில்(S.I.B.) வாரியத்தினையே அண்மையில் அமைத்திருக்கிறது. இந்த குழு அடிக்கடி சிறு தொழில் வளர்ச்சியைப் பரிசீலனை செய்வதோடு, அந்த வளர்ச்சிக்கு இடையூறாக உள்ளவற்றை நிவர்த்திக்கவும் ஆவன செய்ய முற்பட்டுள்ளது.

மாவட்ட அளவிலும், மாவட்டஅதிகாரிகள் தலைமையில் சிறு தொழில் வளர்ச்சிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. சிறு தொழில் ஆரம்பிப்பதற்கான நிதி உதவி, சர்க்கார் பதிவு, பஞ்சாயத்து அனுமதி, மின்சார விநியோகம் ஆகியவற்றில்புதிய மனுதாரர்களுக்குத் தொல்லை ஏதும் ஏற்படாமல் இந்த மாவட்டக் குழு கவனிக்கும், என்று எதிர்பார்க்கலாம். தற்போது ஏற்பட்டுள்ள நல்ல வாய்ப்புக்களை உபயோகித்து மிக வெற்றிகரமாக வளர்ந்து வரும் விவசாயத் துறையின் பொருளாதாரத்தோடு இணைத்து ஒரு பலம் பொருந்திய தொழில்துறை வளர்ச்சியை உண்டாக்குவது சிறு தொழில் அதிபர்களுக்குள்ள முழு முதற் கடமையாகும். வளர்ந்து வரும் நம் தமிழகத் தொழில் துறையிலே மணலியில் எண்ணைசுத்திகரிப்பு ஆலையும்நமது மாநிலத்தில் தொழில் வானத்திலே விடி வெள்ளியாகப் பளிச்சிட்டுவரும் சேலம் இரும்பாலையும் சிறு தொழில் வளர்ச்சிக்கும் மிக பெரிய வாய்ப்புகளையும் சாத்தியக் கூறுகளையும் உண்டாக்கும் என்பதில் ஐயமில்லை. இவற்றை உபயோகித்துத் தொழில் வளர்ச்சிக்காக ஆவன செய்வது நமது சிறு தொழில் அதிபர்களின் கடமையாகும். தமிழகத்தின் தொழில் நுணுக்க ஞானமும், அதன் தொழிலாளர்களின் அறிவு விலாசமும் எல்லாரும் அறிந்ததே.

நமது மாநில அரசினர் தமிழகத்தின் ஏழ்மைக்கும் பின் தங்கிய பொருளாதார நிலைக்கும் தீர்வு காணச் சிறு தொழில்வளர்ச்சியை ஓர் முக்கிய முயற்சியாக எடுத்து ஆவன செய்கிறார்கள், என்ற நம்பிக்கையைச் சிறு தொழில் அங்கங்களின் சார்பாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்.

—திரு எம். எஸ். பார்த்தசாரதி.


இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்பு
சிறு சேமிப்பு
நாட்டுக்கும் வீட்டுக்கும் நலந்தரும் திட்டம்
காற்றுள்ள போதே தூற்ற வேண்டும்
காசுள்ள போதே சேர்க்க வேண்டும் அல்லவா!
இன்றே உங்கள் அருகிலுள்ள அஞ்சலகத்துடன் தொடர்பு கொள்க.
இயக்குநர்: சிறுசேமிப்பு நிறுவனம் சென்னை-9.

# பட்டமளிப்பு மண்டபத்தில் பரிசளிப்பு விழா

**வ**ங்கக் கடலருகேயமைந்த வனப்பு மிக்க சென்னைப் பல்கலைக் கழக நூற்றுண்டு விழாப் பட்டமளிப்பு மண்டபத்தில் 1970-ம் ஆண்டு நவம்பர் 21-ம் நாள் மாலை இந்தியத் திரைப்படக் கலைஞர்கள் குழுமியிருந்தனர். இந்திய அரசு நடத்தும் 17-வது தேசியத் திரைப்படப் பரிசளிப்பு விழா, டில்லி நகருக்கு வெளியில் இரண்டாவது முறையாகச், சென்னையில் முதன் முறையாக எழிலும் ஏற்றமும் நிறைந்த வகையில் நிகழ்ந்தது.

திரைப் படத் தயாரிப்பில் முன்னணியில்திகழ்வது தமிழகம். பல ஆண்டுக் காலமாகத் திரைப் பட வுலகில் தொடர்பு கொண்டு பல திரைப்படங்களை எழுதித் தயாரித்துப் புகழ் பெற்றவர் தமிழ் நாட்டு முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள். கலைக் கோயிலாம் தமிழகத்தின் தலைநகரில் கலையுலகில் பெருமை பெற்ற கலைஞர், இந்திய அரசு தேர்ந்தெடுத்த சிறந்த திரைப் படங்களுக்கும் கலைஞர்களுக்கும் பரிசளித்த காட்சியின் மாட்சி மிகச் சிறப்பாக அமைந்தது.

மத்திய செய்தி-ஒலி பரப்பு அமைச்சர் சத்திய நாராயண சின்கா தலைமையேற்றுக் கூறியதாவது :—

''திரைப் படத் தயாரிப்பில் அதிக அளவில் நாம் படங்களைத் தயாரித்த போதிலும் போதுமான அளவு முன்னேற்றம் அடையவில்லை. நமது திரைப் படங்கள், மக்களின் வாழ்க்கை முறைகளையும் அவர்களின் தோல்விகளையும் சாதனைகளையும் துயரங்களையும் சிக்கல்களையும்உண்மையாகப் படம் பிடித்துக் காட்டுவதாய் அமைய வேண்டும்.''

பின்னர் தமிழ் நாடு முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள், பரிசளிப்பதற்கு முன்னர் சீரிய கருத்துரையாற்றினர்.

''இந்த ஆண்டுப் பரிசளிப்பு விழா, கலைகளில் சிறந்த சென்னையில் நிகழ்வது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். கலை உலகத்தோடு எனக்குள்ள தொடர்பு குறித்து நீங்கள் அறிவீர்கள். வாழ்க்கை நிகழ்ச்சிகளைச் சீரிய முறையில் சித்தரிக்கும் திரைப் படங்களை ரசிப்பதில் என்றுமே நான் தவறியதில்லை.

எந்தத் துறையானாலும் புதுமையான சோதனை முறைகளைப் புகுத்துவது அவசியமானது. திரைப் படத் துறையிலும் புதுமைகளைப் புகுத்திச் சிறந்த படங்களைத் தயாரித்து வெளியிட வேண்டும். கிராமப்புற மக்களுக்கு அவர்கள் எது போன்ற படங்களை விரும்புகின்றனர் என்பதை அறிந்து அதற்கு ஏற்பப் படங்களைத் தயாரிக்கலாம். கிராமப்புறங்களில் உள்ள மக்கள் அதிக அளவில் சினிமா பார்க்க விரும்பினாலும் அங்கெல்லாம் போதுமான அளவில் சினிமாக் கொட்டகைகள் இல்லை. அதைத் தீர்க்கத் 'திரைப்பட அரங்குகள் நிதி நிறுவனம்' ஒன்றை அமைக்க இருக்கிறோம். இந்த நிறுவனம் முதலில் கிராமப் புறங்களில் சினிமாக்கொட்டகைகளைக் கட்ட நிதி உதவும். பிறகு, குறைந்த செலவில் திரைப் படம் தயாரிப்பவர்களுக்கு நிதி உதவும். '' இவ்வாறு குறிப்பிட்டுப் பரிசு பெறுபவர்களை வாழ்த்தி உரையை முடித்துப் பின்னர் பரிசுகளை வழங்கினர்.

மத்திய அரசின் ராஜாங்க அமைச்சர் குஜ்ரால் இவ் விழாவில் கலந்து கொண்டு, திரைப்பட வளர்ச்சிக்குத் தமிழக அரசு ஆற்றி வரும் உதவிகளைப் பாராட்டிப் பேசினர்.

1969-ம் ஆண்டுக்கான பரிசுகள் கீழ்க்கண்ட திரைப் படங்களுக்கு வழங்கப்பட்டன.

சிறந்த படம்—புவன்ஷோமே (இந்தி)

2-வது சிறந்த படம்—தீபராத் திரிர் கப்யா—(வங்காளி).

வட்டாரப் பரிசுபெற்றபடங்கள்:

தமிழ்—இருகோடுகள்.
மலையாளம்—அடிமைகள்.
கன்னடம்—கஜ்ஜபூஜா.
தெலுங்கு—ஆதர்சகுடும்பம்.

பரிசு பெற்ற கலைஞர்கள் :—

சிறந்த நடிகர்—உத்பல் தத் (இந்திப் படத்தில் நடித்தவர்)

சிறந்த நடிகை—மாதவி முகர்ஜி (வங்காளப்படத்தில் நடித்தவர்).

சிறந்த பின்னணிப் பாடகர்—எஸ். டி. பர்மன். (ஆராதனா இந்திப்படம்)

சிறந்த பின்னணிப் பாடகி—கே.பி. சுந்தராம்பாள். (துணைவன்).

மேலும், திரு. ஜெமினி கணேசன் சௌகார் ஜானகி உள்ளிட்ட சிறந்த நடிகர்களுக்கும் நடிகைகளுக்கும் திரைக் கதை அமைப்பாளருக்கும் ஒளிப் பதிவாளருக்கும் இந்திய அரசின் சார்பில் தமிழக முதல்வர் பரிசுகளை வழங்கினர்.

இறுதியில் நடன நிகழ்ச்சியுடன் விழா முடிவுற்றது.




இந்திய மாநிலங்களிலேயே அனைத்து இந்தியாவுக்கும் வழி காட்டியாகத் திகழும் மாநிலம் எது என்று கேட்டால் நாம் நெஞ்சுயர்த்திச் சொல்லலாம்—

'' தமிழ்நாடு ''—என்று.

* அரசியல் அமைதி
* பசுமைப் புரட்சி
* கல்வி வளர்ச்சி
* ஊரெங்கும் மின் இணைப்பு
* குடும்பநலத் திட்ட வெற்றி
* குடிநீர் வடிகால் வசதி
* தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பல்வேறு உதவிகள்.

இப்படி ஒவ்வொரு துறையிலும் புதிய புதிய சாதனைகளைப் பெருக்கி ஏனைய மாநிலங்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்கிறது தமிழ்நாடு!

இப்பொழுது நிலவிடும் நம் நாட்டின் பொதுவான நிலையில் நம் மாநிலத்தின் வளர்ச்சி மகத்தானதாக விளங்குகிறது.

மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களால் இந்தியாவின் பொருளாதாரச் செலவாணிப்போக்கில் ஒரு மேலான நிலை காணப்பட்டது. ஆனால், திட்டங்கள் தேங்கிய காரணத்தால் ஒரு மந்தமான, சாதாரணச் சூழ்நிலை உருவாகியதைநாட்டினர்அறிவர்.

இந்நிலையிலும் தமிழ் நாட்டின் வளர்ச்சி மிகச் சிறந்ததாக விளங்குகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

தமிழ்நாடு அரசின் நிருவாகத் திறனும், வகுக்கப்பட்டுள்ள கொள்கைகளும் நமக்கு இப்பெருமையைத் தேடித் தந்து வருகின்றன.

மற்ற மாநிலங்களின் வளர்ச்சியோடு நம் மாநிலத்தின் வளர்ச்சியை ஒப்பு நோக்கி, நம் வளர்ச்சியை எடுத்துக் காட்டுவதே இக்கட்டுரைத் தொடரின் நோக்கமாகும்.

எந்தச் செயலை எடுத்துக் கொண்டாலும் நம் மாநிலம் வழிகாட்டியாகத் திகழ்கிறது என்பதையும் இக்கட்டுரைத் தொடரில் காணலாம்.

எடுத்துக்காட்டாக உங்கள் கையில் உள்ள '' தமிழரசு ' இதழை எடுத்துக் கொள்ளுங்கள். துவக்கத்திலேயே விற்பனையாளர்கள் வாயிலாக 50,000 பிரதிகள் விற்பனையாகும் நிலைமையும், விரைவில் ஒரு லட்சம் பிரதிகளாக வளரக்கூடிய சூழ்நிலையும் அரசு ஏடுகளின் வரலாற்றில் கேள்விப்பட்டதுண்டா? இதுபோன்ற இதழ் வேறு எந்த மாநிலத்திலிருந்தாவது வெளி வருகிறதா?

அரசு ஏடு என்றால் புள்ளி விவரப் பட்டியல் மட்டுமே இருக்க வேண்டும். காணக் கவர்ச்சியற்றதாக அமைதல் வேண்டும் என்ற பழைய கோலத்தை மாற்றி, மற்ற மாநிலங்களுக்குத் ' தமிழரசு ' ஏடு வழிகாட்டியாகத் திகழ்கிறது.

மைய அரசு சார்பில் நடைபெறும் ஏடுகள்கூட அழகான வெள்ளைத் தாளில் அச்சடிக்கப்படுகின்றனவே தவிர மக்கள் விரும்பி வாங்கிப் படிக்குமளவுக்கு அவை வெளிவரவில்லை என்பதாக அந்தத் துறையில் உள்ளவர்களே சொல்லுகின்றனர்.

அரசு ஆற்றிடும் பணிகளை நாடறியச் செய்ய இதுபோன்ற ஏடுகள் தேவை என்பதை வலியுறுத்தி வெளி மாநிலத்திலிருந்து இங்கு வருகை தந்தவர்கள் நம் முயற்சியைப் பாராட்டியுள்ளனர்.

'தமிழரசு' இதழ் போன்ற இன்னொரு நன் முயற்சியே— தமிழக அரசின் செய்தித் தொகுப்புத் திரைப்படமான 'செய்திக் கதிர்' வெளியீடு.

மைய அரசு வெளியிடும் செய்திப் படம் தவிர மாநில அளவில் வேறு எந்த மாநிலமும் செய்திப்படம் தயாரிக்கவில்லை. ஆனால், தமிழ்நாடு அரசுதான் முதன் முதலாகச் செய்திப்படம்தயாரித்து வருகின்றது.

மைய அரசு செய்திப்படத்தில் தமிழகத்தைப் பற்றிய நிகழ்ச்சிகள், செய்திகள் தொடர்ந்து இடம்பெற வாய்ப்பில்லை; இடம் பெற்றாலும் இரண்டு நிமிடங்களுக்கு மேல் இடம் பெற முடிவதில்லை. பரந்த நிலப் பரப்பான இந்த நாட்டில் நடைபெறும் அத்தனை நிகழ்ச்சிகளையும் தொகுத்துக் காட்டுவது எளிதல்ல. எனவே தமிழக அரசின் சாதனைகளையும் நிறைவேற்றியுள்ள பணிகளையும் நிகழ்ச்சிகளையும் மக்களுக்கு அறிவிக்கும் கருவியாகச் 'செய்திக்கதிர்' அமைந்துள்ளது.

தமிழக அரசின் முதல் செய்தித் தொகுப்பு வெளியீட்டு விழாவில் இன்றைய முதல்வரும் அன்றைய பொதுப்பணி அமைச்சருமான கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் பேசுகையில் 'செய்தி' என்ற சொல்லுக்குக் கலை நயத்துடன் கூடிய புதிய விளக்கம் ஒன்றை அளித்தார்கள்.

அந்த விளக்கம் இதுதான் :

"செய்யப்படும் செயல்கள் அனைத்தும் தீ போல் பரவுவதால்தான் 'செய்தி' என்ற சொல் உண்டாகியிருக்கும்"

ஆமாம், உண்மையான செய்திகள் வேகமாக மக்களிடம் பரவ வேண்டியது அவசியம் அல்லவா?

அந்த வகையிலும் தமிழ்நாடு அனைத்து இந்தியாவுக்கும் வழிகாட்டியாகத் திகழ்கிறது.

இப்படிப்பட்ட செய்திகளை இங்கே தொகுத்துக் கோடிட்டு மட்டும் காட்டப்போவதில்லை.

அச்சாதனைகளின் விளைவுகளையும் விவரிக்கப் போகிறோம். அதன் வெற்றிகளையும் காட்டப் போகிறோம்.

முதன் முதலாக.. ........

நம்நாடு விவசாய நாடு என்று சொல்லிக் கொண்டு தொழில் நாடுகள்' என்று சொல்லப்படும் நாடுகளிலிருந்து உணவு தானியங்களை எதிர் பார்த்துக் கொண்டிருந்த களங்கத்தைக்—கசப்பான நிலையை— நம் மாநில அளவில் மாற்றி அமைத்து வெற்றி பெற்ற விவரத்தை விளக்கமாகக் காண்போம், அடுத்த இதழ்களில்!


# தமிழரசு

## முகவரி மாறுகிறது!

டிசம்பர் 1உ முதல்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

"தமிழரசு" அலுவலகம்,
அரசினர் தோட்டம்
சென்னை-2.





'வருவார் கொழுநர் எனத்திறந்தும்
வாரார் கொழுநர் என அடைத்தும்
திருகும் குடுமி விடியளவும்
தேயும் கபாடம் திறமினோ'

பரணிபாடிய செயங்கொண்டார் ஓர் உயிர்சித்திரத்தையே நம்முன் கொண்டுவந்து நிறுத்துகிறார் இக்கவிதையில். போருக்குச் சென்றிருக்கிறான் கணவன். போர் முடிந்து வீரர்கள் ஊர் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள். இரவு நேரம். அவளுக்குத் தூக்கம் வரவில்லை. எப்படி வரும்? வீதியில் சரக்........ சரக்....என்று சத்தம்—தன் கணவன்தான் வந்து விட்டானோ என்று கதவுக் குடுமியைப் பிடித்துத் திறக்கிறாள். அவன் இல்லை. வேறு யாரோ? கதவை மூடுகிறாள்! இபபடிக் கதவைத் திறப்பதும் மூடுவதுமாக விடியற்காலை வரை நடக்கிறது. அதனால் கதவின் குடுமியே தேய்ந்து விட்டதாம்! பிரிவினால் வாடும் உள்ளத்திற்குத்தான் அந்த இரகசியம், அந்த வேதனை புரியும். சின்னஞ்சிறு கவிதையில் ஒரு நாடகமே உருவாகி நம்முன்னால் நடிக்கப்படுகிறது......!

சென்னை மாநகரில் பாந்தியன் சாலையில் உள்ள கலை அரங்கத்தினைச் (National Art Gallery) சுற்றிப் பார்த்துக்கொண்டே வரும்பொழுது..... இப்படி ஒரு நாடகம் நம் முன்னேயே நடிக்கப்படுவது கண்டு திடுக்கிட்டோம். காதலனைப் பிரிந்து வாடும் பெண்! ''சீக்கிரம் திரும்பி வந்து விடுகிறேன்'' என்று சொல்லிப் போனவன் வரவில்லை. கள்ளங் கபடமற்ற வெள்ளை மனது படைத்தவள் அவள். கவலையே இன்னதென்று அறியாமல் துள்ளி விளையாடிக் கொண்டிருந்த இளமான். இன்று அந்த இளம் உள்ளத்திலே இனம் புரியாத ஒரு தவிப்பு; சொல்ல முடியாத ஓர் ஏக்கம். நினைவு, அலை பாய்ந்து கொண்டிருக்கிறது. இந்த உலக நினைவே மறந்து விட்ட ஓர் அதியற்புத நிலை; அத்தனையும் வடித்தெடுத்துப் பார்ப்போர் இதயத்தைக் கசக்கிப் பிழியும் சித்திரம் ஒன்றினைக் கண்டு பிரமித்து நின்று விட்டோம். காவியப் புகழ் பெற்ற சகுந்தலையின் ஓவியம் அது. ராஜா ரவிவர்மா தீட்டிய ஓவியம். கவிதையில் தான் நாடகத்தைத் தீட்ட முடியும் என்பதல்ல; ஓவியத்திலும் நாடகத்தைத் தீட்ட முடியும் என்பதற்கு அந்த ஓவியமே சான்று. இப்படிப்பட்ட அருமையான கலைச் செல்வங்கள், அழியாப் புகழ் பெற்ற ஓவியங்கள் பலவற்றை இந்தக் கலை அரங்கில் காணலாம். சென்னை வந்து மியூசியத்தைப் பார்ப்பவர்கள் அதைச் சார்ந்துள்ள இக்கலை அரங்கினைப் பார்க்காமல் போகக் கூடாது. அவ்வளவு அருமையான கலைச் செல்வங்களைத் தன்னகத்தே கொண்டு திகழ்கிறது இந்தக் கலை அரங்கம்!

இக்கலை அரங்கு, படைக்கப்பட்டிருக்கும் கட்டடமே காணுதற்கரிய கம்பீரமான கட்டடம் ஆகும். மொகலாயக் கட்டடக் கலையின் எழில் ஓவியமாகத் திகழ்கிறது. மிக விசாலமான படிக்கட்டுகளிலே ஏறி உள்ளே சென்றால்...... அரியதொரு கலைக் கூடத்தினுள் நுழைகின்ற உணர்வு நம்மையறியாமலேயே



ஏற்படுகிறது. பச்சைப் பசேலென்று......நிழல் தரும் பெரிய மரங்கள்.. மரகதப்படுதா விரித்தாற் போன்ற பசும் புல்வெளி.... உள்ளத்தைச் சில்லரிக்கும் இளங்காற்று இன்பகீதம் இசைக்க, அமைதியான சூழ் நிலையில்.... அரியதொரு கலைப் பூங்காவாகத் திகழ்கிறது இக் கலைக்கூடம்.

ஓவிய மன்னன் இராஜா ரவிவர்மாவின் அழியாப் புகழ் பெற்ற அமர ஓவியங்கள் பல, வண்ண வண்ண நிறங்களில் நம் கண்ணையும் கருத்தையும் கவர்ந்து நிற்கின்றன.

துஷ்யந்தனை நினைத்து ஏங்கும் சகுந்தலையின் ஓவியம் ஓர் அமர காவியம். 'தோள் கண்டார் தோளே கண்டார்' என்ற கதை தான். அந்த ஓவியத்தை விட்டு அப்படி இப்படி நகர முடியாது! விட்டுச் செல்ல மனம் வராது. தூரிகை எடுத்து அந்த ஓவிய மன்னன் எப்படித்தான் இதை வரைந்தானோ? அவன் தூரிகையிலிருந்து எழுந்த கோடுகள்.. நம் இதய நாடிகளையே வருடி விடுகின்றன. அந்த ஓவியங்களைப் பார்த்துக் கொண்டே இருக்கும் பொழுது!.... நம் நினைவெல்லாம் எங்கோ ஓடி விடுகிறது. பல நூற்றாண்டுகளுக்கு முன்னால் ரோமாபுரியின் சிறப்புமிக்க உலகப் புகழ் பெற்ற ஓவியர்கள் லியனார்டோவின்ஸி.. மைக்கேல் ஏஞ்சலோ .... தங்களுடைய கைவண்ணத்தால், அழியாப் புகழை ஈட்டிக் கொண்ட ஈடு இணையற்ற அக்கலைஞர்களின் நினைவு, இராஜா ரவிவர்மாவின் ஓவியங்களைக் காணும்போது ஏற்படாமல் இல்லை. ரோமாபுரியில் உள்ள விமானநிலையத்திற்கே லியனார்டோ வின்ஸி விமான நிலையம் என்று பெயர் சூட்டப்பட்டுத் திகழ்வதும் நம் நினைவுக்கு வராமலில்லை.

காதல்பிரிவால்வாடும் காரிகையின் ஓவியம் மட்டுமல்லாமல்..அன்புக் குழந்தையை அரவணைக்கும் தாய் ....சீவி முடித்துச் சிங்காரிக்கும்எழில் மங்கை.. இப்படி எத்தனை எத்தனையோ உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் உயிரோவியங்கள் பலவும் உள்ளன.



ரவிவர்மா தீட்டிய சித்திரம்.

அதைவிட்டு அடுத்த பிரிவுக்குள் நுழைந்தால், இந்திய ஓவியக் கலையை வரலாற்றுப் பின்னணியுடன் நாம் நுகர முடிகிறது. ஓவியக் கலையின் சீரும் சிறப்பும் முகலாயர்கள் காலத்தில் உச்ச நிலையில் இருந்தன. அவற்றை வடித்தெடுத்துக் காட்டும் அற்புத ஓவியங்கள் பலவற்றை நாம் காண்கிறோம். இதயத்தோடு இரகசியம் பேசும் இரசபுத்திரக் காலத்து ஓவியங்கள், தஞ்சை மராட்டிய மன்னர் காலத்து ஓவியங்கள், முழுமலர்ச்சி பெற்றுத் திகழ்ந்த தக்கணத்து ஓவியங்கள் எல்லாமே இங்கே நம்மிடம் பேசாமல் பேசிக்கொண்டிருக்கின்றன.



ராய்-சௌத்திரியின் கைவண்ணத்தால் உருவான சிலை


ராய் சௌத்திரி—இந்தப் பெயர் ஓவிய உலகில் தனி இடம் பிடித்துக் கொண்டு விட்ட பெயராகும். சென்னை ஓவிய, சிற்பக்கல்லூரியின் முதல்வராகப் பலகாலம் பணியாற்றிய திரு ராய் சௌத்திரியின் கைவண்ணம் பெற்றுத்திகழும் இருசிலைகள் இங்கே வைக்கப்பட்டுள்ளன. ''வறுமையின் கொடுமை'' என்ற தலைப்பிட்ட சிலையின் முன்னால் நிற்கும்பொழுது நம்மையறியாமலேயே கண்களில் நீர்பொங்குகிறது.


ஓவியக் கலைபற்றிப் பழம் பெரும் நூலான தொல்காப்பியம் பேசுகிறது. நாட்டை ஆண்ட மன்னர்களே சிற்பக் கலையில், ஓவியக் கலையில் வல்லவர்களாக விளங்கினர்கள். அந்தச் சங்கிலித் தொடர் அறுந்துபடவில்லை. மாறாக, மேலும் பொலிவு பெற்றுத் திகழ்கிறது. இந்த உண்மையைத்தான் கூறாமல் கூறுகிறது இந்த ஓவியக் கலையரங்கம்!

ஆசிரியர், வெளியிடுபவர்: செய்தித்துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு. அச்சிடுபவர்: அச்சக, எழுதுபொருள் இயக்குநர், அரசினர் அச்சகம், சென்னை-1.

# டெக்ஸ்டூல்

TEXTOOL





## டீசல் என்ஜின்கள்

## உழைப்பிற் சிறந்தவை

டெக்ஸ்டூல் என்ஜின்கள் அரசாங்கக் கடனுதவி கொண்டுவாங்க மத்தியசர்க்காராலும், மாகாணசர்க்கார்களாலும் அங்கீகாரம் பெற்றவை. இப்படி வாங்கப்பட்ட ஏராளமான டெக்ஸ்டூல் என்ஜின்கள், எல்லா மாகாணங்களிலும் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

ஜில்லாவாரியாக ஏஜண்டுகள்தேவை. நிபந்தனைகளுக்கு விண்ணப்பிக்கவும்

## டெக்ஸ்ட்டூல் கம்பெனி லிட்

### கோயமுத்தூர்-6

PHONE: 2131 & 2132 GRAMS: TEXTOOL

# எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே!

## வெற்றிகள் குவிந்தால் போதுமா?



- பசுமைப் புரட்சி பரவுகிறது!
- புகுமுக வகுப்புவரை இலவசக்கல்வி!
- தொழில்துறையில் புதிய, புதியமுயற்சிகள்!
- சட்டத்தின் துணையோடு ஏழை, எளிய மக்களுக்கு நிலப்பட்டா!
- வீட்டுமனைப் பட்டா!
- தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு தனிச்சலுகைகள்!
- எல்லா ஊர்களுக்கும் குடிநீர், வடிகால் திட்டங்கள்!

அரசு
ஆடவர் ஆரணங்கு
பொறுப்பை உணர்த்தும் சிவப்பு முக்கோணம்.


சாதனைப் பட்டியல் இப்படி வெற்றிகளைக் குவித்தாலும் முழுமையான பயனை நாம் நுகரமுடிகிறதா?



நாள்தோறும் நாட்டுக்கும், வீட்டுக்கும் புதிய பிரச்னைகளை உருவாக்குவது, மக்கள்தொகைப் பெருக்கம்தானே!



## அதைக் கட்டுப்படுத்த வேண்டாமா?



**அடுத்த குழந்தை இப்பொழுது வேண்டாம்**
**இரண்டுக்குமேல் எப்பொழுதும் வேண்டாம்.**

வெளியீடு: இயக்குநர், சுகாதாரம், குடும்பநலத்துறை தமிழ்நாடு அரசு.

முத்து